Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 40 | விலை - 40 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :61 தை 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 26 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி




### யாழ்ப்பாணத்தில் தமிழர் மரபை பறைசாற்றும்

# சிவபூமி அருங்காட்சியகம் நேற்று கோலாகலத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 26

தமிழர்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் பறைசாற்றும் "சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம்" யாழ்ப்பாணம், நாவற்குழியில் நேற்று மாலை கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி, செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இந்த நிகழ்வு தமிழர் பாரம்பரியத்துடன் நடைபெற்றது. கோமாதா வழிபாடு, விநாயகர் வழிபாட்டின் பின்னர் அரும்பொருள் காட்சியகத்தின் பெயர் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. 37 ▶



## மனைவியை கொன்றுவிட்டு கணவர் தற்கொலை முயற்சி

### கிளிநொச்சியில் பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜன.26

கிளிநொச்சி, பிரமந்தனாறில் நேற்று அதிகாலை பெண் ஒருவர் கணவரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். கணவரும் தன்னைத் தானே கத்தியால் குத்தி ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவரின் 37 ▶

## பஸ் - டிப்பர் விபத்து 11 பேருக்குக் காயம்

யாழ்ப்பாணம், 26

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டையில் நேற்றுப் பிற்பகல் நடந்த விபத்தில் 11 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றும், டிப்பர் வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. பரந்தன் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கித் தனியார் பேருந்தும், 37 ▶

## ரஞ்சன் என்றால் பயம்

கொழும்பு, ஜன.26

கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்திக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தோ அல்லது 37 ▶

## ஒரு இரவில் 3 வீடுகளில் திருடர்கள் கைவரிசை!

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி, முகமாலையில் ஒரே இரவில் 3 வீடுகளில் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். இந்தத் 37 ▶

## 70ஆவது இந்தியக் குடியரசு தின நிகழ்வு இன்று யாழில்

யாழ்ப்பாணம், ஜன.26

இந்தியாவின் 70ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு யாழ். துணைத் தூதரகம் இந்தியக் கலாசார 37 ▶






# சிவபூமி அருங்காட்சியகத்தை மாணவரும் பார்க்க வேண்டும்

## அதற்கான ஏற்பாடுகளைச் செய்வேன் என்று சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

சிவபூமி அரும் பொருட்காட்சியகத்தைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பாடசாலை மாணவர்களுக்குப் பயனுள்ளதாக உருவாக்கப்பட்டுள்ள அரும்பொருட் காட்சியகத்தை மாணவர்களும் பார்ப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருவேன் என்று சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகனுக்கு உறுதியளித்தார்.



ஈழத் தமிழர்களின் வரலாற்றையும் பண்பாடு, பாரம்பரியம், வாழ்வியல் என அனைத்து அம்சங்களையும் ஆவணப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ளது சிவபூமி அரும்பொருட் காட்சியகம். ஓவியங்கள், சிற்பங்கள், ஒளிப்படங்கள் என தமிழர்களது வாழ்வியலைப் பறைசாற்றி, இளம் சந்ததியினருக்கு அவற்றைக் கடத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்த அரும் பொருட்காட்சியகம் நேற்று மாலை 3. 30 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

அரும்பொருட்காட்சியத்தைப் பார்வையிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுக் காலை அங்கு சென்றார். நடைபெற்றுக் கொண்டிருந்த வேலைப்பாடுகளை அவதானித்து, அரும்பொருட்காட்சியகத்தின் தேவைகள் தொடர்பில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகனுடன் பேசினார். பாடசாலை மாணவர்களுக்கு இந்த அரும்பொருட் காட்சியகம் பெரும் பயனுள்ளதாக இருப்பதால், வசதி குறைந்த பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் அவற்றைப் பார்வையிடுவதற்கு தன்னாலான ஒழுங்குகளைச் செய்து தருவதாக ஆறு திருமுருகனுக்கு உறுதியளித்தார். எதிர்காலத்தில் அரும்பொருட் காட்சியகத்தின் தேவைகள் தொடர்பில் கவனமெடுத்து, அவற்றை நிறைவேற்றித் தர முயற்சிப்பேன் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

(எ-21)

# துண்டாட நினைத்தால் தொலைந்துபோவீர்கள்

## எச்சரிக்கிறார் அகிலவிராஜ்

கொழும்பு, ஜன.26



கட்சித் தலைமைத்துவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவிய முரண்பாடுகள் ஓரளவு முடிவுக்கு வந்துள்ளன. கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்து இருப்பார். அவர் தலைமையில் கட்சியைக் கொண்டு நடத்துவதே எமது தீர்மானம். ஐதேகவுக்குள்இருந்துகொண்டு கட்சியைத் துண்டாட யாரும் நினைத்தார்கள் என்றால் அவர்கள் முகவரியற்றுப்போவார்கள் என்பது உறுதி.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியைத் துண்டாட வெளியில் இருப்பவர்கள் சதித் திட்டங்களை வகுத்து வருகின்றார்கள். இந்தச் சதித்திட்டங்களுக்கு கட்சிக்குள் இருப்பவர்களும்துணை போகின்றார்கள்.

'தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும்' என்ற கோரிக்கையின் பெயரில் வகுக்கப்பட்ட சதி நடவடிக்கை எம்மால் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருப்பவர்கள் அனைவரும் எந்தச் சதி நடவடிக்கைகளுக்கும் துணைபோகாமல் கட்சியை வளர்க்க வேண்டும் என்பதே கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பமாகும் - என்றார்.

(எ-22)

# அமைச்சின் ஆலோசகராக தவராசா நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.26

கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சின் ஆலோசகராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான அமைச்சவை அங்கீகாரம் கடந்த 22ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். டக்ளஸ் தேவானந்தா கடந்த காலங்களில் அமைச்சராகச் செயற்பட்டபோது அவரின் ஆலோசகராக சி.தவராசா செயற்பட்டிருந்தார். இவர் ஈ.பி.டி.பி. கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாவார்.

(எ-105)

# ஊடகவியலாளர் சுகிர்தராஜனது 14ஆவது ஆண்டு நினைவேந்தல்

திருகோணமலை, ஜன.26



திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கொல்லப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 14ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றன.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள உயிர் நீர்த்த ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபியில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

"படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும்' என்னும் தொனிப்பொருளில் பல ஊடக அமைப்புகள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் ரீ.தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன், பிரதி மேயர் க.சத்தியசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், மாநகர சபை உறுப்பினர் இராஜேந்திரன், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் பெடி கமகே உள்ளிட்ட சகோதர இன ஊடகவியலாளர்கள், இலங்கைத்தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியினர், இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் செயலாளர் என். விஸ்ணு காந்தன் உட்பட அரசியல் பிரதிநிதி கள், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் திருவுருவப்படத்துக்கு மலர்மலை அணிவிக்கப்பட்டு, சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு, நினைவு உரைகளும் இடம்பெற்றன.

(எ-22)

# வெற்றி நிச்சயம் மொட்டே சின்னம்

## சமல் திட்டவட்டம்

கொழும்பு, ஜன.26

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எந்தத் தேர்தலிலும் சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியே மாபெரும் வெற்றி பெறும். 'தாமரை மொட்டு' சின்னத்தை எக்காரணம் கொண்டும் மாற்றவேமாட்டோம்.

இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் ஆட்சியை எந்தச் சக்தியாலும் கவிழ்க்கவே முடியாது. நாட்டு மக்களின் ஆணைக்கேற்ப எமது ஆட்சியைக் கொண்டு நடத்துவோம். அனைத்து இன மக்களினதும் மனங்களை வெல்லும் வகையில் எமது வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம்.

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்காமல் நாட்டை அதிநவீன முறையில் அபிவிருத்தி செய்வதே எமது இலக்கு. நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என இனிமேல் நடைபெறவுள்ள எந்தத் தேர்தலிலும் எமது கூட்டணிக் கட்சியே மாபெரும் வெற்றி பெறும்.

'தாமரை மொட்டு'த்தான் எங்கள் சின்னம். இது வெற்றியின் குறியீடு. இந்தச் சின்னத்தை எக்காரணம் கொண்டும் மாற்றவேமாட்டோம்.

ஊழல், மோசடி ஆட்சியை நடத்தியதால் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களால் தோற்கடிப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்று பிளவடைந்து காணப்படுகின்றது. இந்தக் கட்சி எமக்கு இனிமேல் சவால் அல்ல என்றார்.

(எ-22)

# 'நகரத்தை வாடகை'க்கு வாங்கும் பெற்றோர்கள்!

## வசந்தி அரசரட்ணம் விசனம்

*சாவகச்சேரி, ஜன. 26*

*பிள்ளைகளின் உயர் கல்வி நோக்கைக் கருத்தில் கொண்டு பெற்றோர் ஆரம்பப் பிரிவிலேயே நகரப் புறப் பாடசாலைகளில் இணைத்து விடுகின்றனர். அதனால் சொந்தப் பிரதேசத்தை கைவிட்டு நகரத்தில் அதிக வாடகை கொடுத்து வாழ்கின்றனர். இந்த நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதும் உள்ள பிரச்சினையாகும் இவ்வாறு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.*

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட நாதநர்த்தன நர்த்தனம் வர்ணம்மற்றும்விஷன்6சித்திரங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகர்ப்புறங்களில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் நகர்வதைத் தடுக்கும் நோக்கில் வருங்காலத்தில் பிரதேச ரீதியாகப் பல்கலைக்கழக அனுமதி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அது நடைமுறைக்கு வரும் வேளையில் பிரதேச பாடசாலைகளில் மாணவர்கள் இணையும் தொகை அதிகரிக்கும்.

பல்கலைக்கழக அனுமதி வழங்கும் போது பிரதேச பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் தேர்வு செய்யும் திட்டம் அரசினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் யாழ். பாடசாலையில் கற்று சித்தி பெற்றிருந்தாலும், பல்கலைக் கழகத்தில் அனுமதி பெறமுடியாத நிலை ஏற்படும்.

இதனைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் கல்வி உயர்வுக்குப் பெற்றோரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று வருகின்றமையால் அவர்களின் கல்வி அடைவு மட்டம் அதிகரிக்காது. பெற்றோர் சிறு வயது முதல் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை காட்டினால் சிறந்த கல்விமானாக வருவதுடன் நாட்டின் நற்பிரஜையாகவும் வரமுடியும் -என்றார். (க-9)

## வாழ்வாதார உதவிகள்



புதுக்குடியிருப்பு.ஜன.26

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மூன்று முன்னாள் போராளிகளுக்கு தலா ஒரு இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் ஏற்பாட்டில் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியில் இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கினர்.

இரண்டுமுன்னாள் பெண்போராளிகளின் குடும்பத்தின் வாழ்வாதாரத்துக்காக தையல் இயந்திரமும் மற்றும் ஒரு முன்னாள் போராளியின் வாழ்வாதாரத்துக்காக கல் அறுக்கும் இயந்திரமும் இதன்போது வழங்கப்பட்டன. (ஐ-19)

## நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.26

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்வினியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **வவுனியா மாவட்டத்தில்** அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## ஆண்டு விழா நிகழ்வு

யாழ்.விஷன் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலைநடத்தும் ஒன்பதாவது ஆண்டு விழாநிகழ்வுநாளைதிங்கட்கிழமை காலை 9.30 மணிக்குஅறநெறிப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.தலைவர் கந்தையா சசீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க் கட்சித்தலைவர்சின்னத்துரை தவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## சாவ. இந்து ஆரம்ப பாடசாலைக்கு 3 வெண்கலங்கள்






முல்லைத்தீவு,ஜன.26

கண்டி நாவலப்பிட்டி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வில் தேசிய மட்டத்தில் கலந்துகொண்ட சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை 3 வெண்கலப் பதக்கத்தை பெற்று சாதனை படைத்துள்ளது.

தரம் 3 பெண்கள் அணி, தரம் 4 பெண்கள் அணி மற்றும் தரம் 5 ஆண்கள் அணி ஆகியன வெண்கலப் பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளன என்று அதிபர் பொ.நடேசலிங்கம் தெரிவித்தார். (ஐ-159)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நர்ய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் நாளை திங்கட்கிழமை ஏற்றப்படவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை புதிய கடற்கரை தண்ணீர்த் தாங்கிச் சந்தியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை தண்ணீர் தாங்கி முதலாம் குறுக்குத்தெருவிலும், பிற்பகல 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தண்ணீர்த் தாங்கி 3ஆம் குறுக்குத் தெருவிலும் நடைபெறவுள்ளன. எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிமக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நடன அளிக்கையும் பயிற்சிப் பட்டறையும்

யாழ்ப்பாணம், ஜன.26

இந்தியக் கலைஞர்களது கதக், வீணைக் கலைஞர்களின் ஆற்றுகையும்,உள்ளூர் நடனக் கலைஞர்களின் கரையேற மறுக்கும் ஓடங்கள் கலை நிகழ்வும் நடைபெறவுள்ளன.

நடன அளிக்கை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் பயிற்சிப் பட்டறை நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் காலை 11.30 மணி வரை இராமநாதன் நுண்கலைப் பீடத்திலும் நடைபெறவுள்ளன.

நடனஅளிக்கை மற்றும் வீணை இசை என்பன நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ)

# ஆயுதப் போராட்டத்தை விரும்புகிறாரா விமல்?

## கேள்வி எழுப்புகிறார் சரவணபவன் எம்.பி.



சங்கானை, ஜன. 26

தெற்கின் ஒடுக்குமுறையும் இனவெறி அநியாயங்களும் தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்த வைத்தது என்பதையும் அதன் நீட்சியாக இந்த நாட்டில் பெரும் போர் வெடித்ததையும் பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிர் இழந்தமையும் தேசம் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டதையும் அமைச்சர் விமல் போன்றோர் நினைத்துப் பார்க்க மறந்துவிடுகின்றனர். இவர்கள் மீண்டும் இந்த நாட்டில் இனவாத ஒடுக்குமுறைகள் மூலம் ஓர் ஆயுதப் போராட்டம் எழுச்சிபெற வேண்டும் என்று விரும்புகின்றார்களா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைதிறனாய்வுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் பாடசாலை மைதானத்தில் இடம்பெறது. பாடசாலை அதிபர் இ. சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த விளையாட்டு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு விளையாட்டுநிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை யும் வழங்கினார்.

அவர் தனது பிரதம விருந்தினர் உரையில் தெரிவித்ததாவது:

தமிழ் பேசும் மக்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் ஒரு பகுதியில் தமிழுக்கு முதலிடம் கொடுத்து எழுதப்பட்ட பெயர்ப்பலகையை அகற்றியது தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பெரும் அவமானமாகவே கருதவேண்டியுள்ளது.

ஆனாலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அவமானத்தை விட இந்தத் தான்தோன்றித்தனமான சம்பவமானது இலங்கையின் அரசமைப்புக்கு இழைக்கப்பட்ட அவமானமாகவே கருத வேண்டியுள்ளது.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின் படி தமிழும் இலங்கையின் அரசகரும மொழிதான் அதேவேளையில் வடக்குக் கிழக்கில் அரச நிர்வாகங்கள் தமிழ் மொழியிலே நடத்தப்பட வேண்டும் என்பதும் பதிவுகள் தமிழிலே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அரசமைப்பு ரீதியிலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். ஒரு நிறுவனத்தின் பெயர்ப்பலகை அமைப்பது என்பது நிர்வாகத்துக்கும் மக்கள் தொடர்பாடலுக்கும் உட்பட்ட விடயம் என்பதனால் அது தமிழுக்கு முதன்மை கொடுத்து அமைக்கப்பட்டது அரசமைப்புக்கு ஏற்புடையதாகும்.

ஆனால் இனவாதத்தில் ஊறிப் போய் நஞ்சுகலந்த வார்த்தைகளை எந்நேரமும் கக்கிக் கொண்டிருக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச அரசமைப்பு மீறப்பட்டாலும் பரவாயில்லை தமிழ் மக்களை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டுள்ளார். இது தமிழ் மக்களுக்கு திட்டமிட்டு தீய நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட அவமானம் என்றே கருதவேண்டியுள்ளது.

1977 ஆம் ஆண்டில் சிறில் மத்தியூ இனவாதம் பேசி சிங்கள மக்களை இன வெறியூட்டி பெரும் இனக்கலவரத்தையும் ஊட்டி தமிழ் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தினார். இனக்கலவரத்தை கொண்டு நடத்துவதில் சிறில் மத்தியூவுடன் கைகோர்த்து நின்ற அத்துலத்முதலி தமிழ் மக்களுக்கு விரோதமான படுமோசமான பொருளாதார மொழி ரீதியிலான ஒடுக்குமுறைகளை மேற்கொண்டுதன் இனவாத முகத்தை வெளியே காட்டினார்.

காமினி திஸாநாயக்க மாதிரி அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் மணலாற்றில் காலம் காலமாக குடியிருந்த மக்களை 1984 ஆம் ஆண்டு வெளியேற்றி அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுவினார்.

ஆனால் இவர்கள் தங்கள் அநீதிகளுக்காக பொருத்தமான தண்டனைகளை பொருத்தமான நேரத்தில் பெற்றுக் கொண்டனர். அது மட்டுமல்ல இன்று அவர்கள் அரசியலில் நினைவுகூர எவருமில்லாத பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் - என்றார். (ஒ.5,21)



## விழிப்புணர்வு செயலமர்வு

மன்னார்,ஜன.26

மாவட்ட ரீதியில் செயற்படும் பெண்கள் அமைப்பு மற்றும் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்களுக்கு அரசியல் சமூகப் பொருளாதார கலாசார உரிமைகள் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு நடைபெற்றது.

இந்தச்செயலமர்வு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் கடந்த வியாழக்கி ழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் அண்மைக்கால அரசியல் சமூக பொருளாதார கலாசார ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாகவும், அரசியல் சமூக பொருளாதார கலாசார விடயங்களில் தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமைகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (ஐ-56)

## கற்றல் கருவிகள் கையளிப்பு

வவுனியா,ஜன.26

வறுமையில் உள்ள வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலய மாணவர்கள் 30 பேருக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

வி 3 பவுண்டேசன் ஊடாக ஆறுமுகத்தான் புதுக்குளத்தைச் சேர்ந்த் புலம்பெயர்ந்த உறவுகளால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், நன்கொடையாளர் இராசரட்ணம் இராகுலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)



## கல்வியை வளர்க்க பெரும் பாடுபட்டேன்!

### வாகரை நிகழ்வில் கருணா



மட்டக்களப்பு, ஜன. 26

நாங்கள் போராட்ட காலத்தில்கூட கல்விக்கான பல வேலைத் திட்டங்களை செய்தோம். கல்வியை வளர்ப்பதற்கு பாடுபட்டுள்ளேன் என்று தமிழர்

ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்தார்.

வாகரையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு பால்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ். துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் மேலதிக செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ரசிக்காந்தன், வாகரைப் பிரதேச பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், கட்சிப் பிரதிநிதி கள், உறுப்பினர்கள், எனப் பலர் கலந்து கொண்டனர். புணானை, வட்டவான், காயான்கேணி, மாங்கேணி, மதுரங்குளம், கிருமிச்சை, வாகரை, பால்சேனை, கதிரவெளி, ஆலங்குளம், கட்டுமுறிவு,

பனிச்சங்கேணி போன்ற பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. வைக்கப்பட்டது. (கு)

## மீனவர்களுக்கு உதவிகள்

இடைக்காடு,ஜன.26

இடைக்காடு அக்கரைப் பகுதியில் உள்ள 14 கடற்றொழிலாளர்களுக்கு 28 லட்சம் ரூபா பெறுமதியான கட்டுமரம், வலை உள்ளடங்கலானபொருள்கள் வழங்கப்பட்டன.

கோப்பாய் பிரதேச சர்வோதய தேசோதய சபையால் இந்த உதவிகள் கடந்த 5 ஆம் திகதி வழங்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா, சட்டத்தரணி மு.றெமிடியஸ், தொழிநுட்பக் கல்லூரி முன்னாள் அதிபர் இ.யோகராஜன், மாவட்டத் தலைவர் என். தனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-50)

# சிவபூமி அருங்காட்சியகத் திறப்புவிழாப் பதிவுகள்





















### மணமகள் தேவை

1974இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் திருவாதிரை 4ஆம் பாதம், கிரகபாவம் 9 உயர் தொழில்புரியும் மணமகனுக்கு ஆகக் குறைந்தது A/L படித்த 1980இற்கு பின் பிறந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது

தொடர்புகளுக்கு: 077 327 6500

### மணமகள் தேவை

1990இல் பிறந்த இந்து கௌரவ குடும்பம் அச்சுவினி நட்சத்திரம் பின்லாந்து (Findland) குடியுரிமை (PR) உள்ள மணமகனுக்கு படித்த தகுதியான மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 327 6500

### தேவை

கணக்கியலில் கணினி அறிவுடைய வேலையாள்கள் தேவை.

சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55, 57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### தேவை

யாழ் நகரில் இயங்கும் சித்த மருத்துவ நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு: 077 666 4674


# 2019 வாக்காளர் இடாப்பு தயாரிப்பு பணி நிறைவு

கொழும்பு, ஜன.26

*2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் தயாரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. அதை நாளை அல்லது நாளைமறுதினம் வர்த்தமானியில் பிரசுரிக்க எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.*

அவர் மேலும் தெரிவித்ததாவது 2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்றுவந்தன. தற்போது இந்தப் பணிகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தேர்தல் மாவட்டங்களிலும் வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கும் பணிகள் இறுதிப்படுத்தப்பட்டன. நாளை திங்கட்கிமை அல்லது செவ்வாய்க்கிழமை இதனை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை இம்முறை 1 கோடியே 63 இலட்சத்தை தாண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை விரைவில் வெளியிடப்படும். 2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரமே எதிர்வரும் பொதுத் தேர்தல் உட்பட 2020ஆம் ஆண்டின் அனைத்துத் தேர்தல்களும் இடம்பெறும். 2018ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பையும் காண்டில் 2019 இல 3 இலட்சம் பேர் மேலதிகமாக வாக்களிக்க தகுதிப்பெற்றுள்ளனர்-என்றார். (எ-24)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 . 11 . 1942



மறைவு
07 . 02 . 2019

திதி:
துதியை

கடந்த 07.02.2019 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் முருகர் அப்புத்துரை


அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை துதியை திதியில் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருப்பதி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர் வைகுந்தவாசன்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



தோற்றம் 24.12.1947
மறைவு 20.01.2020

"பயிற்றோலை"
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

அச்சுவேலி தெற்கு, விக்கினேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் வைகுந்தவாசன் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) கடந்த **(20.01.2020)** திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர்-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வசந்தமலர், சதானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(26.01.2020)** ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியா மெல்போண் நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரமானந்தம் வசந்தமலர் (சகோதரி)
கிருஷ்ணர் சதானந்தன் (சகோதரன்)

தொடர்புகளுக்கு: 077 266 4775


## கொரோனா தாக்கம்? இருவருக்கு சோதனை

கொழும்பு, ஜன.26

உலகை மிரட்டிவரும் கொரோனா வைரஸ் குறித்து இலங்கை விழிப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் இருவர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் சீனப் பெண்ணொருவர் உட்பட இருவர் அங்கொடை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சீனாவில் வசிக்கும் மூன்று இலங்கை மாணவர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்றும் அவர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. கொரோனா வைரஸால் இலங்கை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சுகாதார அமைச்சு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. (எ)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ் விசன், கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையின் ஒன்பதாவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் விசன் பொறுப்பாளர் கந்தையா சுந்திரன் தலைமையில் கொக்குவில் கிழக்கு, கோணாவளையில் உள்ள அறநெறிப்பாடசாலையில் நடக்கும் விழாவுக்கு முதன்மை விருந்திரான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ரி.தியாகமூர்த்தி, ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்காஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

## கிளிநொச்சி வர்த்தகரின் போராட்டம் கைவிடப்பட்டது

கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையால் அறவிடப்படும் ஆதன வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட வர்த்தகர் எழுத்து மூல உறுதிமொழி வழங்கப்பட்டதை அடுத்துத் தனது போராட்டத்தை நேற்று இரவு கைவிட்டார்.

கிளிநொச்சி பொலிஸாரின் தலையீட்டாலும், பிரதேச சபையின் உப தவிசாளரின் எழுத்து மூல கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதியை அடுத்தும் இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

கடிதத்தை கையளித்த உப தவிசாளர் நீர் ஆகாரம் வழங்கி வர்த்தகரின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். (எ-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.26

ஆரோக்கியமான வாழ்க்கை முறையும், நவீன கற்பித்தல் முறையும் என்னும் இலவசக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நடைபெறவுள்ளது.

அமசோன் கல்லூரியின் ஏற்பாட்டில் நடக்கும் இந்தக் கருத்தரங்கில் நோயின்றி எவ்வாறு வாழ்தல், நோய்களுக்கான அடிப்படைக் காரணங்கள், நோயிலிருந்து எவ்வாறு பாதுகாப்பைப் பெறுவது, திறமையான கற்பித்தல் முறைகள், உளவியலின் முக்கியத்துவம் என்பன போன்ற தலைப்புக்களில் கருத்துரைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால், கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்.

J10928 (16,17)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## Food Delivery to your door Akshathai / Nila

அக்ஷதை / நிலா உணவு வகைகளை வீடுகள் மற்றும் நிறுவனங் களுக்கு நேரடியாக விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**021 221 9946, 077 528 7097**


## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 07 . 1931

இறப்பு 24 . 01 . 2020

### திருமதி புவனேஸ்வரி சிவசுப்பிரமணியம்

இணுவில் தெற்கு, இணுவில் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சிவசுப்பிரமணியம் 24.01.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தம்பியப்பா சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, ராணி, இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருச்செல்வம் (சுவிஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், இரவிந்திரா (சுவிஸ்), உதயதரன் (பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருசினி (சுவிஸ்), சூரி (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), பவனிதன், கிருபரன், கீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விக்கினேஸ்வரா வீதி,**
**இணுவில் தெற்கு, இணுவில்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(CS/30804)(11,17) **077 717 4921**

## மரண அறிவித்தல்



### திருமதி இரத்தினபூபதி நடராசா

வேலாயுதம்பிள்ளை வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினபூபதி நடராசா 24.01.2020 இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி - சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், சுசிலாதேவி, சுகுணேந்திரன் (சுவிஸ்), சுஜாத்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மலிங்கம், ஈஸ்வரி (சுவிஸ்), சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரூபன், நிதர்சன், நிரோஜன், நிரஞ்சன், பிரணவன், சிரணவன், கிரிஜா, வித்தகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்ஷயாவின் அன்புப் பூட்டியும், சேனாதிராஜா, காலஞ்சென்றவர்களான இராசபூபதி, குகமூர்த்தி, காசிநாதன் மற்றும் குகனேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.01.2020) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலாயுதம்பிள்ளை வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.**

(J/11324) (11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**


## வாடகை

யாழ். நல்லூரில்
வீடு வாடகைக்கு உண்டு.

**075 396 8016**

## தேவை

தென்னந் தோட்டத்தை பராமரித்து நிர்வகிக்க கூடிய பண்ணை முகாமையாளர் ஒருவரும், ஆட்டுப்பண்ணையை பராமரிக்க கூடிய ஒருவரும் தேவை.

தொடர்புகளுக்கு: 076 316 5730

## விற்பனைக்கு

Honda MD - 90- V (2013), BER XXXX.
சணல் ஆடுகள் விற்பனைக்கு.

(CS/30755)(04,17)

**076 696 1853**

## பிரத்தியேக வகுப்பு

**தரம்: 09 -G.C.E (O/L)**

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனிப்பட்ட ரீதியாகவோ குழுக்களாக வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு:

**075 049 7577**

## சிங்கள பிரத்தியேக வகுப்பு

6,7,8,9 மாணவர்களுக்கான சிங்கள பிரத்தியேக வகுப்புக்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**071 867 1055**

## தேவை

மரக்கறி வகைகளை சீராக வெட்டி கழுவி சுத்தம் செய்து சமையலுக்கு வழங்கக் கூடிய தேர்ச்சி பெற்ற பணியாளர் தேவை.
நேரில் வரவும்.

அக்ஷதை - நிர்வாகம்

## உடனடி வேலைவாய்ப்பு
### Northern Group of Company

எமது நிறுவனத்தில் குறைந்தபட்சத் தகைமையுடன் ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.
வயது - 18 - 45

(CS/30815)(01,17)

021 7904574, 077 283 7638, 077 511 3914

## வேலையாள்கள் தேவை

கைத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற வேலையாள்கள் தேவை.

- காசாளர் - Computer bill system
- மொபைல் விற்பனையாளர்
- மொபைல் திருத்துநர்

(CS/30836)(11,17)

**076 708 5109**

## வேலையாள் தேவை

சுண்டுக்குளியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் சமையல் வேலைக்கும் வீட்டைச்சுத்தம் செய்வதற்குமான பெண் வேலையாள் தேவை.
வயது 25 - 35
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

**077 322 3075**

## வீடு காணி விற்பனைக்கு

வீடு காணி விற்பனைக்கு ஊர்காவற்றுறையில் வீடு அல்லது வியாபார ஸ்தாபனங்களுக்கு உகந்த 130 பரப்புக்காணிவீட்டுடன், 330 பரப்பு, 240 பரப்பு நெற் காணியும், கிணறு, மின்சாரம் உறுதியுடன்விற்பனைக்குண்டு. யாழ்நகரில் இருந்து 20 நிமிடமும், யாழ். சர்வதேச விமான நிலையத்திலிருந்து 35 நிமிட தூரத்திலும்.

071 919 5581 (ரவி) 077 350 8047

## உடன் தேவை

**கணினியில் தமிழ், ஆங்கில ரைப்பிங்** செய்யக் கூடிய **ஆண், பெண்** இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் **10000 - 25000** மற்றும் **(டியிற்றல்) போட்டோ கொப்பி** செய்யக் கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும்.
(மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்)

**077 952 2444**
(யாழ். பல்கலைக்கழகம் அருகில்)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் குறொஸ் றோட்டில் 2 நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 7 (ஏழு) பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. காணியை பார்வையிட்ட பின்பு விலை பேசி தீர்மானிக்கப்படும்.
தரகர் தேவையில்லை.

மேலதிக விபரங்களுக்கு :Whats app, Viber, IMO
077 607 8888 077 801 5156


## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், ஜன. 26

கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் திறன் வெளிப்பாட்டு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள் க.சிவனேசன், க.சுதர்சன், சி.புவனேஸ்வரன், சு.கோபிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-159)

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம் வதிரி, கரவெட்டி
## பகிரங்க ஏல விற்பனை

பின்வரும் கட்டப் பொருட்களான நிலை, கதவு, யன்னல்கள் 30.01.2020 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் பகிரங்க ஏல விற்பனை செய்யப் படவுள்ளன. ஏல விற்பனையில் கலந்துகொள்வோர் கேள்விப்பணமாக ரூபா 2000.00 இல்லக்காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும் வெற்றி பெறும் கேள்விதாரர்கள் ஏலத் தொகையை செலுத்துவதுடன் பொருட்களையும் ஏற்றிச் செல்லவேண்டும்.

1. 3 அடைப்பு லூவேசுடன் யன்னல்கள்
2. கண்ணாடி யன்னல்கள் 4 1/2 x 1 1/2
3. கதவு நிலைகள்
4. வெளிச்ச யன்னல்கள் 2 1/4 x 1 1/2
5. கதவுகள்
6. 4 x 3 தீராந்திகள்
7. பனை சிலாகைகள்
8. யன்னல் கண்ணாடி கதவுகள்
9. யன்னல் பிறேம் குத்துக்கால்கள்
10. கைமரங்கள்
11. 4x 1 1/2 மரப்பலகை யன்னல் கதவுகள்
12. மர நிலைகள்
13. கதவு சிறகுகள் 6 x 1 1/2

தலைவர்

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமைப் பணியகத்தில் முகாமைத்துவ அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றிய

### திருமதி சகுந்தலா சாமிநாதன்

அவர்கள் 25.01.2020 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் இராமநாதன்

திருநெல்வேலி கிழக்கு ஆடியபாத வீதியை பிறப்பிடமாகவும் முள்ளியவளை 3 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராமநாதன் கடந்த (24.01.2020) காலமாகி விட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சிவகாமிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோக மலரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நாகமணி சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் இராகவன், இராகுலன், வாருணி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் மகரிஷாவின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் 3 ஆம் வட்டாரம் முள்ளியவளையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக முள்ளியவளை கற்பூரபுல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வரலாறு முக்கியம்

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' மனித குல வரலாற்றில் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டே இருக்கும். புதிய விடயங்கள் வந்துவிட்டால் அப்படியே முன்னைய பயன்பாட்டுப் பொருள்களை குப்பையாக எண்ணி அவற்றை தூக்கி வீசிவிடுவதும் நமக்குப் புதிதல்ல.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ்' என்றும், 'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்' என்றும் அடிக்கடி மார்தட்டிக் கொள்கிறோமே தவிர அதற்கான வரலாற்றுச் சான்றுகளைத் தொலைத்து விட்டு, தலையைச் சொறிகிறோம்.

இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் என்போர் தமிழர்கள் என்பதும், அதன் பின்னரே விஜயன் தலைமையிலான குழுவின் வருகையோடு சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்தன என்பதும் உண்மையென நமக்குத் தெரிந்தாலும், அதனை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கும் ஆதாரங்கள் எதுவும் எம்மிடமில்லை. ஆனால், நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு வந்த விஜயனோடு தொடங்கிய சிங்கள இனத்தின் வரலாற்றை உறுதி செய்யுமளவுக்கு, தங்கள் தரப்பு ஆதாரங்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றில் பெரும்பாலானவை மகாவம்சத்தில் சொல்லப்பட்டவை உட்படப் புனையப்பட்டவை என்றபோதும், விஞ்ஞான ரீதியாக அவற்றை ஏற்கக் கூடியவாறு, தயாரித்திருக்கிறார்கள். இந்த ஆதாரப் புனைவுகளால் தான் பெரும்பான்மையினர், தமிழர்களின்பூர்வீகநிலப்பரப்புகளைத் தங்களுடையது என்று உரிமை கோருகிறார்கள். தாங்கள் படகில் வந்துவிட்டு, தமிழர்களை வந்தேறு குடிகள் என்கிறார்கள்.

இதற்கெல்லாம் முக்கிய காரணம், எங்களிடம் மரபார்ந்த இருப்பைச் சொல்லும் ஆதாரங்களைப் பேணும் பழக்கம் இல்லாமை தான். இப்போது கூட கண்முன்னால் பல தொன்மங்கள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. அத்தோடு பல தொன்மையான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுமுள்ளன. ஆனால் அவற்றையெல்லாம் இனியாவது பேணிப்பாதுகாப்போம் என்ற சிந்தனை கொஞ்சம் கூட எமக்குக் கிடையாது.

எமது இனத்தின் இந்த அக்கறையின்மையைப் பெரும்பான்மையினர், மிகச் சரியாகப் பயன்படுத்தி, இங்கிருக்கும் பல தொன்மையான பொக்கிஷங்களை, பழைய பொருள்களின் விலைக்கு வாங்கி, தங்களுடைய மரபைச் சொல்லும் ஆதாரங்களாக அவற்றைத் திரிபு படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையிலே, யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில், சிவபூமி அறக்கட்டளையின் அரும்பொருள் காட்சியகம் உருவாக்கப்பட்டு, நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்த விடயம், சமூகவியல் ரீதியாகவும், இனரீதியாகவும், வரலாற்றாய்வியல் ரீதியாகவும் மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். இனிமேல் இங்கிருக்கும் அரும்பொருள்களைத் தொன்மைங்களை இந்த அருங்காட்சியகத்தில் வைத்துப் பேணுகை செய்வதோடு, அவற்றை இங்கிருப்பவர்களுக்கும், வெளியிடங்களில் இருந்து வருவோருக்கும் காட்சிப்படுத்துவதனூடு, எங்களுக்கும் ஒரு நெடிய செழிப்பான வரலாறு இருந்ததை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லமுடியும். காலத்தின் தேவையறிந்து, இனத்தின் அலட்சியத்தைக் களைவதற்காக சிவபூமி அறக்கட்டளையும், அதன் அதன் தலைவர் ஆறு. திருமுருகனும் எடுத்துள்ள இந்த முயற்சி, ஒட்டுமொத்தத் தமிழினத்தாலும் கொண்டாடப்பட வேண்டிய விடயம்.

வெறுமனே அதனைவாழ்த்துவதோடு நின்றுவிடாமல், இந்த அருங்காட்சியகத்தை முழுதாகப் பயன்படுத்த வேண்டியதும் நம் அனைவரினதும் பொறுப்பாகும். இந்த அருங்காட்சியகம் வெறுமனே பழைய பொருள்களின் இருப்பிடமல்ல, நமது தொலைந்து போன வரலாற்றின் தொகுப்பு என்பதை எல்லோரும் மனதில் கொள்வது அதை விட முக்கியம்.

# கொரோனோ வைரஸ் இலங்கையில் இல்லை

### வந்தால் எதிர்கொள்ளத் தயார் சுகாதார அமைச்சர் கூறுகின்றார்



**கொழும்பு, ஜன. 26**

**உலகம் முழுதும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கொரோனோ வைரஸ் நோய்த் தொற்று நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி நாடாளுமன்றில் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதுபற்றிஎழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், அவர்மேலும்தெரிவித்ததாவது:

நோய்த் தொற்று நாட்டுக்குள் ஊடுருவாமல் இருப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் பணித்துள்ளனர்.

நாட்டுக்குவரும் விமானப் பயணிகளுக்கு இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக விமான நிலையத்திலுள்ள விசேட சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதற்காக விமான நிலை யத்தில்விசேடவைத்தியநிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கொரோனோ வைரஸ் நோய் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் நாட்டில் இருக்கின்றமை குறித்து இதுவரை எந்தவிதமான தகவல்களும் பதிவாகவில்லை.

கொரோனோ வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட சீனக் குழந்தையொன்று மருத்துவமனையில்சேர்க்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அந்தக் குழந்தை சாதாரண காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தமை பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது-. என்றார். (த)

# அதீத உத்திகளை கையாளுங்கள்!

### பொலிஸாருக்கு செயலர் பணிப்பு

கொழும்பு, ஜன. 26

திட்டமிட்ட குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த செயற்றிறன் மிக்க உத்திகளைக்கையாண்டுஅர்ப்பணிப்புடன் செயற்படுமாறு பொலிஸாரிடம் பாதுகாப்பு செயலாளரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன வேண்டுகோள்விடுத்துள்ளார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் பரவலாகக் காணப்படும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த பொலிஸார்சிறந்ததிட்டமிடல்மற்றும் கூட்டு முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

திட்டமிட்ட குழுக்களால் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத ஆக்கிரமிப்பு, சதுப்பு நிலங்களை நிரப்புதல், கப்பம்கோரல், தனியார் நிலங்களை பலவந்தமாகக்கையகப்படுத்தல், சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்செல்லல், போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியனவற்றில்ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன்சட்டத்தைமதிக்கும் சமுதாயம் மற்றும் பாதுகாப்பான தேசத்தை உருவாக்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்கும்திட்டமிட்ட அடிப்படையில்முன்னெடுக்கப்படும்சட்டவிரோதநடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு உதவி தேவைப்படும் பட்சத்தில் மேலதிகஒத்துழைப்புக்களைவழங்கும்வகையில்விசேடஅதிரடிப் படைமற்றும்முப்படையினரை ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொலிஸார் தமது நற்பெயரைப் பாதுகாக்கும் அதே வேளை மக்கள் எதிர்பார்க்கும் விதத்தில்நாட்டின்பாதுகாப்பை உறுதிசெய்து தமது கடமைகளைத் திறம்பட செய்ய வேண்டும். நீங்கள் செய்யும் வேலைகளை வைத்தே பொலிஸார் பற்றிய மக்களின் கருத்து அமையும்- என்றார். (த)

## டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

நாவாந்துறை மற்றும் வண்ணார்பண்ணை ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர்பிரிவில்உள்ள பாடசாலைகளில் டெங்கு தொடர்பான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள சகல பாடசாலைகளிலும் சுகாதாரப் பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த இருநாள்களாக பாடசாலைசுற்றாடல்சோதனை செய்யப்பட்டதோடுடெங்கு தொடர்பானவிழிப்புணர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன்பாடசாலை சுற்றாடல் சிரமதானம் மூலம்துப்புரவுசெய்யப்பட்டது. பாடசாலை சுற்றாடல்களை சுத்தமாக வைத்திருப்பது பாடசாலை சமூகத்தினரின் கடமையாகும்.

கடந்த ஆண்டில்டெங்கின் தாக்கம்கூடுதலாககாணப்பட்ட இந்தப் பிரதேசத்தில் தொடர்ந்தும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். (ஐ-17)

# சூரியகாந்தி

உதயன்

26.01.2020

ஞாயிறு சிறப்பம்சம்





ஒரு கோப்பை **தேநீரும்** ஓராயிரம் கதைகளும்!

பக்.13

பேமன்

எமனின் நிகழ்கால வாழிடம்

பக்.11





அலைவரிசைகளின் ஆபாசப் பெண்கள்!

பக்.14




# ஜெனிவா என்னும் பகடை!


சந்திரசேகர ஆசாத்


எதிர்வரும்மார்ச்மாதம்ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர்நடைபெறவுள்ளது. அதேவேளையில் ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதில்ஒன்றுசர்வதேச மட்டத்திலான விவகாரமாகவும் மற்றது உள்நாட்டு விவகாரமாகவும் உள்ளன. இருந்தபோதிலும் இவை இரண்டுமே ஒன்றில் ஒன்று தங்கியிருப்பனவாகவும் ஒன்றில் ஒன்று பாதிப்பை ஏற்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

இதற்கான காரணம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத் தொடரில் இலங்கைப் படையினரின் மனிதகுல விரோத நடவடிக்கைகள், போர்க்குற்றங்கள் என்பன தொடர்பாகத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமையும் அதற்கு இலங்கை சம்மதம் தெரிவித்து அனுசரணை வழங்கியமையும் அதை நிறைவேற்ற மீண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டமையும் தொடர்பான விடயங்கள் எதிர்வரும் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படவுள்ளன. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை எடுக்கும் நிலைப்பாடு இன்றைய ஆளும் தரப்பினருக்கு எதிர்வரும் தேர்தலில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். அதே வேளையில் 30/1 தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட இலங்கை அதிலிருந்து பின்வாங்கினால் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பாகச் சில மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும். அப்படியான நடவடிக்கைகள் உறுப்பு நாடுகள் மத்தியில் சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தலாம். எனவேதான் இந்தக் கூட்டத் தொடர் இரு தரப்பினருக்கும் கடந்த காலங்களைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது.

**பூதாகரமாகிய ஜெனிவா!**

இன்று ஆட்சியில் ஏறியிருக்கும் பொதுமக்கள் முன்னணியினர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தாங்கள் ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றப்போவதில்லை என மேடை மேடையாகச் சவால்விட்டனர். ஜெனிவாத் தீர்மானம் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசத்தின் அத்துமீறிய ஒரு தலையீடு எனவும் அது இலங்கையின் இறைமையை மீறும் ஒரு நடவடிக்கை எனவும் கூக்குரலிட்டனர். தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் ஜெனிவா தீர்மானத்தை கிழித்தெறியப் போவதாக மேடைகளில் முழங்கினார். அவர்கள் தேர்தல் மேடைகளில் முழங்கியது போன்று ஜெனிவாத் தீர்மானத்தை முழுமையாக நிராகரிப்பதோ அலட்சியப்படுத்துவதோ அவ்வளவு இலகுவான விடயமல்ல என்பதையும் அதன் காரணமாகப் பலவித அழுத்





தங்களுக்கு உள்ளாக வேண்டிவரும் என்பதையும் விரும்பத்தகாத விளைவுகளுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவோ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அறியாமலில்லை. ஆனால் தமிழர்கள், முஸ்லிம்களின் மீதான இனவெறி, இனவன்முறைகள் என்பவற்றையே அவர்கள் அரசியல் மூலதனமாகக் கையாளும் வழமை கொண்டவர்கள். அதன் மூலம் சிங்கள பௌத்த மக்களே மேலானவர்கள் எனவும் இது சிங்கள பௌத்த தேசம் எனவும் ஏனையவர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட வேண்டியவர்கள் எனச் சிங்கள மக்களை உணர்ச்சியூட்டி வாக்கு வேட்டையாடுபவர்கள். எனவே இன்றைய அரசு எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் 30/1 தீர்மானத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதோ அல்லது மேலுமொரு கால அவகாசத்தைக் கோருவதோ சாத்தியமில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ரஷ்ய, சீன, அமெரிக்கப் பிரநிதிகள் ஒரே நாளில் சில மணிநேர இடைவெளிகளில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அடுத்த ஓரிரு நாள்களில் இந்தியப் பாதுகாப்புச் செயலரும் இலங்கை விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி பிரதமர் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். ஜெனிவாக் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இப்படியான அடுத்தடுத்த விஜயங்களை வழமையானவையாகவோ சாதாரணமானவையாகவோ எடுத்துவிட முடியாது.



### ஆதரவும் எதிர்ப்பும்

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ஜேர். ஜி.லாரவ் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட பேச்சுக்களின்போது இலங்கையுடனான பொருளாதார, பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது பற்றிப் பேசப்பட்டது எனவும் அதேவேளையில் இலங்கைக்குச் சர்வதேச அரங்கில் சகல விதமான ஒத்துழைப்பையும் வழங்கப் போவதாகவும் வாக்குறுதியளித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளையில் சீன வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடனான பேச்சுக்களின்போது இலங்கையுடனான பொருளாதார பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இலங்கையில் சீன முதலீடுகளை அதிகரித்தல் என்பனவற்றை மேம்படுத்தல் தொடர்பாகப் பேசப்பட்டது எனவும் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் பிறநாடுகள் தலையிடுவதைச் சீனா ஒருபோதும் அனுமதியாதெனவும் வாக்குறுதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதாவது ஜெனிவாவில் இலங்கைக்குத் தோள்கொடுப்பதில் ரஷ்யாவும் சீனாவும் முழு மூச்சாக ஈடுபடும் என்பதே இவற்றின் அர்த்தமாகும். இன்னொருபுறம் ரஷ்ய, சீனப் பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்த அதேநாளில் அமெரிக்க தெற்கு மத்திய விவகார உதவி ராஜாங்கச் செயலர் அலீஸ்வெஸ்லி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கடிதத்துடன் சந்தித்துள்ளார். இந்த நிலைமைகளை நோக்கும்போது ஜெனிவா கூட்டத் தொடரில் வழமைபோன்று ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவும் அமெரிக்கா அங்கு இலங்கைக்கு எதிரான வகையில் அழுத்தங்களைக் கொடுக்கும் எனவும் ஒரு தோற்றப்பாடு வெளிப்படுகிறது.

### நகர்த்தல்களும் பின்னணியும்

ஆனால் தற்சமயம் இடம்பெறும் கூட்டத் தொடரில் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. அங்கு அவர்கள் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே. ஆனால் இவர்கள் உப குழுக்களின் அமர்வுகளில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை வலியுறுத்த முடியும். அதே வேளையில் அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறிவிட்ட நிலையில் அதற்கும் வாக்களிக்கும் உரிமை இல்லை. ஆனால் இரு தரப்பினருமே தங்களுக்கு ஆதரவான நாடுகளூடாகத் தங்கள் ஆதிக்கத்தை இறுதிச் சுற்று வாக்கெடுப்பின்போது பயன்படுத்துவார்கள் என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை.

இங்கு நாங்கள் உற்று நோக்க வேண்டிய முக்கிய விடயம் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இலங்கையுடன் நடத்திய பேச்சுகளில் பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் இலங்கையுடன் நெருக்கமான உறவைப் பேறுவதன் மூலமும் வலுப்படுத்துவதன் மூலமும் இலங்கை மீது தங்கள் பிடியைப் பலமாகத் தொடரும் நோக்கம் கொண்டுள்ளன. அவர்கள் இலங்கைக்கும் தங்களுக்குமான உறவை நெருக்கமாக்குவதன் மூலம் இலங்கையில் தங்கள் நலன்களைப் பாதுகாக்கும் வழிமுறையையே தெரிவு செய்துள்ளன. அப்படியான ஒரு நிலையை வலப்படுத்துவதற்கான ஆயுதமாகவே ஜெனிவா விவகாரத்தை பயன்படுத்துகின்றனர். அதேபோன்று அமெரிக்கா இலங்கையைத் தனது கட்டுக்கோப்பை விட்டு தூர விலகிவிடாமல் பார்ப்பதற்கு ஜெனிவா தீர்மானம் மூலம் அழுத்தம் கொடுக்கும் வழிமுறையைக் கையில் எடுத்துள்ளது. இலங்கையைப் பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பு என்ற பேரில் இராணுவ ரீதியாகவும் வல்லரசுகள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் ஒரு போட்டிக் களமாகவே ஜெனிவாத் தீர்மானம் பயன்படுத்தப்படுகிறது. இந்த மூன்று தரப்புகள் மத்தியில் இன்னொரு தரப்பு செயற்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

### பொதுநலத்துக்கு இடமில்லை!

இந்தப் பேச்சுகள் இடம்பெற்ற அடுத்தடுத்த நாள்களில் இந்தியத் தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேச்சுகளை நடத்தியுள்ளார். இதில் இரு நாடுகளுக்கிடையேயான இராணுவ ஒத்துழைப்பு சமுத்திரப் பாதுகாப்பு, கரையோரப் பாதுகாப்பு, இரு தரப்பு இராணுவங்களுக்கிடையே புரிந்துணர்வை உருவாக்கல் இலங்கை, மாலைதீவு சமுத்திர வலயம் தொடர்பான மீளாய்வு இராணுவத் தகவல்கள், தொழில்நுட்பம் தொடர்பான உதவிகள் என்பன தொடர்பாகப் பேசப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. மேலும் படைகளைப் ஆயுத ரீதியாகவும் பலப்படுத்த 5 கோடி டொலர் நிதியுதவியையும் இந்தியா வழங்கவுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக பூகோள ஒருங்கிணைப்பு மையம் உருவாக்குவது தொடர்பாகக் கடும் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. இந்தப் பேச்சுகளில் எடுத்தாளப்பட்ட விடயங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமானால் மஹிந்த, கோத்தாபய ஆகியோராலும் பௌத்த பிக்கு களாலும் சிங்கள மக்களின் தேசிய உணர்வை ஏனைய இனங்கள் மீதான வெறியாக மாற்றப்பயன்படுத்தப்படும். இலங்கையின் இறைமை முற்றாகவே காணாமல் போய்விடும்.

ஒருபுறம் பட்டுப்பாதைத்திட்டம் இன்னொருபுறம் இந்தோ - பசுபிக் உடன்படிக்கை என உலக வல்லரசுகளிடையான போட்டி வலுவடைந்து வரும் நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போர்க்குற்றங்கள் மனிதகுல விரோத நடவடிக்கைகள் என்பன பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதற்காகவே ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளின் விஜயங்கள் இடம்பெற்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படியாக எமது பிரச்சினை உலக பிராந்திய வல்லரசுகளால் எடுப்பார் கைப்பிள்ளையாகப் பயன்படுத்தப்பட, தமிழ் தலைமைகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் அமெரிக்காவும், இந்தியாவும் எங்கள் பிரச்சினை தொடர்பாக நியாயமான நிலைப்பாட்டை எடுக்கும் நிலை உருவாகியுள்ளதெனத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டி வருகின்றன. அமெரிக்காவோ, இந்தியாவோ எமது பிரச்சினையைத் தமது நலன்களுக்குச் சாதகமான முறையில் பயன்படுத்துவதற்கு அப்பால் ஓர் அங்குலம் கூட நகரப் போவதில்லை என்பது கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடம் மட்டுமல்ல. எதிர்காலத்திலும் கற்கவுள்ள முக்கிய பாடமும் கூட. ஆனால் இன்று ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர்கள் இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு அரசாங்கத்தைக் கைப்பற்றியதைப்போன்றே எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் அதே ஆயுதத்தைப் பிரயோகிப்பதைத் தவிர்க்கப் போவதில்லை. எனவே தமிழ் மக்கள் ஐக்கியப்பட்டு ஒருமித்த சக்தியாக குரலெழுப்புவது மட்டுமே எமது சாதாரணமான சூழலை தேசிய, சர்வதேச மட்டத்தில் உருவாக்கும் என்பதே ஒரேயொரு மார்க்கமாகும்.



# யேமன்

## எமனின் நிகழ்கால வாழிடம்

■ ஆர்.பிரகாஷ்

மத்திய கிழக்கில் நாள்தோறும் மனிதப் பேரவலங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றமை புதிதல்ல. கடந்த சில தசாப்தங்களாகவே குண்டு, குண்டுவெடிப்பு, தாக்குதல், கொலை, கடத்தல், கற்பழிப்பு, பொருளாதாரத் தடை போன்ற பிற்போக்கான சொற்பதங்கள் மத்திய கிழக்கில் கேட்டுக்கேட்டுப் புளித்துப் போனவைதான். எனினும் உள்ள சோகங்களில் உச்ச சோகமாக உள்ளது யேமனின் நிலை.

**குழந்தைகளும் குண்டுகளும்**



முஸ்லிம்களுக்குள் இரு இனக் குழுமங்கள் ஒன்றையொன்று இனச் சுத்திகரிப்புச் செய்யும் அளவுக்குப் பகையை வளர்த்து மனிதத்தை மறந்து நிற்கின்றன. ஒன்று ஷியா. இன்னொன்று சன்னி. யேமனும் இதற்கு விதிவிலக்கல்ல. யேமன் அதிபர் மன்சூர் சன்னிப் பிரிவைச் சேர்ந்தவர். அவருக்கு எதிராக ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி ஆயுதக் குழு போரிட்டு வருகிறது. மன்சூரைப் பதவியில் இருந்து அகற்ற வேண்டும், தலைநகர் சனாவில் கொடியேற்ற வேண்டும் இவைதாம் ஹவுத்தியின் நோக்கம். 2015ஆம் ஆண்டு முதல் இந்த இரு தரப்பு மோதல் வலுத்துள்ளது. யேமனுக்கு ஆதரவாக சவூதியின் தலைமையில் கூட்டுப்படை போரிட்டுக் கொண்டிருக்கின்றது. ஹவுத்தியும் தனித்தில்லை. அதற்கு ஈரானின் வெளிப்படை ஆதரவும் ஆயுத உதவிகளும் உள்ளன. இந்த உள்நாட்டுப் போரால் இதுவரை சுமார் 85 ஆயிரம் குழந்தைகள் இறந்துள்ளன. அவற்றில் பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டு இறந்தவை. சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மில்லியன் கணக்கானவர்கள் அகதிகளாக பரிதவிக்கின்றனர். இதைவிட சுமார் 50 லட்சம் குழந்தைகள் தற்போது பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று ஐ.நா எச்சரித்துள்ளது. போர், போரின் இலவச இணைப்புக்களான நோய்கள், பொருளாதாரப் பின்னடைவு, விவசாய வீழ்ச்சி இவை அனைத்தும் ஒருமிக்க இணைந்து யேமனில் தற்போது 'பஞ்சம்' என்றும் மிகப்பெரும் பேரழிவு எச்சரிக்கையை ஐ.நா எழுப்பக் காரணமாகியிருக்கின்றன. இப்படியே சென்றால் யேமனுக்கு குறிப்பாக யேமன் குழந்தைகளுக்கு எதிர்காலம் என்ற ஒன்று இருக்கப் போவதில்லை என்று எச்சரித்துள்ளது 'சேவ் த சில்றன்' அமைப்பு. ஆக, யேமனின் நிலைமை திவிரமானது. ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர அமைப்பு நிலைகொண்டிருந்த சிரியா, ஈராக் நாடுகளுக்கு நிகரான அழிவை அது எதிர்கொண்டுள்ளது. இதை 'இன்னும் தீவிர அழிவு' என்று விளித்தாலும் அதில் இரண்டாம் கருத்தில்லை. ஆச்சரியப்படுவதற்கும் எதுவும் இல்லை.



**யேமன் ஏன் இலக்கானது?**

யேமனின் துயரத்துக்குக் காரணம் மத்திய கிழக்கின் அதிகாரப் போட்டியும் அதற்கு உகந்த அதன் அமைவிடம் என்பதும் தவிர்க்க முடியாததாகின்றது. உள்நாட்டுப் போர் நீட்சி பெறுவதற்கும் இதுவேதான் முதல் முக்கிய காரணம்.

யேமன் சவூதிக்கு அருகில் அமைவு பெற்றுள்ளது. உலக அளவில் அதிக மசகு எண்ணெய்யை ஏற்றுமதி செய்யும் சவூதி ஈரானின் பரம எதிரி. சவூதிக்கு இன்னொரு அயல் நாடு ஈராக். ஈராக்குக்கு அருகில்தான் ஈரான் உள்ளது. ஆக, போர்ப்பதற்றம் ஏதும் ஏற்பட்டு ஈரான் சவூதியைத் தாக்க வேண்டுமாயின் ஈராக்கைத் தாண்டிதான் அதைச் செய்ய வேண்டும். இது சாத்தியமற்றது. இதனால் சவூதிக்கு அருகில் உள்ள யேமனில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த எண்ணிய ஈரான் யேமனுக்கு எதிராகவும் சவூதிக்கு எதிராகவும் ஹவுத்தியை வளர்த்தது.

தற்போது சவூதிக்கு எதிரான பெரும் பிடிமானமொன்று யேமனில் ஈரானுக்கு உள்ளது. இது ஈரானுக்குப் பெரும் பிடிமானம். சவூதியின் பெருமளவான எண்ணெய்க் குதங்கள் யேமனுக்கு அருகர்கத்தான் அமைந்துள்ளன. அதாவது ஹவுத்தியால் தாக்கக்கூடிய தூரத்தில் அவை உள்ளன. இதனால்தான் எந்த அச்சுறுத்தல் வந்தாலும் ஈரானை நோக்கி விரல் நீட்டுவதற்கு சவூதி தற்போதெல்லாம் தயங்குகின்றது.

அண்மையில் ஈரானைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டிருந்த போது, ஈரானில் இருந்து எந்தநாடும் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்யக் கூடாது என்று பகிரங்க மிரட்டல் விடுத்திருந்தது. இதற்குப் பதிலடியாக சவூதியில் மிகப்பெரும் எண்ணெய் கிணறுகள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஈரானில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள் ஹவுத்தியால் ஏவப்பட்டமை பின்பு ஆய்வுகள் மூலம் தெரிய வந்தது. இது யேமனில் ஈரான் தன்னை எந்த ளவுக்குப் பலப்படுத்திக் கொண்டது என்பதை தெட்டத்தெளிவாகப் பறைசாற்றுகின்றது. இதனால்தான் இதுகாறும் யேமனில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வரவேயில்லை. யேமனில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் ஷியா, சன்னி இனப் பிரிவுகளுக்கு உட்பட்டது என்பது வெளிப்படையான தோற்றப்பாடாக இருந்தாலும் சர்வதேசச் சமூகத்தால் யேமனும், ஹவுத்தியும் பகடைக்காய்கள் ஆக்கப்பட்டுள்ளமையே நிதர்சனம். இந்த எண்ணப்பாடு நீங்கும் வரையில் யேமன் எமனின் தற்கால வாழிடமாகவே இருக்கும். ■

---

## பணம்

■ சிவரம்யா

நிதம் நாடுவோம்
ஊரெல்லாம் தேடுவோம்
முகமலர்வு கொள்வோம்
மாடாய் உழைப்போம்
ஆசையில் திளைப்போம்
ஏழ்மையை வெறுப்போம்
மானமற்று அலைவோம்
கனவுகள் காண்போம்
பிறரை ஏமாற்றுவோம்
எங்கும் நாடுவோம்
கையேந்தி வேண்டுவோம்
கேட்டு வாங்குவோம்
வாழ்வதன் காரணம் பணமோ?



## நியத்தைத் தேடி...

மரத்துப்போன மனித உறவுகள்
முகத்திரை அணிந்து
வெற்றுப் பேச்சுகள் பகன்று
பொய்யர்களாக வாழ்பவர்கள்

தினமும் தீங்கிழைக்கும் பாவிகளாக
அரக்கத்தனம் நிறைந்து
அதர்மம் தனை செய்து
அறியாமையில் உழல்பவர்கள்

மூர்க்கராய் கோபம் கொண்டு
பிறர் மனந்துடிக்க
சுடும் வார்த்தைகள் கூறி
அவமதித்து அகங்காரம் கொள்பவர்கள்
செய்வதறியாது வழி தடுமாறி
ஏழ்மையிலும் தாழ்மையிலும்
மானிடம் மிக நாடி
இவர்கள் நிஜத்தை தேடுபவர்கள்





# கூவில் கள்ளும் கீரிமலைக் குளிப்பும்

ஆசி.கந்தராஜா

அம்மா என்னுடன் சிட்னியில் வாழ்ந்த காலங்களில் தைப்பெங்கலன்று, சிட்னி கோவிலொன்றில் எழுந்தருளி இருக்கும் வைரவருக்கு வடை மாலை சாத்துவார். இதற்கான நினைவூட்டல் தைப்பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே துவங்கிவிடும்.

கனவில் தன்னை நாய் துரத்துகிறது என்றும் வைரவர் நாய் வாகனத்தில் திரிசூலத்துடன் வந்து, நெஞ்சாங்கூட்டை அமத்துகிறார் என்றும் இதனால் இரவில் மூச்சுவிடக் கஷ்டப்படுகிறேன் என்றும் கதைகளை அவிழ்த்துவிடுவார்.

அம்மாவின் இந்த அதிதீவிர வைரவர் பக்திக்குக் காரணம் உண்டு!

எங்கள் குடும்பத்துக்கென அம்மாவுக்கு சீதனமாக வந்த பனங்கூடலில், கொண்டல் மரத்தின் கீழ் ஒரு வைரவர் இருந்தார். வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் அவர் நாங்கள் ஏற்று வெளிச்சத்தில் இருப்பார். மற்றும்படி இருட்டில்தான் அவரது சீவியம்.

தைப் பொங்கலன்று மாத்திரம் வைரவருக்கு பொங்கல் பொங்கி முக்கனிகள் சகிதம் படையல் வைப்போம். இப்படி மூன்று நான்கு குடும்பங்களுக்கு ஒரு வைரவர் வீதம், பல வைரவர்கள் பனைகளுக்கு நடுவே இருந்து யாழ் குடாநாட்டில் அருள் பாலிப்பார்கள்.

வைரவர் வழிபாடு பற்றி என்னுடைய ஐயா சொன்ன சங்கதி ஒன்று இங்கு பதிவுக்குரியது. 'போர்த்துக்கேயர் இலங்கைக்குப் படையெடுத்து இலங்கையை ஆண்டபோது மக்களை பலாத்காரமாக மதம் மாற்றியதுடன் வழிபாட்டுத் தலங்களையும் அழித்தார்களாம். அப்போது யாழ்ப்பாண மக்கள், பயத்தில் தங்கள் பின் வளவுகளுக்குள் அல்லது பனங்கூடலுக்குள் வைரவர் சூலங்களை நட்டு மறைவாக வழிபட்டார்களாம். அதுவே காலப்போக்கில் வைரவர் கோயில்களாக வந்திருக்கலாம்' என்ற கருத்தைச் சொன்னார்.

இந்த வகையில்தான், போர்த்துக்கேய எஜமானர்களுக்கு பயந்து யாழ்ப்பாணத்தில் 'அடுப்பு நாச்சியார்' என்ற பெயரில் அடுப்படிக்குள் அடுப்பைக் கும்பிட்ட வழக்கம் வந்ததாம். இன்றும் கிராமத்தில் தைப் பொங்கலன்று முற்றத்தில் பொங்கியவுடன், பொங்கிய சாதத்தில் ஒரு பகுதியைக் கிள்ளி அடுப்பில் வைப்பதும் இதன் நீட்சியாக இருக்க வேண்டும்.

++++

தைப்பொங்கலன்று வைரவருக்கு பொங்கல் பொங்கி, முக்கனிகளாகச் சொல்லப்படும் மா, வாழை, பலாப் பழங்களுடன் மடைவைக்கும் போது, பனை மரம் பற்றிய தகவலொன்றை அறிந்து கொண்டேன். முக்கனிகளைப்பற்றிய புனிதம் சைவ சமய பூசை அநுட்டானங்களிலே வலியுறுத்தப்படுவது பிற்காலத்திலே தோன்றியதாம். ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு விருட்சம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. ஆதிகாலத்தில் யாழ்ப்பாணக் கோவில்களுக்கு தல விருட்சமாக அமைந்தது யாழ் கலாசாரத்துடன் கைகோத்துச் செழித்து வளர்ந்த பனை மரமே என்றார் புராண இதிகாசங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்த ஒரு பெரியவர்.

அம்மா வழியில் நெருங்கிய உறவினரான ஒரு பெத்தாச்சியின் வீடு எங்கள் வீட்டிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில் இருந்தது. அவர் ஒரு கைம்பெண். இரு பெண் பிள்ளைகளுடன் பனை ஓலையால் வேயப்பட்ட மண் வீட்டில், தங்களுக்குச் சொந்தமான பனைகளை நம்பி மிகவும் கண்ணியமாக வாழ்ந்து வந்தார். சின்ன வயதில் அவர் வீட்டிலேயே, பனை மரத்தின் விளை பொருள்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவு வகைகளை அதிகம் சாப்பிட்டிருக்கிறேன். அவரது கைப் பக்குவத்தில் தயாராகும் பாணிப்பினாட்டும், புழுக்கொடியல் மாவுருண்டைகளும் மிகவும் சுவையானவை. பனம் பழக் காலங்களிலே பனங்காய்ப் பணியாரம் சுடப்படுவதுமுண்டு. இவரைப்போல இன்னும் சில பெத்தாச்சிகளும் அயலட்டையில் வாழ்ந்தார்கள். அவர்கள் வீட்டில் எப்பொழுதும் நான் செல்லப்பிள்ளை. அவர்கள் அனைவரும் தோட்டத்தை நம்பியே வாழ்ந்தார்கள். அவர்களிடம் பணவசதி இல்லாவிட்டாலும் வந்தவர்களையும் உறவினர்களையும் மனதார வரவேற்று உபசரிக்கும் பண்பு இருந்தது. போலித்தனமோ எந்தவித எதிர்பார்ப்போ அவர்களிடம் இருந்ததில்லை.



பெத்தாச்சி தனது வளவிலுள்ள பத்து பெண் பனை மரங்களை கள்ளுச் சீவ, கந்தையாவுக்கு கொடுத்திருந்தார். ஆண் பனைகளைக் கொடுப்பதற்கே பெத்தாச்சி ஆசைப்பட்டார். ஆனால் ஆண் பனைமரப் பாளையில் அதிகம் கள்ளு ஊறாதென கந்தையா மறுத்துவிட்டார். இருந்தாலும் ஆண் பனைக் கள்ளுக்கும் ஊரில் தனி மரியாதை இருந்ததை மறுப்பதற்கில்லை.



ஆண் பனையிலிருந்து இறக்கப்படும் உடன் கள்ளு, முடக்கு வாதத்துக்கு நல்லதென அதையே நம்மூர் பெரிய கமக்காரரான துரையர், தினமும் தன் பின் வளவு ஆண் பனையிலிருந்து இறக்குவித்துக் குடிப்பார். இருப்பினும், அவரைப் பொறுத்தவரை அது பொய்யாகி, அறுபது வயதில் பாரிசவாதத்தால் இறந்தது கொசுறுச் செய்தி.

+++++

சென்ற நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளில் பனை தென்னை மரங்களுக்கு 'மரவரி' இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த வரிமுறையின் கீழ் கள்ளிறக்குவதற்கு, பெண்பனைக்கும் தென்னைக்கும் ஆண்டு ஒன்றுக்கு 'லைசென்ஸ்' பெற அப்போது பத்து ரூபாய் வீதம் கட்டவேண்டும். தென்னையிலும் பெண் பனையிலும் கள்ளுச் சீவுவதால் தேங்காய், பனங்காய் ஆகியவற்றினால் கிடைக்கும் பயன்கள் இல்லாமற் போவதை ஈடுசெய்வதற்காக மரத்துக்கு பத்து ரூபாய் வீதம் அப்போது பணம் வசூலிக்கப்பட்டது. தென்னை மரங்களில் ஆண் பெண் என்ற பேதம் இல்லை. ஆனால் பனை மரங்களில் உண்டு. ஆண் பனைகளிலே பெண் பனைகளைப் போல பயன்கள் கிடைக்காத காரணத்தால் அதற்கான 'லைசென்ஸ்' பணமாக ரூபா இரண்டு வசூலிக்கப்பட்டது.

'லைசென்ஸ்' கட்டிச் சீவப்படும் மரங்களுக்கு வெள்ளை மையால் நம்பர் எழுதப்படும். நாலு மரங்களுக்கு பணம் கட்டி, கொசுறாக மேலும் சில மரங்களிலேயும் கள்ளுச்சீவுதல் கிராமங்களிலே சகஜமாக நடைபெறும். அப்பொழுது 'கலால்' இலாகா விழித்துக் கொள்ளும். நம்பரில்லாத மரங்களிலுள்ள கள்ளு முட்டிகளை அடித்துடைத்து, பாளைகளையும் 'கலால்' இலாகாவினர் வெட்டி எறிவது கிராமங்களில் அவ்வப்போது நடக்கும் சங்கதி.

பனைகளின் முக்கிய பொருளாதார பயன்கள், கள்ளு சாராயம் பனங்கட்டி, பனங்கற்கண்டு ஆகியனவே. 'கல்லாக்காரம்' என்னும் பெயரில் விற்பனையாகும் பனங்கற்கண்டு இருமலுக்கும் தொண்டை அரிப்புக்கும் நல்ல மருந்தென விஞ்ஞான ரீதியாக இப்பொழுது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால் காலாதிகாலமாக கல்லாக்காரமே யாழ்ப்பாணத்தில் இருமலுக்கான இயற்கை மருந்தாக பாவனையிலிருந்த தகவல், முறைப்படி நம்மால் பதியப்படாதது துரதிஷ்டமே!

இடையில் அவசரமாக இன்னொரு சங்கதி மூளையைக் குடைகிறது. யாழ்ப்பாணத்துக் 'கிளாக்கர் ஐயாக்களின்' அதிகாரங்கள் கொழும்பிலே கொடிகட்டிப் பறந்த காலத்தில், கந்தோர்களில் கோப்புக்களைக் கட்டிப்பிடித்து, நாட்டின் நலன்களை அடைகாத்துப் பெருக்கியதாகப் பெருமைப்பட்ட காலங்களில், அவர்களுக்குத் தேவையான 'சுதி'யை பனங்கள்ளே அளித்தது என்பதை அவுஸ்திரேலியாவில், அறுபதைத் தாண்டி வாழும் எந்த யாழ்ப்பாணியாலும் மறுக்க முடியாது.

அன்றைய காலங்களில் யாழ்ப்பாணத்து கள்ளுக் கொட்டில்களிலதான் 'சமத்துவம்' முழுதாக அமுல்படுத்தப்பட்டது. சின்ன விக்கும் விதானை மாணிக்கத்துக்கும் கொட்டிலில் ஒரே 'பிளா'தான்.

பிளா, யாழ்ப்பாணத்தானின் மகத்தான கண்டுபிடிப்பில் ஒன்று. பனை ஓலையை வெட்டி மடித்து, கை பிடிக்க வசதியாக ஒரு பக்கத்தில் வால் விட்டு செய்தால், அது பிளா. இது கள்ளுக் குடிக்கப் பாவிக்கப்படும். பனை ஓலையை பக்கவாட்டில் மடித்து மூடிக் கட்டினால், அது குடலை. இது கிராமப்புறங்களில் இறைச்சி, வெள்ளரிப்பழம் என்பவற்றை காவிச் செல்ல பாவிக்கப்படும். முற்றிய பனை ஓலையை பிளாபோல் மடித்து, வாலை பக்கவாட்டில் மடித்துக் கட்டினால், அது தட்டுவம். இது சோறு தின்னப் பாவிக்கப்படும். தோட்டத்தில் புகையிலை அறுவடை செய்வதற்கு முன்னர் படையல் வைப்பது இந்த தட்டுவத்தில்தான்.

பனையும் அதன் பானமும் அவற்றை உண்டு தமிழிலே களிப்புற்ற பாணருமே நமது தமிழ்க் கலை இலக்கிய வடிவங்களுக்கு முதன் முதலாக வடிவமும், வகையும், சுவையும் அளித்தனர். பாணர்கள் மகிழ்ந்து, அவற்றைச் சுவைஞர்களுடன் பங்கிடுவ்தற்கு, 'உற்சாகபான'மாகக் கள்ளே பயன்பட்டது.

எனவே சங்க காலத்திலே தமிழின் படைப்புக்கும் சுவைக்கும் ஊடக பானமாக விளங்கிய கள், மது வகையிலே சேர்க்கப்படாது உணவு வகைகளிலே சேர்க்கப்பட்டதாக உசாத் துணை நூல்கள் சொல்கின்றன. பரம உண்மைகளைப் பரிமாறிக் கொள்வதற்கு உருவானவைதான் குறியீடுகளும் மரபுத் தொடர்களும். இந்த வகையில் 'கூவில் கள்ளும் கீரிமலைக் குளிப்பும்' என்ற சொற்தொடர் என் நெஞ்சிலே இன்றும் முகங்காட்டி மறைகிறது.



# ஒரு கோப்பை தேநீரும் ஓராயிரம் கதைகளும்!

ர.பிரஷாஹினி

மெய்சிலிர்க்கும் வெண்பனி மூட்டத்திலே மெல்லென துளிர்விடும் தேயிலை அரும்புகளின் சொல்ல முடியாத கதை இது. சட்டென தொட்டால் உடல் சிலிர்த்துக் கொள்ளும் பனித்துளிகள் அரும்புகளில் படர்ந்திருக்க சூரியனின் ஒளிர்க்கதிர்கள் பட்ட உடனே சிதறிடும் நீர்த்துளிகளால் அழகிய பிரமிப்போடு காட்சியளிக்கின்றது தேயிலை மலை.

எங்கும் பச்சைக் கம்பளம் போர்த்தி விட்டால்போல கண்ணிமைக்கும் நொடிகளில் கண்ணைக் கவர்ந்துச் செல்கின்ற மலையும் அதுவேயாகும். யாருக்கும் மிக எளிதாகக் கிடைக்காத உன்னதமான படைப்பின் உச்சம் என் மலையகம். எங்கு பார்த்தாலும் கண்ணை ஆர்ப்பரிக்கும் தேயிலை முகடுகள். நடுவில் நான். என்னவொரு அற்புதமான தருணமது. சற்றே தேயிலையின் சுவையை தேநீராக சுவைத்தபடியே தேயிலை மலையின் ஓரங்களில் நடக்கலானேன்.

காலை வேளை என்பதால் பச்சைக் கம்பளத்துக்கு மேலும் வர்ணம் பூசுவதற்காக வண்ணவண்ண சேலைகளோடு தொழிலாளர்கள் அணிவகுத்



துக் கொண்டிருந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் கொழுந்துக் கூடைகளை தலையிலும் குடும்பப் பாரத்தை மனதிலும் சுமந்த வண்ணம் மலைகளின் நடுவில் தமக்கான நிரைகளில் கொழுந்து அரும்புகளை பறிக்கலாயினர்.

சற்று கரடுமுரடான கைகள்தான் என்றாலும் ஒவ்வொரு அரும்பையும் மிதமாக தொட்டு கிள்ளி தம் கூடைக்குள் போட்டுக் கொண்டனர். அதனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் போதே மெதுவாக என் கைசூட்டினை உணரவே தேநீர் கையில் இருப்பது அப்போதுதான் என் ஞாபகத்துக்கு வந்தது. அச்சூடு 'நான் இன்னும் உன் கையில் வந்த கதையினை முழுமையாக முடிக்கவில்லை' எனக் கூறுவதாக எனக்குத் தோன்றியது.

தேயிலை! மிதமான பறிக்கப்பட்டு பின் நிறை கணக்கிடப்பட்டு ஒவ்வொரு சாக்கு பொதிகளிலும் போடப்பட்டு தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்படத் தயாரானது. எனது தந்தை ஒரு தோட்டக் களஉத்தியோகத்தர் என்பதால் தேயிலை தொழிற்சாலைக்குள் செல்வது எனக்கு அவ்வளவு அரிதான ஒன்றாக இருக்கவில்லை. முகாமையாளரின் அனுமதியோடு பறிக்கப்பட்ட தேயிலை கொழுந்திற்கு என்ன நடக்கின்றது? என்பதை அறியும் ஆவலோடு தொழிற்சாலையின் உள்ளே எனது பாதம் பதிந்த முதல் நாள் இன்னும் என் நினைவுகளில் முதலிடத்தை பிடித்துக்கொண்டு உள்ளது.

### தேயிலை உருவாகும் கதை

சாக்குப் பைகளில் நிறைக்கப்பட்ட கொழுந்து கீழிருந்து மேல் நோக்கி நகரும் தகட்டின் மூலமாக கொண்டு செல்லப்பட்டு பெரும் வெப்பத்தில் தட்டொன்றில் கொட்டப்பட்டு வாட்டப்பட்டன. கடும் வெப்பமாதலால் அறை முழுவதும் அனல் வீசியது. நீண்ட நேரம் வாட்டப்பட்ட பின்னர் உற்சாகமாக நிமிர்ந்திருந்த கொழுந்து தளிர்களின் நீர் உறிஞ்சப்பட்டு அவை தன் சக்தியை இழந்து வாடிப் போயின. அவ்வாறே வாட்டப்பட்ட கொழுந்துகள் ஒரு பெரிய இயந்திரம் மூலமாக வறுக்கப்படத் தயாராயின.

கொஞ்சம்கொஞ்சமாக நான் பார்த்து ரசித்த பச்சைநிற தாவணிகள் கறுப்பு நிறமாக மாறிக் கொண்டிருந்தமை எனக்குள் கலக்கத்தை உண்டாக்கியது. நேரம் செல்லச்செல்ல பச்சையங்கள் முழுமையாக அகன்று தேயிலைக் கொழுந்துகள் கறுப்பு நிறமாக்கப்பட்டு விட்டன. அதற்கடுத்ததாக அவை அரைக்கப்படத் தயாராயின. மூன்று இயந்திரங்களில் ஒவ்வொரு முறையும் நன்கு அரைக்கப்பட்டு இறுதியாக 'கப்பி' எனப்படும் தூசுக்கள் கொட்டப்பட்டன. தேயிலை அரைக்கப்படும் போது அதிலிருந்து வரும் வாசனை அந்த அறையெங்கும் வீசியது.

அந்த வாசனையை நுகர்ந்தபடியே பொதியிடும் அறை நோக்கிச் சென்றேன். முதலில் அரைக்கப்பட்ட தேயிலைகள் வெளிநாட்டு ஏற்றுமதிக்காக கம்பீரமாக அடுக்கிவைக்கப்பட இறுதியாக வந்த தூசுக்கள் பொதி செய்யப்பட்டன. நான் இதனை எதற்காக பொதியிடுகின்றனர்? எனக் கேட்கவே இவைகளே தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்றன எனத் தந்தை கூறினார்.

### மலையகத்தின் மறுபக்கம்

சற்றும் நான் எதிர்பார்க்காத பதிலது. காலையிலிருந்து ஒவ்வொரு மலையாக ஏறி கஷ்டப்பட்டு கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களை கண்ட எனக்கு அவர்களின் உழைப்புக்கான இறுதிப் பயனைப் பார்த்த போது மனம் அமைதி கொள்ளவில்லை. பின்னர் இறுதியாக அங்கிருந்த ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானோம். வழிநெடுகிலும் எனக்குள்ளோர் கேள்வி. இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் தோட்ட தொழிலாளர்களின் நிலைமை இன்னும் உயர்த்தப்படாமல் இருப்பதற்கான காரணம் தான் என்ன? இது என் மலையகத்திற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள சாபக்கேடா? அல்லது பலரது சதியால் விளைந்த கேடா? இப்படி எத்தனை எத்தனையோ விடை தெரியாத கேள்விகள் என்னுள் பட்டியலிடப்பட்டன.

காலை 6 மணி தொடக்கம் மாலை வரை தேயிலை மலைக்காடுகளில் அட்டைப்பூச்சியின் கடியிலும் கொட்டும் பனியிலும் அடைமழை குளிர் காலத்திலும் அயராது உழைக்கும் தோட்டத் தொழிலாளர்கள் அன்று வெள்ளையனால் ஒடுக்கப்பட்டவர்கள் இன்று அரசியல்வாதிகளாலும் சில முதலாளி வர்க்கத்தாலும் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். ஆயிரம் ஆண்டுகள் மாறினாலும் அடிமைகளும் அடக்குமுறைகளும் இன்னும் மாறவில்லை.

மலையகம் என்றாலே மலைகளும் வளைவுகளும் மட்டுமே ஞாபகம் வரும். எத்தனை பேருக்கு மலையகத்தின் மறுபக்கம் தெரியும். அந்தப் பக்கத்தைப்பற்றி யாருக்கும் தெரியாது. அதனை தெரிந்துகொள்ள யாரும் முயற்சிப்பதும் கிடையாது. அதனால் தான் என்னவோ அவர்களின் வாழ்க்கை வரலாறு மறைக்கப்பட்ட சரித்திரமாகவே மாறிவிட்டது.

எப்போது வேண்டுமானாலும் மண்சரிவில் சரியக்கூடிய வீடுகளும் ஒரு அறைக்குள்ளேயே குடித்தனம் நடத்தும் கூட்டுக் குடும்பங்களும், ரூபா 780 இற்காக 15 கிலோ கொழுந்துக்



கூடையை சுமக்க வேண்டிய தேவையும் மாத இறுதியில் மருந்து வாங்கவும் பணமில்லாத அவலமும் தோட்டத் தொழிலாளர்களுடைய அன்றாட வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அவர்கள் ஒன்றும் இலட்சக் கணக்கில் சம்பளமோ இரண்டு மாடி அடுக்கு வீடோ ஆடம்பரமான வசதியோ கேட்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் அடிமைத்தனமில்லாத நிம்மதியான வாழ்க்கையையே ஆகும். மலையகம் பற்றி பேசுவோர் அதிகம். ஆனால் மலையகத் தமிழர் பற்றிப் பேசுவோர் எத்தனை பேர்?

### உழைப்பிற்கேற்ற ஊதியமில்லை

உழைப்பிற்கேற்ற பலனில்லை. நாள் முழுக்க தோட்டத்தில் கஷ்டப்பட்டது இந்தத் தூசுக்களை பெறுவதற்குத்தானா? என்ற கேள்விக்கான விடையைத் தேடிக் கொண்டே வீடு நோக்கி நடந்து சென்றோம். இன்னும் சிறிது தூரம் இருப்பதால் மீண்டும் என் நினைவு தோட்ட தொழிலாளர்கள் பற்றி மீண்டும் யோசிக்க ஆரம்பித்தது.

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்றும் எப்போதாவது தமக்கு விடிவு காலம் எட்டாதா? எனவும் எதிர்பார்த்துக் காத்திருப்பதையும் தவிர வேறு வழியில்லை. அரசும் அரசியல்வாதிகளும் மாறுகின்றனரே தவிர இவர்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. பயணம் முடித்து வீட்டிற்குள் வந்து அமர்ந்த எங்களுக்கு பருகுவதற்காக அம்மா தேநீர் கோப்பையோடு சமையலறை பக்கமிருந்து வந்தாள். அதை வாங்கிக் கொண்ட நான் சற்றுப் புன்சிரிப்பை உதிர்த்தேன். என்னைத் தவிர அங்கு வேறு யாருக்கும் தெரியவில்லை அந்த ஒரு கோப்பை தேநீர் என்னிடம் ஓராயிரம் கதைகள் சொன்னது என்பதை.



# அலைவரிசைகளின் ஆபாசப் பெண்கள்!



## தனிக் கலாசாரத் தோற்றப்பாட்டின் தொனிப்பு

ப.லக்ஷனா
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

உலகத்தில் பரந்து இருக்கும் இதழியல்கள், தொலைக்காட்சி, திரைப்படம், இணையம், தனிநபர் பிரசாரம், வானொலி மற்றும் அலைவரிசைகள் எனப் பெருவாரியான மக்களைச் சென்றடையும் செய்திகள் மற்றும் இதற்குப் பயன்படும் தகவல் தொடர்புக் கருவிகள், ஜனசக்தி ஆகிய அனைத்தும் ஊடகம் என்ற கருத்தாக்கத்தில் அடங்கும். ஊடகங்கள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகவும், குரலற்றவர்களின் குரலாகவும் பறைசாற்றப்படுகின்றன. இவை ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் நிறை, குறைகளை உலக மக்களின் கவனத்துக்குக் கொண்டுசெல்கின்றன. இதன் மூலம் நாட்டினதும் சமுதாயத்தினதும் வளர்ச்சிக்கு வித்திடுகின்றன.

புராணங்களிலும் இதிகாசங்களிலும் 'மாயக்கண்ணாடி' என ஒன்று பேசப்படுவது உண்டு. மனிதன் நினைத்ததை கண்முன்னால் காட்டிவிடும் 'ஞாலவித்தைக் கருவி' அது. மாயக்கண்ணாடி பற்றிய மனிதக்கனவுகளின் அறிவியல் வடிவம்தான் தொலைக்காட்சி. தொலைக்காட்சி என்பது ஒரு தொலைத்தொடர்பு ஊடகம் ஆகும். தொலைவில் நிகழும் காட்சிகளை அருகில் கொணர்ந்து காட்டுவதால் தொலைக்காட்சி எனப்படுகிறது. ஆரம்ப காலத்தில் பெரிய 'ஆண்டனாக்கள்' துணையுடன் இயங்கிய தொலைக்காட்சி, கேபிள் தொலைக்காட்சியாக மாறியிருக்கிறது. இது ஒருபொழுது போக்கு சாதனம் மட்டுமல்லாமல் கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், பொருளாதாரம், அரசியல், சமூகம், நாட்டுநடப்பு, நிகழ்கால விடயங்கள் எனப் பலவிடயங்களைப் புதைத்து வைத்திருக்கிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சி என்பது தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக உருவாக்கப்பட்ட ஒளிக் கோப்புகள் ஆகும். இது ஒரேமுறையாக தயாரிக்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் ஒளிபரப்பப்படும் தொடராக இருக்கலாம். ஒரு நிகழ்ச்சி உருவாக்கப்பட்டு ஒளி நாடாக்களிலோ அல்லது பலவித இலத்திரனியல் ஊடகங்களிலோ பின்னாள் ஒளிபரப்புக்காகப் பதிவுசெய்யப்படலாம் அல்லது நேரடியாக நேரலை தொலைக்காட்சியாகவும் ஒளிபரப்பப்படலாம்.

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காட்டப்படும் பெண்கள் பாலுணர்வைத் தூண்டுகின்றனரா?

பாலுணர்வுகளைத் தூண்டும் வெறும் வெற்றுப்பொருள்களாக பெண்கள் 'நவீனயுக' தொலைக்காட்சிகளில் காட்டப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு பொதுவாக உள்ளது. இது பெண்கள் குறித்த பார்வையை இளம் சமூகத்தில் தவறாக விதைக்கிறது. இன்று ஆணாதிக்க சமூகத்தின் கைகளில் பெண்கள் ஒரு பாலியல் நுகர்வுப் பொருளாகவே காட்சிப்படுத்தப்படுகின்றமை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமே. தினசரி நாம் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெண்களின் அலங்காரம், உடை, நளினம் என்பவற்றின் அடிப்படையில் மக்களை மகிழ்ச்சிப்படுத்தி பணம் சம்பாதிக்கின்றனர். பெண்ணின் அழகியல், பாலியல் இளமை சார்ந்த விழுமியங்களை, இலக்கணங்களை தொலைக்காட்சி நிறுவனமே தீர்மானித்து பெண்கள் மீது திணிக்கின்றது என பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் பெண்கள் கல்வி, மேம்பாட்டுத் துறையின் பேராசிரியர் ராஜேஸ் கில் கூறுகிறார்.

விளம்பரங்களில் வரும் பெண் மெல்லிடையும் வெளிர் நிறமும் கொண்டவளாக வருவதும் அவள் ஆண்களைப் பார்த்து நெளிந்து சிலிர்த்து மோகிற்கும் கதாப்பாத்திரமாகக் காட்டப்படுவதும் பெண்கள் குறித்த தவறான எண்ணத்தை விதைக்கச் செய்கிறது.

பெண்களை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நிகராக, நேராக, முறையாக, நல்லமுறையில் சித்திரிக்காமல் போனமை நிச்சயம் முறையற்ற ஒன்றே. பெண்கள் குறித்த நல்லமுறையான சித்திரிப்புக்களை சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மேற்கொண்டாலும் பல நிகழ்ச்சிகளின் செயற்பாடுகள் எதிர்மறையானதே.

விளம்பரங்களில் வரும் பெண் மெல்லி டையும் வெளிர் நிறமும் கொண்ட வளாக வருவதும் அவள் ஆண்களைப் பார்த்து நெளிந்து சிலிர்த்து மோகிற்கும் கதாப்பாத்திரமாக காட்டப்படுவதும் பெண்கள் குறித்த தவறான எண்ணத்தை விதைக்கச் செய்கிறது.



## செய்தி வாசிப்பவனை காதலிப்பவள்

வேலணையூர் தாஸ்

இது ஒரு வானொலி செய்தி தான்
ஆனால் அவளுக்கு
மறவாப் பேரன்பின் பாடலாய் ஒலிக்கிறது .
ஜென்ம நினைவுகளை கிளர்த்துகிறது .
அந்த குரல் காந்தமாய் கவர்ந்தருகே இழுக்கிறது
அவள் அடிக்கடி அவன் செய்திக்காக
காத்திருக்கத் தொடங்கினாள்.
தன்னையும் மீறி அவன் மீது
காதல் எழுந்ததைத் தவிர்க்க முடியாதவள் ஆனாள்...

அவனை நேரில் காணாள் ஆயினும்
குரலின் வழியே அழகன் என்றே
அசையாது நம்புகிறாள்
சொற்களை முறியாது வளைப்பவனின்
தலைமயிர் சுருண்டிருக்குமெனவும்,,,
வார்த்தை தளும்பாதிருப்பதால்
உறுதியானவன் என்றும் நம்புகிறாள்.
சின்ன தாடி இருந்தால் நன்றாயிருக்கும்
என ஆசைப்படுகிறாள் .
நேரம் 6 மணி 45 நிமிடம்
செய்திகள் வாசிப்பவர் (ன்).
அந்த இடைவெளியில் அவள் அவனுக்கு
செல்லமாக இட்ட பெயர்களை அடுக்கி
வாசிக்கிறாள்.
தேநீர் குடித்தபடி வானொலி அருகிருந்து
செய்திகேட்கிறாள்.
அவனுக்கென்று ஒரு கோப்பை எடுத்து
வானொலிமுன் வைக்கிறாள்.
தாய் "யாருக்கு தேநீர் என்கிறாள் "உனக்கு தான்
எடுத்தேன் என்று சமாளிக்கிறாள் .
மனதிற்குள் அவனுக்கு சொறி சொல்கிறாள் .


"வடபகுதியில் இன்று கன மழை என்று வாசிக்கிறான்
இவள்என் மனக்காட்டில் தினமும் உன் குரல்
மழை தான் என்கிறாள்.
இரவு செய்தியொன்றில் "அமைச்சர் ஒருவர் கட்சி
மாறிவிட்டார் எனச் சொல்கிறான்.
"என்றும் என் காதல் மாறுவதில்லை என்கிறாள் இவள்

"கண்மணிக்கு இப்போ அரசியலில் நிறைய ஈடுபாடு
ஒரு செய்தியும் விடுவதில்லை தாய்
யாருக்கோ சொல்வது கேட்கிறது
இவள் மனதில் சிரிக்கிறாள்
நெற்றி வியர்க்கிறது கொஞ்சம் பயப்படுகிறாள் .

அவன் செய்திகளில்
குண்டுவெடிப்புகள், குழந்தைக்கடத்தல் விபத்து மரணம்,
பாலியல் வன் முறை வரக்கூடாதென்றும்.
கிரிக் கெட் செய்திகளில் இலங்கையின் வெற்றியை
மட்டுமே சொல்ல வேண்டுமென்றும்
கடவுளை வேண்டுகிறாள்.
ஒருமுறை அவன் போல் செய்தி வாசித்து
மிமிக்கிரி செய்கிறாள்.
"ஏனடி ஆண் குரலில் வாசிக்கிறாய்"
என்கிறாள் தோழி
"என் அவன் குரல் என்று " மனதிற்கு சொல்கிறாள்
நீ சாப்பிட்டாயா ?என்று கதையை மாற்றுகிறாள்.
வியன்பேருலகு கைச்சிறு போனில் அடக்கம் என்றும்,
கூகிள் உலகில் தேடுதல் என்பது
நொடிக்கணம் என்றும். அறிந்தே இருக்கிறாள்
ஆயினும்,

குரல்வழி கண்டு,
கற்பனை விரித்து ,
கனவினில் பேசி,
காத்திருந்திரங்கி ,
நினைவினில் வாடி,
அன்பினில் உயிர்த்து
காதலின் அவஸ்தையை ருசிக்கிற ஞானம்
கண்டடைந்திருக்கிறாள்.
அவனை காணாதிருக்கவே பிரியம் கொள்கிறாள்

அவன் பூர்வீகம் அந்த காற்றறியும் என்று
காற்றோடு பேசுவாள் நம் கண்மணி...
இத்துடன்
இரவுச் செய்திகள் முடிவடைகின்றன
என்கிறான் அவன்
காதலின்செய்திகள்முடிவதில்லைஎன்கிறாள்அவள்...





## தேடவே முடியவில்லை!

**நடிகர் : சஞ்சய்**
**நடிகை : மேக்னா**
**இயக்குநர்: சுசி**

நாயகன் சஞ்சயும், நாயகி மேக்னாவும் காதலித்து வருகிறார்கள். இவர்களின் காதல் மேக்னாவின் வளர்ப்புத் தந்தைக்குப் பிடிக்காமல் போகிறது. இதனால், சஞ்சயைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்கிறார். இதேசமயம், மேக்னாவை மற்றொரு இளைஞர் காதலிக்கிறார். அவரின் காதலை ஏற்காததால் மேக்னாவைக் கடத்தத் திட்டமிடுகிறார்.

இறுதியில் சஞ்சய், மேக்னா இருவரும் காதலில் ஒன்று சேர்ந்தார்களா? சஞ்சயை மேக்னாவின் வளர்ப்புத் தந்தை தீர்த்து கட்டினாரா? மேக்னாவை ஒருதலையாகக் காதலிப்பவரின் நிலைமை என்ன ஆனது? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்திருக்கும் சஞ்சய், தன்னால் முடிந்தளவுக்கு நடிப்புத் திறனை வெளிப்படுத்த முயற்சி செய்திருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் மேக்னா ஏற்கனவே படங்களில் நடித்திருக்கின்றமையால், இதில் கொஞ்சம் ஆறுத லான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.

வில்லனாகவும், நாயகியின் வளர்ப்புத் தந்தையாகவும் வரும் சிவகாசி முருகேசன், பிரபாகரன், ராணி, கமலா, சுவாமி தாஸ், காமராஜ், கல்கி ஜெகவீரபாண்டியன் ஆகியோர் கொடுத்த வேலையைச் செய்திருக்கிறார்கள்.

காதல் கதையை மையமாக வைத்து படத்தை இயக்கி இருக்கும் சுசி. ஈஸ்வர், அதில் செல்பி மோகத்தால் ஏற்படும் விளைவுகளையும், ஒருதலைக் காதலால் ஏற்படும் விளைவுகளையும் சொல்ல முயற்சி செய்திருக்கிறார். திரைக்கதை தெளிவு இல்லாததால் அது பெரியளவில் எடுபடவில்லை.

டி.ஜே.கோபிநாத் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணியில் கவனம் செலுத்தி இருக்கலாம். சபரியின் ஒளிப்பதிவு பெரியதாக கவரவில்லை. மொத்தத்தில் 'தேடு' தேட முடியவில்லை.



## போர்வீரனாக அர்ஜுன்

4ஆவது குஞ்சலி மரைக்காரின் வாழ்க்கையை மையமாக வைத்து உருவாகும் சரித்திரப் படத்தில் நடிகர் அர்ஜுன் போர்வீரனாக நடிக்கிறார். 16ஆம் நூற்றாண்டில் கேரளாவில் வாழ்ந்த கடற்படை தலைவர்கள் குஞ்சலி மரைக்கார் என்று அழைக்கப்பட்டனர். இவர்களில் 4ஆவது குஞ்சலி மரைக்கார் வீரதீரம் நிறைந்தவராகப் போற்றப்பட்டார். அவரது வாழ்க்கையை மையமாக வைத்து அரபிக்கடலிண்டே சிம்ஹம் என்ற படம் தயாராகிறது. இதில் குஞ்சலி மரைக்கார் வேடத்தில் மோகன்லால் நடிக்கிறார். இதுவரை அவர் ஏற்றிராத கதாபாத்திரமாக இது இருக்கும் என்கின்றனர். இந்தப் படம் 100 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) செலவில் தயாராகிறது. பிரியதர்ஷன் இயக்கி வருகிறார். இந்தப் படத்தை மார்ச் மாதம் 26ஆம் திகதி தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி உட்பட 5 மொழிகளில் திரையிடுவதற்கு திட்ட மிட்டுள்ளனர். உலகம் முழுவதும் 5 ஆயிரம் தியேட் டர்களில் திரையிட இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தப் படத்தில் கீர்த்தி சுரேஷ், மஞ்சு வாரியர், அர்ஜுன், சுனில் ஷெட்டி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். அர்ஜுன், அனந்தன் எனும் போர்வீரன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

## உறவும் பிரிவும்

பொலிவுட்டில் முன்னணி நடிகையாக இருக்கும் தீபிகா படுகோனே, உறவும் பிரிவும் தனக்கு நிறைய கற்றுக்கொடுத்திருக்கின்றனர் எனக் கூறியுள்ளார்.

உலக பொருளாதார அமைப்பு 2020ஆம் ஆண்டுக்கான 'கிரிஸ்டல்' விருது விழாவை சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரத்தில் நடத்தியது. விழாவில் பொலிவுட் நடிகை தீபிகா படுகோனே கலந்துகொண்டு கிரிஸ்டல் விருது பெற்றார். மனஅழுத்தம், பதற்றத்துக்கு எதிரான சிறந்த விழிப்புணர்வு செயல்பாட்டுக்காக தீபிகாவுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

விருதைப் பெறுவதற்காக மேடை ஏறிய தீபிகா பேசியபோது, 'மனஅழுத்தம் போன்ற பிரச்சினைகளால் அவதிப்படுவோரை 'நீங்கள் தனி ஆள் இல்லை' என்று சொல்லித் தேற்றுவேன். உறவும் பிரிவும் எனக்கு நிறைய கற்றுத் தந்திருக்கின்றன. மனப்பதட்டம் என்பது குணமாக்கக்கூடிய சாதாரணமான பிரச்சினைதான். இந்த நொடியில்கூட உலகில் ஒருவர் மன அழுத்தத்தால் தற்கொலை செய்து கொண்டு தான் இருக்கிறார். இந்த நிலை மாற வேண்டும். அன்பும் மகிழ்ச்சியும் பரவினாலே மன அழுத்தத்தையும் பதற்றத்தையும் விரட்டலாம்' என்றார்.

தன்னார்வ அமைப்பொன்றை உருவாக்கியுள்ள தீபிகா, அதன் மூலம் பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சி கள் நடத்துகிறார். தான் சந்தித்த மன உளைச்சல்களால் தனது வாழ்வில் நேர்ந்த அனுபவங்களையும் அவற்றிலிருந்து மீண்டு வந்ததையும்பற்றி மாணவர்கள் மத்தியில் எடுத்துச்சொல்லி அவர்களை ஊக்கப்ப டுத்துவதோடு, பதற்றத்தைப் போக்கும் வழிமுறைகளை கற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளையும் செய்கிறார்.



மனப்பதற்றம் என்பது குணமாக்கக்கூடிய சாதாரணமான பிரச்சி னை தான். இந்த நொடியில்கூட உலகில் ஒருவர் எங்காவது மனஅழுத்தத்தால் தற்கொலை செய்து கொண்டு தான் இருக்கி றார். இந்த நிலை மாற வேண்டும்.



# இன்றைய தேவை!

முஸ்லிம்கள் இன்று நாட்டில் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட சமூகமாக வாழவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. நமக்கு உரிமை முக்கியம். இதற்கான அர்ப்பணிப்பே இன்றைய தேவை.
இவ்வாறு சாய்ந்தமருதில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்முனை மாநகர மேயரும், முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் கூறினார்.
பெருந்தொகையான இளைஞர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் மேயர் றகீப் மேலும் உரையாற்றுகையில், அர்ப்பணிப்புத் தேவை என்பது ஆயுதம் தூக்குவதல்ல எனக் குறிப்பிட்டதுடன். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் அபாயா அணிவதற்கும் என்ன சம்பந்தம்? எனக் கேள்வி எழுப்பி, முஸ்லிம்களின் பொருளாதாரம், கலாசாரம் என்பவற்றை அடக்கி ஒடுக்கும் திட்டத்துக்கு, உயிர்த்த ஞாயிறு சம்பவ நிகழ்ச்சி நிரலை வகுத்தவர்களுக்கு ஒரு முஸ்லிம் தீவிரவாதி தேவைப்பட்டான் எனவும் விசனத்துடன் கூறினார்.

**இராணுவமயம், சிங்களமயம்! ஐயகோ!!**



## ஏகமனதாக தெரிவு

கல்முனை மாநகரில் 75 வருடகால வரலாறு கொண்ட கல்முனை அரச ஊழியர் பொதுச் சேவைகள் (பொழுது போக்கு) கழக புதிய தலைவராக ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் கே.அருள்ஞானமூர்த்தி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கல்முனை 2ஆம் பிரிவைச் சேர்ந்த சமூக சேவையாளரான இவர், கழகத்தின் வருடாந்தப்பொதுக்கூட்ட புதிய நிருவாகிகள் தெரிவின்போது, கழகத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

**தலைமைத்துவம் பொறுப்புமிக்கது!**

■ அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....



## பாராட்டு

கல்முனைநகரலயன்ஸ் கழகம், கல்முனைவிவேகானந்தா தமிழ் வித்தியாலயத்திலிருந்து ஐந்தாம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்ற (வெட்டுப்புள்ளிக்கு மேல்) பத்து மாணவ, மாணவியரைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.
இந்தப் பாராட்டு நிகழ்வு கல்முனைநகரலயன்ஸ் கழகத் தலைவர் லயன், எஸ்.அரசரெத்தினம் தலைமையில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.
வித்தியாலய அதிபர் வீ.யோகராசா மற்றும் பெற்றோர், லயன்ஸ் கழகத்தின் மாணவர் ஊக்குவிப்பு செயற்பாட்டுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

**கல்வி ஊக்குவிப்புக்கு முதலிடம்!**





## சாதனை மாணவி!

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி பாத்திமா ஷைரீன் இனாமுல்லாஹ்மௌலானா இந்தோனேஷியாவில் நடைபெற்ற சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்று நாட்டுக்கும், கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
சர்வதேச விஞ்ஞான, தொழிநுட்பமற்றும் பொறியியல் ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தோனேஷியாவிலுள்ள ஜாவா பல்கலைக் கழகத்தில் கடந்தவாரம் குறித்த சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சிப் போட்டி இடம்பெற்றது.
இதன் போது இறுதிச் சுற்றுக்குத் தெரிவான 24 நாடுகளுள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய பாத்திமா ஷைரீன் தங்க விருதைப் பெற்றார்.

**நாமென்ன சாதனைகளில் சளைத்தவர்களா?**





## பயிற்சிப் பட்டறை

அம்பாறை மாவட்டத்தில் முகநூல் செயற்பாட்டாளர்களாகத் திகழ்வோருக்கான பயிற்சிப் பட்டறையும் கருத்துப்பரிமாற்றமும் சாய்ந்தமருது, பேர்ள் மண்டபத்தில் நடைபெற்றது.
திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் பயிற்சிப்பட்டறைக்கான அனுசரணையை வழங்கியிருந்ததுடன், பட்டறை ஆரம்ப நிகழ்விலும் அதிதியாகக் கலந்து கொண்டார்.
சமூக வலைத்தளங்கள் வந்தபின்பு குறிப்பாக முகநூல் ஊடகத் தாக்கத்தின் பின்பு அரசியல் தீர்மானம் என்பது சமூக வலைத்தளங்களைக் கையாளுகின்றவர்களின் கைக்கு மாறியிருக்கின்றது என அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கூறினார். மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம், 'ஊடக தர்மம்' எனும் தலைப்பிலும் உரையாற்றியதுடன், சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள், இயக்கம் தொடர்பாகவும் வளவாளர்கள் விளக்க உரையாற்றினர்.

**காலத்தின் தேவை இப்பட்டறை!**

## சுவரோவியங்கள்




ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைவாக வெற்றுச் சுவர்களில் சுவரோவியங்கள் (சித்திரம்) வரையும் செயற்பாடுகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாக இளைஞர்கள் மற்றும் இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் போன்றவை இந்தச் சுவரோவியங்கள் வரைவதில் ஆர்வம்காட்டி வருகின்றன. பெரும்பாலும் சமாதானம், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை போன்ற கருப்பொருளுடன் கூடிய சித்திரங்களே அதிகம் காணப்படுகின்றன.

**காலத்தின் கட்டாய கருப்பொருள்!**

## கவனம் முகவர்கள்!

முஸ்லிம் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கு அரசின் முகவர்கள் முஸ்லிம் பிரதேசங்களெங்கும் இறக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பேர்வழிகள் தொடர்பில் முஸ்லிம் மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும் இவ்வாறு, முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் எச்சரிக்கை விடுத்தார். நிந்தவூரில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். குறிப்பாக எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறுபான்மையினத்தவரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களைக் குறைக்கும் சதி நடவடிக்கைகள் முன்னெடுக்கின்றன எனவும் எமது ஒற்றுமை மூலம் இதனை முறியடித்து நம் இருப்பையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

**விழித்துக் கொள்வோம்!**

# இந்த வார ராசிபலன்

26.01.2020 முதல் 01.02.2020 வரை

## மேடம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் உத்வேகமும், செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்வு உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பண சேமிப்பிலும் ஈடுபடுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். உறவினர்களின் ஆலோசனை மிகுந்த பயனளிக்கும். மனைவியின் அன்பு, பாசம் மனதிற்கு மகிழ்ச்சி தரும். புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவால் தொழில், பணியா ளர்களுக்கு உழைப்பிற்கேற்ற நற்பெயரும், சலுகையும் கிடைக்கும்.

## இடபம்

சந்திரனால் நன்மை கிடைக்கும். மனதிற்கு மகிழ்ச்சி தரும் செயல்களில் ஈடுபடுவது நன்மை தரும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை தேவை. பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். அலைச்சல் தரும் பயணங்களை தவிர்ப்பது நல்லது. எதிரியிடம் இருந்து விலகுவதால் சிரமத்திலிருந்து விடுபடலாம். மனைவியின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்கவும். பணியாளர்கள் பணியிடச் சூழல் அறிந்து திறமையாக செயல்படவும்.

## மிதுனம்

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். செயல்களை மிகவும் நேர்த்தியுடன் செய்வீர்கள். உடன் பிறந்தவருக்கு சரியான நேரத்தில் உதவுவீர்கள். வாகனப் பயணம் இனிமையாக அமையும். பூர்வ சொத்தில் பணவரவு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் வசூலாகும். மனைவி கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் எளிதில் பணி இலக்கை நிறைவேற்றி புதிய சாதனையைபடைப்பீர்கள். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர்.

## கடகம்

சுக்கிரன், கேது, சனீஸ்வரர், சந்திரன் அனுகூலபலன் வழங்குவர். திட்டமிட்ட பணிகள் அனைத்தும் கடின உழைப்பால் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும், புகழும் தேடி வரும். வாகன பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் அபார அறி வாற்றலால் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவியின் ஆலோசனை மனதிற்கு நம்பிக்கையை அளிக்கும். தொழில், வியாபார முன்னேற்றத்தால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்வர்.

## சிம்மம்

சூரியன், ராகு, புதன், குரு அதிக அளவில் நற்பலன் தருவர். செயல்களில் இருந்த குளறுபடி சரியாகும். இஷ்ட தெய்வ வழிபாடு கூடுதல் நன்மையை தரும். குடும்பத்தில் உள்ள ஒற்றுமையை காத்திடுவீர்கள். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் தேவை. பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை மதித்து செயல்படுவர். நண்பர்களுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் செயல்களில் சிறு குளறுபடிகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நன்மையை அளிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து செயல்படவும்.

## கன்னி

செவ்வாய், சந்திரனால் நன்மை கிடைக்கும். மனதில் தயக்கம் விலகித் தைரியம் வளரும். பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் மனக்குழப்பத்தை போக்கி மகிழ்ச்சியை ஏற்படுத்துவீர்கள். பூர்வீக சொத்தை பராமரிப்பதில் நம்பகமானவர்களை பணியமர்த்தினால் நன்மை தரும். மாறுபட்ட கருத்து உடையவரிடம் இருந்து விலகுவது நல்லது. மனைவியின் ஆர்வமிகு செயல் குளறுபடி ஏற்பட வாயப்புள்ளது. தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும்.

## துலாம்

புதன், சுக்கிரன், கேது, சனீஸ்வரர், சந்திரன் தாராள நற்பலன் தருவர். திட்டமிட்ட செயல்கள் அனைத்தும் சிறப்பாக நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகள் படிப்பு, செயல் திறனில் முன்னேற்றம் காண்பர். குடும்பத் தேவை பெருமளவில் பூர்த்தியாகும். உங்களின் நல்ல குணத்தை மனைவி பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழித்து புதிய சாதனை ஏற்படும். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும். வெளியூர் பயணத்தால் புதிய அனுபவம் உண்டாகும்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், சூரியன், சந்திரனால் அனுகூல பலன் ஏற்படும். பேச்சில் உண்மை, சத்தியம் நிறைந்திருக்கும். விலகிய உறவினர்கள் விரும்பி சொந்தம் பாராட்டுவர். வாகன பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்து கொள்வர். ஒவ்வாத உணவினை தவிர்ப்பது நன்மை தரும். நண்பருடன் சுற்றுலா செல்லும்வாய்ப்புவரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

## தனுசு

சந்திரன், சுக்கிரன் நற்பலன் தருவர். எந்தவொரு செயலிலும் சாதுர்யத்துடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நண்பர்களுக்கு மனப்பூர்வமாக உதவுவீர்கள். குடும்பத்திற்கான தேவை அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பணப் பரிவர்த்தனையில் தகுந்த பாதுகாப்பை பின்பற்றினால் நன்மை அளிக்கும். இஷ்ட தெய்வ அருள் கிடைக்கும். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். வீட்டில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும்.

## மகரம்

ராகு, செவ்வாய், சுக்கிரன், சந்திரனால் சுபபலன் உண்டாகும். சமூக நிகழ்வு மனதில் நல்ல மாற்றத்தை அளிக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் மனதில் தோன்றும் நல்ல சிந்தனையால் படிப்பில் முன்னேற்றம் காண்பர். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். ஆடம்பர செலவை தவிர்க்கவும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் குடும்ப நலத்தை பேணுவார். தொழில், வியாபாரம் செழித்து அபரிமிதமான வளர்ச்சி பெறும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

## கும்பம்

கேது, சுக்கிரன், குரு, சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். உடன் பிறந்தவருக்கு உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி மாற்றம் இருக்கும். பிள்ளைகளின் செயல்கள் பெருமையை தரும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும் வகையில் மனைவி செயல்படுவார். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபார வளர்ச்சியால் உபரி வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடச் சூழல் அறிந்து சிறப்பாக பணிபுரிவர். சிறந்த செயலால் பரிசு, பாராட்டு கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர். மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## மீனம்

சுக்கிரன், சூரியன், புதன், சந்திரனால் வியத்தகு அளவில் நன்மை கிடைக்கும். பணிகளில் புதிய யுக்தியை கையாள்வீர்கள். சமூக நிகழ்வு மனதிற்கு இனிய அனுபவத்தை தரும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரிடம் நண்பருக்கு இணையாகப் பழகுவர். குடும்பத்தில் சுபநிகழ்வு கைகூடும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு, விவகாரத்தில் சுமூக தீர்வு ஏற்படும். மனைவியின் செயல் பாராட்டும்படி அமையும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வளர்ச்சி கூடும். பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.






# விடைகொடு எங்கள் நாடே!

அரச குடும்ப வழக்கப்படி படிப்பு, இராணுவப் பயிற்சி, பட்டம் எல்லாம் பெற்றிருந்தாலும், அடங்காத பிள்ளை என்ற பெயரையும் பெற்றவர் ஹாரி. அதற்குக் காரணம் அவருடைய 12 வயதின்போது தாய் டயானா, தந்தை சார்ளஸ் மணவிலக்கு நிகழ்ந்ததும் வெகு விரைவிலேயே பாரிஸ் நகரில் நடந்த விபத்தில் தாய் டயானாவை இழந்ததும்தான்.

**பிரிட்டனில் அரசமைப்புச் சட்டப்படியான நாடாளுமன்ற ஜனநாயகம் நடைமுறையில் இருந்தாலும் அரச குடும்பம் தான் வழிகாட்டியாக இருக்கிறது. நாட்டின் சம்பிரதாயத் தலைவராக ராணியே திகழ்கிறார்.**



பிரிட்டிஷ் அரச குடும்பத்து உறுப்பினர்கள் என்ற அந்தஸ்தை விட்டுக் கொடுத்து விட்டனர் இளவரசர் ஹாரியும் அவருடைய மனைவி மேகனும். இனி அரசக் குடும்பத்துக்குரிய இளவரசர், இளவரசி என்ற பட்டங்களைப் பெயரின் முன் சேர்க்க மாட்டார்கள். விண்ட்சர் அரண்மனையில் தங்களுடைய குடியிருப்பைப் புதுப்பிக்க மக்களுடைய வரிப் பணத்திலிருந்து பெற்ற 24 லட்சம் பவுண்டுகளை அரசுக்கே திருப்பிக் கொடுத்துவிடவும் அவர்கள் முடிவெடுத்து விட்டனர். இனி அவர்கள் தனிப்பட்ட முறையில் வேலை செய்து குடும்பம் நடத்துவார்கள். அரச குடும்ப உறுப்பினர்கள் என்ற அந்தஸ்தை இழக்க அவர்கள் முடிவு செய்திருந்தாலும், அரச குடும்பத்தின் அங்கமாகவே தொடர்ந்து கருதப்படுவார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளையும் உதவிகளையும் அளிக்க அரச குடும்பம் தயாராகவே இருக்கும் என்று அரச குடும்பம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், பிரிட்டனில் இது பல்வேறு விவாதங்களுக்கு வித்திட்டிருக்கிறது.

## ஜனநாயகமும் முடியாட்சியும்

பிரிட்டனில் அரசமைப்புச் சட்டப்படியான நாடாளுமன்ற ஜனநாயகம் நடைமுறையில் இருந்தாலும் அரச குடும்பம்தான் வழிகாட்டியாக இருக்கிறது. நாட்டின் சம்பிரதாயத் தலைவராக ராணியே திகழ்கிறார். இப்போது ராணி இரண்டாவது எலிசபெத் ஆள்கிறார். அவருடைய கணவர் பிலிப், கோமகனாக இருக்கிறார். ஒருபுறம், உலகின் ஜனநாயக முன்னோடி என்று சொல்லப்படும் பிரிட்டன், மறுபுறம் இப்படி முடியாட்சியை இன்னமும் தக்க வைத்துக்கொண்டிருப்பதற்கு முக்கியமான காரணம் ஏனைய நாடுகளைப் போல அல்லாமல், அதிகாரப் பகிர்வுக்கும் ஜனநாயகத்துக்கும் இங்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் அரச வம்சத்தினரே என்பதுதான். ஆகையால், பிரிட்டன் மக்கள் இடையே இன்னமும் அரச குடும்பத்துக்குத் தனி மதிப்பு உண்டு. விக்டோரியா, எலிசபெத் மகாராணிகள் மூன்றாவது உலக நாடுகளில் ஏழைக் குடும்பங்க ளுக்குக்கூட நன்கு அறிமுகமானவர்கள். தங்களுடைய பெண் குழந்தைகளுக்கு இந்தப் பெயர்களை அந்தக் காலத்தில் சூட்டி மகிழ்ந்தவர்கள் அநேகம். உலகையே ஒருகாலத்தில் கட்டி ஆண்ட பேரரசின் குடும்பம் இன்றைக்கு அரசு மானியத்தால் மட்டுமே வாழ்கிறது. இந்தக் குடும்பத்துக்கு ஆகும் செலவு மக்களுடைய வரிப்பணத்திலிருந்துதான் எதிர்கொள்ளப்படுகிறது என்றாலும் அரசியல், வணிகம், இராணுவம், வெளியுறவுத் துறைகளில் அரச குடும்பத்தின் செல்வாக்கு பல நன்மைகளையும் பெற்றுத்தருகிறது.

## வாரிசுகளின் போக்குகள்

எலிசபெத் - பிலிப் தம்பதியின் மகன் சார்ள்ஸின் வாரிசுகள் வில்லியம், ஹாரி இருவரும்தான் இந்தத் தலைமுறை அரச குடும்பத்து வாரிசுகள். இவர்களில் வில்லியம் இப்போது கேம்பிரிட்ஜ் சீமானாகவும் (பிரபு). அவருடைய மனைவி கேதரின் கேம்பிரிட்ஜ் சீமாட்டியாகவும் திகழ்கிறார்கள். இளைய மகன் ஹாரி, மேகன் மார்கெல் என்ற நடிகையைத் திருமணம் செய்து கொண்டார். இருவரும் சஸ்ஸெக்ஸ் சீமான், சீமாட்டிகளாக நியமிக்கப்பட்டனர். இவை அலங்கார, கௌரவப் பதவிகள். முப்பத்தெட்டு வயதாகும் மேகன் மார்கெல் அமெரிக்காவில் லொஸ்ஏஞ்செல்ஸ் நகரில் பிறந்தவர். அவருடைய தாய் டோரியா ரேக்லேண்ட் ஆப்பிரிக்க இன அமெரிக்கர். தந்தை ஐரோப்பாவின் காகசஸ் மலைப்பகுதியிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர். எனவே, மார்கெல் ஆபிரிக்க அமெரிக்கர். மேகன் மார்கெல் முதலில் நடிகர் தயாரிப்பாளரான டிரெவர் ஏங்கல்சன் என்பவரை 2011ஆம் ஆண்டில் மணந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மணவிலக்குப் பெற்றார். பிறகு, புகழ்வாய்ந்த சமையல் கலைஞர் கோரி விடியல்லோ வுடன் இரண்டாண்டுகள் நட்பில் இருந்தார். அதன் பிறகே இளவரசர் ஹாரிக்கு அறிமுகமாகி, அவரை மணந்தார்.

அரச குடும்ப வழக்கப்படி படிப்பு, இராணுவப் பயிற்சி, பட்டம் எல்லாம் பெற்றிருந்தாலும், அடங்காத பிள்ளை என்ற பெயரையும் பெற்றவர் ஹாரி. அதற்குக் காரணம் அவருடைய 12 வயதின்போது தாய் டயானா, தந்தை சார்ள்ஸ் மணவிலக்கு நிகழ்ந்ததும் வெகு விரைவிலேயே பாரிஸ் நகரில் நடந்த விபத்தில் தாய் டயானாவை இழந்ததும்தான். சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த செல்ஸி டேவி என்ற பெண் தொழிலதிபர், வழக்கறிஞருடன் ஐந்து ஆண்டுகள் நட்பிலிருந்த ஹாரி பின்னர் அவரைப் பிரிந்தார். பின்னரே மேகன் மார்கெல்லை மணந்தார். திருமணத்துக்குப் பிறகு பல குடும்பங்களில் அண்ணன் தம்பிகளுக்கு இடையே இடைவெளி ஏற்படுவதைப் போல வில்லியம்- ஹாரி இடையேயும் இடைவெளி ஏற்பட்டது. இதற்கு மேகன் மார்கெல்லின் பின்னணியும் ஒரு காரணம். தன்னைக் காட்டிலும் மூன்று வயது இளையவரான ஹாரியின் முடிவுகளில் மேகன் மார்க்கெல் நிறைய செல்வாக்கு செலுத்துகிறார் என்ற பேச்சும் உண்டு. அதன் தொடர்ச்சிதான் ஹாரி - மேகன் மார்க்கெல்லின் இந்த அறிவிப்பு என்று பேசப்பட்டாலும், இதை ஒரு புதிய தொடக்கமாகவும் பார்க்கிறார்கள் பிரிட்டிஷார். அரசக் குடும்பத்தை இனியும் தூக்கிச் சுமக்கக்கூடாது என்று பேசிவரும் விமர்சகர்களுக்கு இது கூடுதல் உவகை அளிப்பதாக மாறியிருக்கிறது. வில்லியமும் ஹாரியைப் போலவே எதிர்காலத்தில் முடிவெடுத்தால் பிரிட்டன் ஜனநாயகமும் முழுமை பெறும் என்று பேசுகிறார்கள் அவர்கள்!

நன்றி: தமிழ் திசை



# நித்திய சுகம் 454

உடலே கோயில்

வைத்தியர் பொ.ஜெசிதரன்,
*சுகாதார வைத்திய அதிகாரி,*
*மாநகர சபை, யாழ்ப்பாணம்*

# அங்கவீனத்தை ஏற்படுத்தும் தொற்றுநோய்



உடலில் ஊனத்தை ஏற்படுத்தி, இன்னொருவரில் சார்ந்து வாழும் நிலையை ஏற்படுத்தும் நோய்களில் தொழுநோயும் ஒன்றாகும். இது பரம்பரை நோயல்ல. இது ஒரு தொற்று நோயாகும். நோயாளி தும்மும் போதும் இருமும் போதும் சிந்தும் சிறுதுளிகளினால் ஒருவரிடமிருந்து மற்றையவருக்கு பரம்புகின்றது. இதன் நோயரும்பு காலம் 3-5 வருடங்கள் வரை நீண்டு காணப்படலாம். இது எல்லா வயதினரையும் ஆண், பெண் இரு பாலினரையும் தாக்கக் கூடியது. பெரும்பாலும் பொருளாதார வளம் குன்றிய குடும்பத்தினரே இலகுவில் பாதிப்புறுகின்றனர். தோல் மற்றும் நரம்புகளையே இந்த நோய் முதன்மையாகத் தாக்குகின்றது.

**தொழுநோய்க்கு சிகிச்சை உள்ளது**

முன்னைய காலங்களில் குஷ்டரோகம் என அழைக்கப்பட்டதும் இந்த நோயே. இந்த நோயை ஆரம்ப நிலையிலே இனங்கண்டு அதற்கான சிகிச்சையை பெறுபவர் பூரண குணமடையலாம். அங்கவீனம் அடைவதனையும் தவிர்த்துக் கொள்ளலாம். இந்த நோய் முற்றாக குணப்படுத்தக் கூடிய நோயே. அசண்டையீனமாக கவனிக்காதிருப்போமானால் இந்த நோய்ப் பாதிப்பு அதிகரித்து நிரந்தர அங்கவீனமுறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும். இந்த நோயை குணப்படுத்தக்கூடிய மருந்து வகைகள் இங்கு யாழ்ப்பாணத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ளன. குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தோல் நோய் சிகிச்சைப் பிரிவில் அவற்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அதிலும் விசேடம் என்னவெனில் ஒருநாள் மாத்திரை எடுத்தாலே இதன் தொற்றும் தன்மை இல்லாது போவதுடன் அங்கவீனமுறும் துர்ப்பாக்கியமும் இல்லாது போகின்றமையாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டுமே இந்த நோயாளிகள் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டனர். ஆனால் இன்று அவ்வாறில்லாமல் இந்த நோய்த் தாக்கம் பரவலாக காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது. குருநகர், நாவாந்துறை போன்ற பகுதிகளில் அதிக நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோயாளிகள் வேறோர் நோய்க்கு சிகிச்சை பெறச்செல்லும் போது விபத்தாகவே இந்த நோய் இனங்காணப்பட்டுள்ளது. எனவே எம் மத்தியில் தமக்கு இந்த நோய் தொற்றியுள்ளது என அறியாது இந்த நோயுடன் வாழ்வோரின் எண்ணிக்கை இதுவரை இனங்காணப்பட்டோரிலும் அதிகமாகவே இருக்க வாய்ப்புள்ளது. எனவே இந்த நோயின் ஆரம்ப அறிகுறிகளை நாம் அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. குறிப்பாக மக்களுடன் நேரடியாக அவர்களின் சூழலில் தொடர்புற்று சேவை வழங்கும் உத்தியோகஸ்தர்கள் இந்த நோயின் அறிகுறிகளைத் தெரிந்திருப்பின் அவர்களைவழிப்படுத்திச்சிகிச்சைக்குட்படுத்தி அவர்களின் வாழ்வு நிலை கீழ்நோக்கி வீழும் அபாயநிலையை தடுத்திட முடியும். சிகிச்சைக்குட்பட்டவர்கள் தொடர்ந்தும் மாத்திரைகளை உள்ளெடுத்து வருகின்றமையை உறுதி செய்து கொள்ளவும் முடியும். இவ்வாறு செய்யின் இந்த நோய் சமூகத்துக்கு மேலும் பரம்பலுறுவதை தடுத்திட முடியும். இந்த நோய்க்கான மாத்திரைகளை பரிந்துரைக்கப்பட்ட காலம் வரை பாவித்துவரின் பூரண குணம் கிடைக்கும்.

> முன்னைய காலங்களில் குஷ்டரோகம் என அழைக்கப்பட்டதும் இந்த நோயே. இந்த நோயை ஆரம்ப நிலையிலே இனங்கண்டு அதற்கான சிகிச்சையை பெறுபவர் பூரண குணமடையலாம். அங்கவீனம் அடைவதனை யும் தவிர்த்துக் கொள்ள லாம். இந்த நோய் முற்றாக குணப்படுத்தக் கூடிய நோயே. அசண்டையீனமாக கவனிக்காதிருப்போமானால் இந்த நோய்ப் பாதிப்பு அதிகரித்து நிரந்தர அங்கவீனமுறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும்.

**அறிகுறிகள்!**

இந்த நோயின் குணம்குறிகளை பார்ப்போமானால் தோலில் ஏற்படும் தேமல் போன்ற அடையாளங்களாகவோ தளும்புகளாகவோ தோன்றும். இவை வெளிறிய நிறமாகவோ சிவப்பு நிறமாகவோ அல்லது செங்கபில நிறமாகவோ காணப்படும். இவற்றில் கடி, சொறித் தன்மை இருக்காது. இவற்றில் உணர்வுத் தன்மை குறைவாகவோ அல்லது முற்றாக இல்லாதாகவோ காணப்படும். குறிப்பாக நோவு, தொடுகை, சூடு அல்லது வெக்கையை உணரும் தன்மை இருக்காது. இவ்வடையாளங்களில் உரோமங்களும் வியர்வைச் சுரப்பிகளும் கூடக்காணப்படமாட்டா. இவற்றைவிட தோலில் சிறுசிறு கட்டிகளும் மினுமினுப்பான தடித்த தன்மையும் சிலரில் காணப்படலாம்.

நரம்புகளில் ஏற்படும் மாற்றங்களை பார்ப்போமானால் தடிப்படைந்த நரம்புகள், மணிக்கட்டு சோர்வடைதல், விரல்களை நீட்ட முடியாமை, பாதத்தை நிமிர்ந்த முடியாமை அல்லது பாதம் சோர்வடைதல், விறைப்புறுதல் காரணமாக பாதம் அடிக்கடி பொருள்களுடன் மோதுண்டு மாறாத புண்கள் ஏற்படும். கண்களை முழுமையாக மூட முடியாமை இதனால் பிறபொருள்கள் கண்களினுள் விழுந்து கண்கள் சிவப்புறு தல், வீங்குதல் போன்ற அறிகுறிகள் தோன்றும். கவனிக்காது விடுவோமெனில் பார்வையிழப்பு ஏற்படும்.

சாதாரணமாக தேமலுக்குப் பூசப்படும் பூச்சு மருந்துகளுக்கு இந்த தோல் பாதிப்புக்கள் குணமடையமாட்டா. எனவே மேற்சொன்ன ஏதேனும் ஓர் அறிகுறியாவது இருப்பின் அருகிலுள்ள வைத்தியரிடமோ அல்லது தோல் சிகிச்சை நிலையத்துக்கோ சென்று ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல் நன்று.

**அவதானம் அவசியம்**

கால், கைகளில் விறைப்புத் தன்மை கொண்ட நோயாளிகளுக்குக் காயங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். இது மீள முடியாத அங்கக் குறைபாடுகளைக் காலப்போக்கில் ஏற்படுத்திவிடும். எனவே அங்கங்களை பாதுகாக்கும் முயற்சியில் கவனம் செலுத்துதல் வேண்டும். சூடான பொருள்களையோ கூரான ஆயுதங்களையோ கையாளும் போது பாதுகாப்பான அங்கிகளை அணிந்து கொள்ளுதல், பொருத்தமான பாதணிகளை அணிந்துகொள்ளுதல், வீட்டிலிருந்து வெளிக்கிளம்பும் போது பாதுகாப்பு கண் - கண்ணாடிகளை அணிந்துகொள்ளுதல், நித்திரை செய்யும் போதும் கண் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற தடுப்பு முறைகளில் கவனம் செலுத்துதல் நன்று.

இருமும் போது தும்மும் போதும் கைக்குட்டைகளை பாவித்தல் பொது இடங்களில் கண்டபடி துப்புவதைத் தவிர்த்தல் போன்ற பழக்கங்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றையவருக்கும் நோய் பரம்புவதை தடுத்திட முடியும்.

மருந்துப் பாவனைக் காலத்தில் தோல் நிறம் கருமையடைதல், சிறுநீர் சிவப்பு நிறமாக மாறுதல் என்பன போன்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். சிகிச்சை நிறைவில் இவை பழைய நிலைக்கு திரும்பும். சிகிச்சைக் காலத்தில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவு வகைகளை தவிர்த்தல் நன்று. இந்த நோய்க்கான பரிசோதனையை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் செய்து கொள்ள வேண்டும். தமக்கு நோய் தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். சிகிச்சை பெற்றுவரும் நோயாளியைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கான சமூக அந்தஸ்தையும் மரியாதையும் பறித்தல் கூடாது. சிகிச்சை பெற்றுக் கொள்வதனை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நோயாளிகளுக்குப் பிரதேச செயலக - சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாதந்தோறும் உதவிப் பணக்கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகின்றது.

**வாசகர்களுக்கு...!**

**உதயன் சூரியகாந்தியில் இதுவரை இடம்பெற்று வந்த சொற்சிலம்பம் பகுதி அடுத்த வாரம் முதல் உதயன் சஞ்சீவியில் புதுப்பொலிவுடன் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.**

# அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாள்



ச.பிரியங்கா.
*யாழ்.பல்கலைக்கழகம்,*
*உளவியல் துறை.*

நாங்கள் மனிதர்களாக இருக்கிறோம். ஆனால், எம்மிடம் எவ்வளவு மனித நேயம் உள்ளது?. இன்று ஒவ்வொரு மக்களிடையிலும், மதங்களுக்கிடையிலும், இனங்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் தாக்குதல்களும், மனக்கசப்புக்களுமே ஆளுகை புரிகின்றன. இதற்கு அன்பு என்ற மனக்கதவை மூடியிருப்பதே காரணமாகும். எவன் தன்னை முதலில் நேசிக்கிறானோ, அவன் பிறரையும் நேசிப்பவனாகிறான். மாறாக தன்னைத் தான் வெறுப்பவன், பிறரை இலகுவாக வெறுப்பவனாகிறான். இது வெளிப்படையான உண்மையாகும்.

'நாம் சிலரை தோலின் நிறத்திற்காக தவிர்த்தால் அது ஒரு மனிதன் அணிந்திருக்கும் ஆடையைப் பார்த்து அவரை வெறுப்பதற்கு ஒப்பானதாகும்' என்பதற்கேற்ப, நாம் பிறரது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து பிறரை அன்பு செலுத்துவது பிரச்சினைகள், இடையூறுகளை தகர்க்க சிறந்த வழி. அத்தோடு, எம் சொந்த சுபாவத்தை தவிர வேறு எவரும் எம்மை சித்திரவதை செய்வதில்லை. ஆகவே, எம் சுபாவத்தை இனிமையாகவும், அன்பாகவும் மாற்றி எல்லோருடைய அன்பையும் வெல்ல முயல்தல் வேண்டும். உண்மையான அன்பானது புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை, மரியாதை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டதேயன்றி மனக்கிளர்ச்சிகளை அல்ல. இவ்வாறு பிறரை நாம் அன்பால் கட்ட வேண்டுமே தவிர அதிகாரத்தால், அகம்பாவத்தால் அல்ல. இன்றைய சூழ்நிலைகளில் ஒவ்வொரு உயிர்களிடத்திலும் நாம் அன்புமயமான நிலைப்பாட்டை ஒரு புறமாக ஏற்படுத்திவரின் எம் நாட்டின் அசௌகரியங்கள் இனியும் அதிகரிக்கவோ, உருவாகவோ செய்யாது. அன்பை ஆழமான அடித்தளமாக்க வேண்டும். ஒவ்வொரு இன, மதத்தவர்களும் முக மலர்ச்சியுடன் ஒருவரை ஒருவர் மனித நேயப்பண்புடன் நேசித்து வருவது எமக்கும், எம்மை சூழ்ந்தவர்க்கும் சிறந்த சூழலை ஏற்படுத்த வழிவகுக்கும்.

**அனைத்துக்கும் ஊற்று**

மேலும், தவறிழைக்கும் ஒருவனுக்கு அதிகார தொனியுடன் அறிவுரை கூறாது அன்பான வார்த்தைகளால் கூறினால் போதும் அவன் திருந்த வாய்ப்புள்ளது. இதையே, 'அன்பான ஒரு வார்த்தையானது பலரின் வேதனை மிக்க இதயங்களை குணமாக்கவல்லது' எனவும் கூறுகின்றனர். அது மட்டுமன்றி எம்மை அணுகும் எச் சூழ்நிலைக்கும் நாம் அன்புடன் முகங்கொடுக்கும் போது அது எமக்கு வெற்றியே. இவ்வுலகில் இரு உயிர்கள் இணைவது என்றால் அது அன்பின் ஆழத்தினாலேயே. அவ் அன்பு நெருக்கம் இல்லை எனில், உயிர்கள் தோற்றுவிக்கப்படுவது என்பது சாத்தியமற்றது. மாறாக, ஒரு புறம் அது தவறான வழிகளில் இடம்பெறினும், அதிகசதவிகிதம் அன்பினாலே ஆளப்படுகிறது. அன்பு ஒரு மேம்பட்ட உணர்வு, ஆத்மாவின் உயிர் நாடி எனலாம். இவ்வாறாக, தம் சகோதர மக்களிடம் அன்பு செலுத்தாத ஒருவர் தன் வாழ்க்கையில் பெரும் துன்பங்களை நுகர்வதோடு, மற்றையவர்களுக்கு பெரிய இன்னல்களையும் ஏற்படுத்தும் ஒருவராகிறார். மனித இனத்தின் மாபெரும் துன்பமெல்லாம் இப்படியான மனிதர்களிடமிருந்தே முளையிடு கின்றன. அத்துடன், பிறருடன் சுமுகமாக பேசாமல், கலந்து உறவாடாமல் ஒரு மூலையில் இருந்தோமானால் நாம் திறமை குறைந்தவர்களாகிவிடுகிறோம். இவ்வாறு பிறரிலிருந்து ஒதுங்கியிருப்போர் உலக அறிவற்றவர்களாகவும், பிறருக்கு துன்பம் இழைப்பவராகவும் மாறுகின்றனர்.

அன்பே சக்திவாய்ந்த உந்து சக்தி என்பதை உணருங்கள். அன்பினால் முடியாதகாரியம் எதுவுமில்லை. உண்மையான அன்பு எந்தத் தடைகளையும் தகர்த்தெறியும். நாட்டில் அமைதிவேண்டும் எனில் ஒவ்வொருவரும் தம்முள் உள்ள அன்பை உணரவேண்டும். 'இறைவனின் அன்பு முழுமனித இனத்தின் மீதும் அன்பு கொள்ளச் செய்வதுடன் எவரையும் வெறுக்கவைக்காது, இறைவனுடன் அன்பாக இருப்பது மனித இனத்தையே நேசிப்பதற்கு சரியாகும்'. ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் முழுமையாக அன்பை வெளிப்படுத்தி அர்த்தமான வாழ்வை வாழ முயலல் வேண்டும். அதுவே சிறந்த நிலையாகும். பெரிய வசதியானவர்களும் அன்பை எளிமையாக வெளிப்படுத்தும் போது அவர்களது அன்பு ஏழைகளுக்கு சார்ந்ததல்லாது, உண்மையான ஆறுதலாக அமையும். ■


---

# உயிர் கொல்லும் நுண்கடன்

பி.சந்திரமதி
*ஊடகக்கற்கைகள்*
*யாழ். பல்கலைக்கழகம்*

இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் பல விதங்களில் நடுத்தர மக்களுக்கு சவாலாக காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாக நுண் கடன் திட்டம் தற்போது உருவெடுத்துள்ளது.

நுண்கடன் என்பது சிறிய தொகையை கடனாக வழங்குவதிலிருந்து வந்த ஒரு பொருளாதாரத்துவம். பெண் தலைமைத்துவக் குடும்பங்களை சுயதொழில் முனைவோராக மாற்றுவதே இதன் உண்மை நோக்கமாக இருந்தது. இந்தச் செயற்திட்டத்தை நிதி நிறுவனங்கள் வங்கிகள் மேற்கொண்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை முதன் முதலில் பங்களாதேஷின் 'கிராமின்' வங்கியே ஆரம்பித்தது. அதில் பல வறிய மக்களை சுயதொழிலில் ஈடுபடுத்தி வெற்றியும் கண்டது. ஆனால் இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் அதன் நிலைமை வேறு. போர் தின்று தீர்த்த மக்களை நுண் கடன்கள் தூக்கி நிறுத்தும் என நினைத்தால் அது மக்களை மிகப் பெரிய கடனாளிகளாக மாற்றி விட்டிருக்கின்றது. நுண் கடன் நிறுவனங்களின் வட்டி வீதமானது நிறுவனங்களுக்கு நிறுவனம் மாறுப்படுகின்றது. நூறுக்கு 12 வீதத்திலிருந்து நூறுக்கு 30 வீதம் வரை காணப்படுகின்றது. நிதிநிறுவனங்கள் இலாப நோக்கத்திற்காக மட்டுமே செயற்படுவதினாலேயே நுண்கடன் திட்டங்களின் நோக்கம் தலைகீழாக மாறியுள்ளது. இதன் விளைவு குடும்பங்களில் பிளவு, மன உளைச்சல். இதனால் அதிகளவு பெண்கள் தற்கொலை செய்து உயிரை மாய்த்தும் இருக்கின்றார்கள்.



இந்த நுண்கடன் திட்டங்கள் அதிகமாக பெண்களை இலக்காகக் கொண்டு இயங்க ஆரம்பிக்கின்றன. குடும்ப தலைமைத்துவத்தை கவனிக்கும் பெண்களே அவர்களின் இலக்காக காணப்படுகின்றது. அவர்களுக்கான கடன்களை வாரி வழங்குகின்றன. வழங்கி விட்டு கடனை மீள் செலுத்தும் போது எழுகின்ற பிரச்சினைகளின் போது கடன் வாங்குநர்களின் அணுகுமுறை காரணமாக உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு கட்டத்தில் அதுவே தற்கொலைக்கும் தூண்டி விடுகின்றது. நுண்கடன் பிரச்சினைகளின் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் கடந்த வருடத்திலும் அதற்கு முந்தைய வருடத்திலும் ஏறத்தாழ 89 தற்கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் அதிகளவான தற்கொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு அரச அங்கீகாரம் பெற்ற 70 நிறுவனங்களும் சில அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களும் மக்களை கடனாளிகளாக்கும் இத் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

2009ற்கு முற்பட்ட காலத்தில் பணப் புழக்கம் குறைவாக காணப்பட்டது. இதன்போது மக்களினுடைய ஆடம்பர செலவுகளும் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் அதன் பின்னர் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. நடுத்தர மற்றும் வறிய குடும்பங்களும் சுய தொழிலுக்காக வழங்கப்படுகினற கடன்களை தமது ஆடம்பர தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பெற்றுக்கொள்கின்றன. பின்னர் குறித்த தொகையை மீள் செலுத்த முடியாமல் அல்லது மீள் செலுத்துவதற்காக இன்னுமொரு இடத்தில் கடன் வாங்குகிறார்கள். இதனால் மேலும் மேலும் கடனாளியாகின்றனரே தவிர எவ்வித முன்னேற்றமும் ஏற்படுவதில்லை.

குடும்பப் பெண்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர்களை சொந்தக்காலில் சுயதொழிலில் ஈடுபடவைப்பதற்காகவும் கொண்டுவரப்பட்ட இந்தத்திட்டம் தலை கீழாகவே மாறியுள்ளது. இந்தக் கடன் திட்டங்களில் இருந்து காப்பாற்ற மக்களுக்கு இன்னுமோர் திட்டத்தை கொண்டு வரவேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. நிதிநிறுவனங்க ளின் நுண்கடன் திட்டங்கள் அரசின் நேரடிப் பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டு நிறுவனங்களின் நடைமுறை, கடன் வாங்கும் முறை, பயனாளர்களின் தெரிவு, வட்டி வீதம் போன்ற பலவிடயங்கள் முறைப்ப டுத்தப் படாத பட்சத்தில் இவ் நுண்கடன்களால் இன்னும் பல பாதிப்புக்கள் ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ■

# ஒற்றைத் தலைவலிக்கு என்னதான் தீர்வு?



உடற்பாகத்தில் வலி உண்டானாலும் அது உபாதைதான். தனக்கு வந்தாதான் தெரியும் தலைவலியும் வயிற்று வலியும் என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். ஆனால் தலைவலியால் பாதிக்கப்பட்டிருப்பவர்களைக் கேட்டால் எதிரிக்கு கூட தலைவலி வரக்கூடாது என்று புலம்புவார்கள். அத்தகைய கொடூரமிக்கது தலைவலியிலும் வலிமிக்க ஒற்றைத் தலைவலி.

மண்டையைப் பிளக்கும் வலி. இலேசாக மங்கும் பார்வை, வாந்திக்கான அறிகுறி, கண்களைக் கூச செய்து வலியை அதிகப்படுத்தும் விளக்கு வெளிச்சம் இவை எல்லாமே தீவிர ஒற்றைத்தலைவலிக்கான அறிகுறிகள். எந்த மாத்திரைகளுக்கும் கட்டுப்படாத வலி ஒன்று உண்டு என்றால் அது ஒற்றைத் தலைவலி என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

குறிப்பிட்ட நேரங்களில் வரும் என்று சொல்ல முடியாத இந்த வலி குறிப்பிட்ட நேரம் வரை வலியை அதிகரித்துவிட்டே செல்லும். சிலருக்கு தொடர்ந்து மூன்று நாள்கள் வரை வலி இருக்கும். வலியை அனுபவிக்கும் ஒவ்வொரு நிமிடமும் மரண அவஸ்தைதான். இந்த ஒற்றைத் தலைவலிதான் மைக்ரேன் என்று அழைக்கப்படுகிறது.

மருத்துவ ஆய்வுகளில் முக்கியமாகக் கருதப்படும் இந்த தலைவலிக்கு காரணம் இதுதான் என்று இன்றுவரை உறுதியாகக் கண்டறியப்படவில்லை. ஹோர்மோன் பிரச்சினையாக இருக்கலாம். பரம்பரையாகவும் இருக்கலாம். மூளையின் செயல்பாடுகள் அசாதாரணமாகும் போதும் இந்த வலி உண்டாகலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் எதுவுமே உறுதி செய்யப்படவில்லை.

ஒற்றைத்தலைவலி இருபாலரையும் அவஸ்தைக்குள்ளாக்குகிறது என்றாலும் ஆண்களை விட பெண்களையே இது அதிகம் பாதிப்புள்ளாக்குகிறது. சிலருக்கு மைக்ரேன் தலைவலியாக இருந்தாலும் சற்று அவஸ்தையைக் கொடுத்த பிறகு சரியாகிறது. ஆனால் பலருக்கு மண்டையை பிளக்கும் அளவுக்கு வலியை உண்டாக்குகிறது. பணிக்கு செல்வோர் தங்களது பணிகளை கவனத்துடன் செய்ய இயலாமல் தடுக்கும் ஆரோக்கிய குறைபாட்டிற்கான காரணத்தை பட்டியலிட்டிருக்கும் உலக சுகாதார அமைப்பு அவற்றில் ஒன்றாக ஒற்றைத் தலை வலியையும் சேர்த்திருக்கிறது.

ண்மக்ரேன் அறிகுறிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாற்றத்தை உண்டாக்குகின்றன. சிலருக்கு சோர்வு, சிலருக்கு தலைசுற்றல், சிலருக்கு கண் பார்வை மங்குதல், சிலருக்கு சீரற்ற பேச்சு போன்றவை அறி குறியாக இருக்கின்றன. ஒற்றைத் தலைவலி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாது. ஆனால் எந்த வேலையையும் செய்ய விடாமல் தடுக்கச் செய்யும். இத்தருணத்தில் வலி நிவாரண மாத்திரைகள் வலியை கட்டுப்படுத்த மட்டுமே. தீவிர வலியைக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த மாத்திரைகளும் உதவா என்பதை கவனிக்கவேண்டும்.

# தோல் நோய்களைப் போக்கும் கஸ்தூரி மஞ்சள்

கஸ்தூரி மஞ்சள் சாதாரண மஞ்சளை விடச் சற்று மணம் அதிகமுள்ளது. தோல் நோய்களைப் போக்கும் தன்மையைப் பெற்றது. அடிபட்ட வலிகளுக்கும், மூக்கில் வரும் நோய்களுக்கும், வயிற்று வலிக்கும், கட்டிகள் உடையவும், தேமலைப் போக்கவும் கஸ்தூரி மஞ்சள் பயன்படுகிறது. மேலும், இது மணம் தரும் வாசனைப் பொடிகள் தயாரிக்கவும், குளிக்க உதவும் தைலங்களில் சேர்க்கவும் பயன்படுகிறது. இளம் பெண்களில் சிலருக்கு முகத்தில் ஆண்களைப் போல மேலுதட்டின் மீது முடி வளர்வதுண்டு. இதைப் போக்க கஸ்தூரி மஞ்சளைப் பொடித்து அல்லது குழைத்து முகத்தில் பூசிக் கழுவி வந்தால் முடி வளர்வது தடைப்படும். முகத்தில் பொலிவு ஏற்படும்.



பெண்கள் கஸ்தூரி மஞ்சள் கிழங்கைப் பொடித்து, உடல் முழுவதும் பூசி, சற்று நேரம் கழித்து குளித்தால் தோல் நோய்கள் நீங்கும். கரப்பான் புண்கள் விரைவில் குணமாகும்.

ஆண்கள் கஸ்தூரி மஞ்சளை முகத்தில் பூசக் கூடாது. முடி வளருவது அங்கங்கு தடைப்படும்.

கஸ்தூரி மஞ்சளை இடித்துத் தூள் செய்து துணியில் சலித்து எடுக்க வேண்டும். இதில் ஐந்து குன்றிமணி அளவு தேனில் கலந்து சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும்.

கஸ்தூரி மஞ்சளை வெங்காயச் சாற்றில் குழைத்துக் கட்டிகள் மீது பூசினால் கட்டிகள் உடையும்.

கஸ்தூரி மஞ்சளை அரைத்துச் சூடு படுத்தி அடிபட்ட இடத்தில் தடவினாலும், கட்டினாலும் வீக்கமும் வலியும் குறையும்.

கஸ்தூரி மஞ்சள் தூளைத் தேங்காய் எண்ணெயில் கலந்து அடிபட்ட புண் அல்லது சிரங்குகளுக்கு மேல் பூசினால் விரைவில் குணமாகும்.

சாதாரண மஞ்சளுக்குப் பதிலாக, பெண்கள் கஸ்தூரி மஞ்சளை இடித்துத் தூளாக்கியோ கல்லில் அரைத்தோ முகத்திற்குப் பூசி வந்தால், முகத்தில் பொலிவு ஏற்படும். முகப் பருக்கள், தேமல்கள் ஆகியவை தலை காட்டமாட்டா.

# இறால் புரியாணி



**தேவையான பொருள்கள்**

இறால் - 1/2 கிலோ
பாஸ்மதி அரிசி - 400 கிராம்
வெங்காயம் - 4
தக்காளி - 3
கறுவாப்பட்டை - 1 துண்டு
ஏலக்காய் - 3
கிராம்பு - 3
பச்சை மிளகாய் - 2


இஞ்சிபூண்டு விழுது - 11/2 மேசை கரண்டி
கரம்மசாலா தூள் - 3 மேசை கரண்டி
கொத்தமல்லி - தேவையான அளவு
புதினா இலை - தேவையான அளவு
பிரியாணி இலை - தேவையான அளவு
எலுமிச்சை 1
நெய் - 4 மேசை கரண்டி
எண்ணெய் - 4 மேசை கரண்டி
தயிர் - 1 கோப்பை
தேங்காய் பால் - 2 மேசை கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

இஞ்சி பூண்டுடன் பட்டை கிராம்பு ஏலக்காய் தயிர் வெங்காயம் சேர்த்து கலந்து வைக்கவும். இறாலை நன்கு கழுவி சுத்தம் செய்து வைக்கவும். வெங்காயம், தக்காளியையும் நீள வாக்கில் வெட்டி வைக்கவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய், நெய்யையும் ஊற்றவும். எண்ணெய் காய்ந்த பின்பு வெங்காயத்தை போடவும். வெங்காயம் பொன்னிறமானதும் இஞ்சிபூண்டு கலவையை போடவும். பச்சை வாடை போகும் வரை வதக்கவும். அடுத்து தக்காளி உப்பு கரம் மசாலாத்தூள் சேர்க்கவும். நன்கு வதக்கியதும் பச்சை மிளகாய், கொத்தமல்லி இலை, புதினா இலை போட்டு கிளறி பின்பு இறாலை சேர்க்கவும். 5 முதல் 10 நிமிடம் வேகவைத்து பின் தேங்காய் பால், தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க விட்டு அடுப்பை அணைக்கவும்.

அரிசி நன்றாக கழுவி தண்ணீர் சேர்த்து குக்கரில் வேகவைக்கவும். அதில் இறால் கலவையைக் கலந்து தேவைப்பட்டால் உப்பு சேர்த்து குக்கரில் விசில் போடாமல் 20 நிமிடங்கள் வைத்து இறக்கவும். பிரியாணி தயாரான பின்பு கடைசியாக எலுமிச்சை சாறு ஊற்றி பரிமாறவும். சூடான சுவையான இறால் புரியாணி தயார்.

# கர்ப்பிணிப் பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள்!



கர்ப்பிணிப் பெண்கள் சீரான உணவை உட்கொள்வது அவசியம். ஏனென்றால் அவர்கள் உட்கொள்ளும் உணவு குழந்தை வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். எந்தவொரு ஊட்டச்சத்துக்களின் குறைபாடும் குழந்தைகளில் பிறப்பு குறைபாடுகளுக்கு வழிவகுக்கும். கர்ப்பத்திற்கு முன்னும், பின்னும் தாய்க்கும் ஊட்டச்சத்து குறைந்த அளவு இருந்தால், பிறக்கும் குழந்தை எடை குறைபாடோடு பிறக்கக் கூடும். எடை குறைவாக பிறந்த ஒரு குழந்தைக்கு நோயெதிர்ப்பு பலவீனமடையக்கூடும். அதோடு பிற்கால வாழ்க்கையில் நீரிழிவு மற்றும் இதய நோய்கள் போன்ற ஆபத்துகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளதாம்.

**இரும்புச்சத்து**

குழந்தைக்கு ஒக்ஸிஜனை வழங்க இரும்புச்சத்து முக்கியமானது. இரும்புச்சத்து நிறைந்த இறைச்சி, பட்டாணி, உலர்ந்த போஞ்சி மற்றும் தானியங்களை உட்கொள்ள வேண்டும். அதோடு கர்ப்பத்தின் இரண்டாம் பாதியில் மருத்துவ ஆலோசனைப்படி, ஃபோலிக் அமிலத்துடன் இரும்புச்சத்து உட்கொள்ள இந்திய அரசு பரிந்துரைத்துள்ளது.

**கல்சியம்**


வலுவான எலும்புகள் மற்றும் பற்களை உருவாக்க கல்சியம் தேவைப்படுகிறது. கல்சியம் அதிகமுள்ள சீஸ், தயிர், பால் மற்றும் மீன் ஆகியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**விற்றமின் பி 6**

இந்த விற்றமின் உட்கொள்ளும் கொழுப்பு, புரதம் மற்றும் கார்போஹைட்ரேட்டுகளை சரியாகப் பயன்படுத்த உதவுகிறது. விற்றமின் பி 6 பன்றி இறைச்சி, கோழி, மீன், முட்டை, காய்கறிகள், வாழைப்பழங்கள், முழு தானியங்கள் போன்றவற்றில் காணப்படுகிறது.

# சர்வதேச நல்ல உறவுகளுக்குத் தேவை போர்க் கருவிகள் அல்ல: பேச்சுக்களே!

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக வருகை விரிவுரையாளர்.*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*



2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் திருப்பீடத்துடன் தூதரகத் தொடர்புகள் கொண்டிருக்கும் உலகின் 183 நாடுகளைச் சேர்ந்த தூதர்களை திருப்பீடத்தில் சந்தித்து அவர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாக விளங்கும் நம்பிக்கையை மையப்படுத்தி தன் கருத்துக்களைப் பதிவு செய்தார். அதில் 2019ஆம் ஆண்டில் தான் மேற்கொண்ட திருத்தூதுப் பயணங்கள் மற்றும் உலகில் நிலவும் முக்கியமான சிக்கல்களையும் அவை உருவாக்கும் வாய்ப்புக்களையும் தெளிவாக்கினார். திருத்தந்தையின் அந்த உரையை இவ்வாறு நோக்குவோம்.

**சர்வதேச உறவுகளின் தலையாய நோக்கம்**

குழந்தையொன்று பிறக்கும்போது எழும் அழுகுரல் மகிழ்வையும் நம்பிக்கையையும் உருவாக்குவதுபோல் புத்தாண்டு ஒன்று பிறந்துள்ள வேளையில் நம்பிக்கை உருவாக்குகிறது என்ற கருத்தை மையப்படுத்தி கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் சர்வதேச தூதர்களுக்கு வழங்கிய உரையை ஆரம்பித்தார்.

அமைதி மற்றும் ஒருங்கிணைந்த மனித முன்னேற்றம் ஆகியவை திருப்பீடம் கொண்டிருக்கும் சர்வதேச உறவுகளின் தலையாய நோக்கமாக உள்ளது என்பதை தன் உரையின் துவக்கத்தில் தெளிவுபடுத்தியத் திருத்தந்தை இந்த நோக்கம் திருப்பீடத்தில் செயலாற்றும் பல துறைகளிலும், திருப்பீடத்தின் சார்பாக பல நாடுகளில் பணியாற்றும் பிரதிநிதிகளிடமும் வெளிப்படுகிறது என்று குறிப்பிட்டார். இந்த நோக்கங்களை செயல்படுத்தும் முறையில் கடந்த ஆண்டு திருப்பீடம் காங்கோ குடியரசு, மத்திய ஆபிரிக்க குடியரசு, புர்கினா பாசோ மற்றும் அங்கோலா ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டமையை திருத்தந்தை நினைவுகூர்ந்தார்.

2019ஆம் ஆண்டில் தான் மேற்கொண்ட திருத்தூதுப் பயணங்களை தான் திரும்பிப் பார்க்க விழைவதாகக் கூறிய திருத்தந்தை இப்பயணங்கள் உலகில் நிலவும் பல்வேறு முக்கியமான சிக்கல்களையும், அவை நமக்கு உருவாக்கும் வாய்ப்புக்களையும் தெளிவாக்கின என்று எடுத்துரைத்தார். கடந்த ஆண்டின் ஜனவரி மாதம் பனாமா நாட்டில் நிகழ்ந்த 34ஆவது உலக இளையோர் நாள் நிகழ்வுகளில் தான் கலந்துகொள்ள சென்றபோது அங்கு உலகின் ஐந்து கண்டங்களைச் சார்ந்த இளையோர் நம்பிக்கையோடும் கனவுகளோடும், கூடிவந்து உரையாடல்களையும் செபங்களையும் மேற்கொண்டது நாம்பெற்றிருக்கும்பெரும் வாய்ப்பாகத் தெரிந்தது என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்

**முதிர்ந்தோரும் இளையோர் கொண்டிருக்கும் நம்பிக்கை**

திருஅவைப் பணியாளர்களும் வயதில் முதிர்ந்தோரும் இளையோர் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குலைக்கும் வண்ணம் அவர்களை தவறாகப் பயன்படுத்திவரும் கொடுமையைக் குறித்து சிந்திக்க கடந்த ஆண்டு வத்திக்கானில் நடைபெற்ற முக்கிய ஆயர்கள் கூட்டத்தைக் குறித்து திருத்தந்தை தன் உரையில் குறிப்பிட்டார். இளையோரையும் சிறியோரையும் தவறான வழிகளில் பயன்படுத்தும் போக்கு உலகின் பல துறைகளில் நிகழ்வதைத் தடுக்க எம்மிடம் இருக்கும் ஒரு சிறந்த கருவி கல்வி என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ், 2020ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி உலகளாவிய அளவில் தான் ஒரு நிகழ்வை திட்டமிட்டுள்ளதாகவும் அந்த நிகழ்வில் கல்வியின் தாக்கம் குறித்து பேசப்படும் என்றும் தெரிவித்தார்.

கல்வி என்பது கல்விக்கூடங்களில் கிடைப்பது மட்டுமல்ல மாறாக அது குடும்பம், திருஅவை, சமுதாய அமைப்புக்கள் என்று பல வடிவங்களில் கிடைக்கும் ஓர் அற்புதக் கொடை என்பதை திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்.

**மாற்றங்களைக் கொணர முயலும் இளையோர்**

உண்மையைத் தேடும் இளையோர் பல வழிகளிலும் மாற்றங்களைக் கொணர முயற்சிகளைத் துவக்கியுள்ளனர் என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ், சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு பெற்றுள்ள இளையோர் உலகத் தலைவர்களை இந்தப் பிரச்சினையின் பக்கம் திருப்புவதற்கு அரும்பாடுபட்டு வருகின்றனர் என்பதை குறிப்பிட்டுப் பேசினார். சுற்றுச்சூழல் குறித்து இளையோர் உணரும் ஆபத்துக்களை, உலகத் தலைவர்கள் உணரவில்லை என்பதை, அண்மையில் மட்ரிட் நகரில் நடந்து முடிந்த பருவநிலை மாற்ற உச்சி மாநாடு நமக்கு உணர்த்தியுள்ளது என்பதை வருத்தத்துடன் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**அமேசன் சிறப்பு மாமன்றம்**

சுற்றுச்சூழல் குறித்து சிந்திக்கும் வேளையில் அமேசன் பகுதியை மையப்படுத்தி வத்திக்கானில் கடந்த ஆண்டு நிகழ்ந்த சிறப்பு ஆயர்கள் மாமன்றத்தையும் தன் உரையில் நினைவுகூர்ந்த திருத்தந்தை ஒருங்கிணைந்த சூழலியல், பழங்குடியினரின் உரிமைகள் ஆகியவற்றில் திருஅவை கூடுதல் கவனம் செலுத்த விழைகிறது என்பதையும் வலியுறுத்திக் கூறினார். அமெரிக்கக் கண்டத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள அமேசன் காடுகளைப்பற்றி சிந்திக்கும் வேளையில் தென் அமெரிக்க கண்டத்தின் பல நாடுகளில் நிகழும் மோதல்களையும் நாம் சிந்திக்க வேண்டும் என்று திருத்தந்தை அழைப்பு விடுத்தார். இந்த மோதல்களின் அடித்தளமாக விளங்கும் சமநிலையற்ற தன்மை, அநீதி, ஊழல், வறுமை, குலைந்துபோன மனித மாண்பு ஆகியவை குறித்து தென் அமெரிக்க நாடுகளில் உள்ள தலைவர்கள் அவசரமாகவும் அவசியமாகவும் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார், திருத்தந்தை.

**ஐக்கிய அரபு அமீரகப் பயணம்**

2019ஆம் ஆண்டில் தான் மேற்கொண்ட இரண்டாவது பயணம் ஐக்கிய அரபு அமீரகத்தில் இடம்பெற்றது என்பதை தன் உரையில் நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ், தானும் அல் அசார் தலைமைக் குருவும் கையொப்பமிட்ட ஓர் அறிக்கை, உடன் பிறந்த உணர்வுடன் உலகத்தினர் இணைந்து வாழமுடியும் என்பதையும், அதன் வழியே அமைதியைக் கொணர இய லும் என்பதையும் உலகிற்குக் கூறுகிறது என்று எடுத்துரைத்தார். தான் மொரோக்கோ நாட்டுக்கு மேற்கொண்ட பயணத்தின் இதயமாக, அமைதி மற்றும் நம்பிக்கை ஆகிய விழுமியங்கள் விளங்கின என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, மத்தியக் கிழக்குப் பகுதி நாடுகள் பலவற்றில் நிலவும் அமைதியற்ற நிலை குறித்து. இவ்வுரையில் விவரமாக எடுத்துரைத்தார்.

**மத்திய கிழக்கு**

பத்து ஆண்டுகளாக போரினால் சீரழிக்கப்பட்டுள்ள சிரியாவைக் குறித்து கவலையுடன் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ், கோடிக் கணக்கில் அந்நாட்டை விட்டுவெளியேறும் புலம்பெயர்ந்தோருக்கு புகலிடம் கொடுத்துவரும் ஜோர்டான் மற்றும் லெபனான் நாடுகளை நன்றியுடன் நினைவுகூர்ந்தார். அண்மையில் ஈரானுக்கும் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும் இடையே உருவாகியுள்ள மோதல்களால் போரின் விளைவுகளிலிருந்து மீண்டுவரும் ஈராக் நாடு பாதிக்கப்பட்டுள்ளது மிகவும் வேதனை அளிக்கிறது என்பதைகுறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை அந்தப் பகுதிகளில் மீண்டும் உரையாடல் முயற்சிகள் மேற் கொள்ளப்படவேண்டும் என்ற தன் வேண்டுகோளை வலியுறுத்திக் கூறினார்.

மத்தியக் கிழக்குப் பகுதியில் பல ஆண்டுகளாகத் துன்புற்றுவரும் யேமன் நாட்டில் மனிதாபிமான பேரிடர் நிகழ்ந்து வருகிறது என்பதை தன் உரையில் நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் யேமன், லிபியா ஆகிய நாடுகளில் நிலவும் கொடுமைகளிலிருந்து தப்பித்துச் செல்லும் பல்லாயிரம் மக்கள், மனித வர்த்தகம், பாலியல் கொடுமைகள் ஆகிய அநீதிகளுக்கு உள்ளாகின்றமையையும் எடுத்துரைத்தார். கொடுமைகளிலிருந்து தப்பித்துச் செல்வோர் அடுத்த நாடுகளில் புகலிடம் தேடும் வேளையில் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவது மனிதகுலத்தின் கடமை என்பதை, தன் உரையில் வலியுறுத்திக் கூறினார் திருத்தந்தை.

கிழக்கு ஐரோப்பாவின் பல்கேரியா வட மாசிடோனியா மற்றும் ரொமேனியா ஆகிய நாடுகளில் கடந்த ஆண்டு மேற்கொண்ட பயணங்கள் குறித்து தன் உரையில் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கிழக்கும் மேற்கும் சந்தித்து. உரையாடல்களை மேற்கொள்வதன் அவசியத்தை, இந்தப் பயணங்கள் தனக்கு உணர்த்தின என்று எடுத்துரைத்தார்.

நாடுகளுக்கிடையே எழும் வேறுபாடுகளை போர் கருவிகள் வழியாக அல்லாமல் உரையாடல் வழியே தீர்த்துக் கொள்வதே நமக்கு மிகவும் தேவையான யுக்தி என்று கூறிய திருத்தந்தை, பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டதன் முப்பதாம் ஆண்டு நிறைவு கடந்த ஆண்டு சிறப்பிக்கப் பட்ட வேளையில் எந்த ஒரு சுவரையும் நாம் வீழ்த்த முடியும் என்பதை நாம் குறிப்பாக நினைவு கூர்ந்தோம் என்று கூறினார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆபிரிக்காவின் மொசாம்பிக், மடகாஸ்கர், மவுரிசியஸ் ஆகிய நாடுகளில் மேற்கொண்ட பயணங்கள் குறித்துப் பேசிய திருத்தந்தை குடும்பங்களையும், சமுதாயக் குழுக்களை யும் மையப்படுத்தி உருவாகும் அரசுகளின் முயற்சிகள் வெற்றி பெறும் என்ற எண்ணத்தை இந்தப் பயணங்கள் தனக்குள் உருவாக்கின என்று எடுத்துரைத்தார்.

**தாய்லாந்து மற்றும் ஜப்பான் பயணம்**

கடந்த ஆண்டின் இறுதியில் தாய்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் தான் மேற்கொண்ட பயணம் குறித்து நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ், பல்வேறு கலாசாரங்களின் சந்திப்புக்கள் தனக்கு நம்பிக்கை தருவதாகக் கூறினார். அத்துடன் அணு ஆயுத மற்ற உலகம் சாத்தியம் என்பதை ஜப்பான் நாட்டுப் பயணம் தன் உள்ளத்தில் ஆழமாகப் பதித்தது என்பதை குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அணு ஆயுதக் குறைப்பு பற்றி நியூயோர்க் நகரில் இடம்பெறவிருக்கும் முக்கியமான கூட்டத்தைப் பற்றியும் நினைவுறுத்தினார்.

**ஆஸ்திரேலிய மக்களுடன்...**

தான் இதுவரை பயணம் மேற்கொள்ளாத ஆஸ்திரேலியா நாடு தற்போது தன் நினைவுகளில் பெரிதும் உள்ளது என்பதைக் குறிப்பிட்ட திருத்தந்தை அந்தநாட்டு மக்களுடன் தான் செபத்தில் ஒன்றித்திருப்பதாக உறுதியளித்தார்.



# மீண்டும் மிரட்ட வருகின்றது அரண்மனை - 3

இயக்குநர் சுந்தர் சி, அரண்மனை படத்தின் மூன்றாம் பாகத்தை இயக்க இருக்கிறார். சுந்தர் சி இயக்கத்தில் வினய், ஹன்சிகா, ஆண்ட்ரியா, ராய் லட்சுமி, சந்தானம், கோவை சரளா உட்பட பலர் நடித்து சூப்பர் ஹிட்டான படம் அரண்மனை. யு.கே.செந்தில்குமார் ஒளிப்பதிவு செய்திருந்தார். பேய்ப் படமான இது, கடந்த 2014 ஆம் ஆண்டு வெளியானது. இதையடுத்து இதன் இரண்டாம் பாகத்தை இயக்கினார். இதில், த்ரிஷா, சித்தார்த், ஹன்சிகா, பூனம் பஜ்வா, சூரி உட்பட பலர் நடித்திருந்தனர்.
2016ஆம் ஆண்டு வெளியான இந்தப் படமும் பேசப்பட்டது.

இந்த நிலையில் இதன் மூன்றாம் பாகத்தை சுந்தர். சி இய்க்க உள்ளார். இதை சன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. இதில் ஹீரோவாக நடிக்க ஆர்யா தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார் . நாயகியாக ராஷி கண்ணா நடிப்பார் என்று தெரிகிறது. இவர் தமிழில், அடங்கமறு, அயோக்யா படங்களில் நடித்தவர். இன்னும் இரண்டு ஹீரோயின்களும் ஒரு முன்னணி ஹீரோவும் நடிக்க உள்ளனர் எனக் கூறப்படுகிறது. மற்றும் விவேக், யோகிபாபு உட்பட பலர் நடிக்க உள்ளனர் .






எப்பொழுது கவலையும்,ஏக்கமும் உன்னைப் பற்றிக்கொள்கினவோ அப்பொழுது பொறுமையாக இரு... பொறுமை இலையைப்போல் மென்மையானது. அந்த மென்மையான பொறுமையால்தான் மகிழ்ச்சிக்கான நுழைவாயிலை திறக்க முடியும்.




பொருள்களின் மீதோ,மனிதர்களின் மீதோ காதலில் விழுந்துவிட வேண்டாம். மனிதர்கள் காணாமல் போய்விடுவார்கள். பொருள்கள் உடைந்துவிடும்.

## twitter

உள்ளூராட்டக்காரன்
@shivaas_twitz

பணம் சம்பாதிக்க ஆயிரம்
வழிகள் இருக்கு...
ஆனா நாம போற வழியில
தான் ஆயிரம்
பிரச்சினைகள் இருக்கு

கடைநிலை ஊழியன்
@Suyanalavaathi

பஸ்ஸில் ஜன்னல்
சண்டைக்கு முற்றுப்புள்ளி
வைத்துவிடுகிறது
குளிர்காலம் !!

பாண்டி பிரகாஷ்
@pandi_prakash_


மற்றவர்கள் சிரிப்பே நம்
சந்தோசம் என்றெண்ணியே
நம் சிரிப்பைத் தொலைத்து
விட்டோம்..

தேன்மொழி
@thenmozhi_ms

மனிதனுக்கு ABCD தெரியும்
ஆனா Q ல போகத் தெரியாது.
எறும்புகளுக்கு ABCD
தெரியாது ஆனா Q ல
போகத் தெரியும்.

கடைநிலை ஊழியன்
@Suyanalavaathi

வயதிற்கேற்ற பக்குவம்
இல்லை என்றால்,
வயதிற்கேற்ற மரியாதையை
எதிர்பார்க்காதே !!







"ஔவை: சுட்ட பழம்
வேண்டுமா? சுடாத பழம்
வேண்டுமா...??

"ஒரு கிலோ வெங்காயம்
போதும் முருகா..!!!"

மண் வாசனை வருகிறதா
மழை வருகிறது என்று
அர்த்தம்..!!
தார் வாசனை வருகிறதா
தேர்தல் வருகிறது என்று
அர்த்தம்.."







## நல்லெண்ணத்தை விதைப்போம்

நம்முடைய இரக்கம்,நற்செயல்கள் .ஆகியவற்றை விதையாகத் தூவும் போது ஏதோ ஒரு வடிவத்தில் நம் ஆளுமையின் ஒரு பகுதியை அடுத்தவரிடம் கொடுத்துவிட்டு .அவரிடமிருந்து வேறொன்றை நாம் பெற்றுக் கொள்கிறோம். இதையே இன்னும் சற்று ஊன்றிப் பார்த்தால் எதிர்பாராத கண்டுபிடிப்புகள் கூட நமது அறிவுக்குத் தட்டுப்படக்கூடும் .கடைசியில் நம்முடையே வேலையே கூட ஒரு விஞ்ஞானம் போல நமக்குத் தோன்ற ஆரம்பித்து விடும்.
நமது வாழ்க்கையை அதுவே ஆட்கொண்டு முழுமைப்படுத்தியும் விடும். மற்றொரு விதமாகச் சொல்லப் போனால் உங்களால் பரப்பப் பட்ட எண்ணங்கள், தூவப் பட்ட விதைகள் ஒரு கட்டத்தில் உங்களுக்கே கூட மறந்து போய் விடலாம்.ஆனால் அவை வளர்ந்து வடிவமெடுக்கும். உங்களிடமிருந்து ஒரு விடயத்தை பெற்றுக் கொண்ட ஒருவன் அடுத்தவனுக்கு அதை அளிப்பான். மனித குலத்தின் எதிர் கால விதியை நிர்ணயிப்பதில் நீங்கள் ஆற்றும் பங்கு எது என்பதை உங்களால் எப்படி அறுதியிட்டுச் சொல்ல முடியும்? இத்தகைய அறிவும் தெளிவும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வருவன. இந்தப்பணி என்பதில் ஒட்டு மொத்தப் பார்வையும் இருந்தால் குறைந்த பட்சம் ஆற்றல் வாய்ந்த ஏதாவது ஒரு விதையை நாம் விதைப்போம் .பயனுள்ள திறன் மிகுந்த எண்ணத்தை விதைத்து அதை இந்த உலகத்துக்கு விட்டுவிட்டுப் போவோம்.

- தஸ்தயேவ்ஸ்கி

# ஆணவம் கொள்வது பெரிய முட்டாள்தனம்



ஒரு நாள், ஏழை விவசாயி ஒருவர் அருகில் உள்ள கிராமத்திற்கு நடந்து சென்றார். அது ஒரு கோடை காலம்.

வெயில் சுட்டெரித்து விவசாயிக்கு பசி வயிற்றைக்கிள்ளியது. வெயில் காரணமாகத் தாகமும் எடுத்தது. சோர்வடைந்த அவர், சாலை ஓரத்தில் இருந்த மரத்தடியில் நிழலில் ஒதுங்கினார்.

அப்போது அங்கு ஓர் இளைஞன் வந்தான். அவன் மெத்தப்படித்த மேதாவி. தனக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற எண்ணம் கொண்டவன். தான் சந்திக்கும் நபர்களிடம் தனது புத்திசாலித் தனத்தைவெளிப்படுத்திக் கொள்வான்

மேலும் தனக்குத் தெரியாதது எதுவும் இல்லை என்ற ஆணவம். அப்படி தெரிந்தால் அதை தனக்குக் கூறுமாறு பிறரிடம் கேட்பான். அவனது இந்த ஆணவப்பெருக்கை அறிந்த பலரும் அவனைக் கண்டால் ஒதுங்கிச் செல்லத் தொடங்கினார்கள். இதைத் தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்ட அந்த இளைஞன், தன்னைப்போல சிறந்த கல்வியாளர் யாரும் இல்லை என்ற அகந்தையுடன் இருந்தான்.

அந்த இளைஞன் மரநிழலில் ஒதுங்கி இருந்த விவசாயியைப் பார்த்தான். உடனே அவரிடம் பேச ஆரம்பித்தான். ஐயா விவசாயி நான் நிறையப் படித்திருக்கிறேன். எனக்கு எல்லாமே தெரியும். இருந்தாலும் எனக்குத் தெரியாத எதுவும் உங்களுக்கு தெரிந்தால் அதைக் கூறுங்கள் பார்க்கலாம் என்று ஆணவத்துடன் பேசினான்.

அந்த இளைஞனின் ஆணவம் குறித்து அந்த விவசாயி ஏற்கனவே அறிந்திருந்தார். எனவே அவர் அமைதியாக இருந்தார்.

அது அந்த இளைஞனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவன் என்னதான் பேசினாலும் அதற்கு எந்த பதிலும் சொல்லாமல் விவசாயி மௌனம் காத்தார்.

இந்த நிலையில் அந்த இளைஞன் தன்னிடம் இருந்த உணவுப்பொட்டலத்தைப் பிரித்தான். சாப்பாட்டைப் பார்த்ததும் விவசாயிக்கு பசி அதிகரித்தது. அவர் கண்களில், 'கொஞ்சம் உணவு கிடைக்காதா?' என்ற ஏக்கம் எட்டிப்பார்த்தது. இதை வைத்து அந்த விவசாயியை மடக்க அவன் நினைத்தான்.

இதையடுத்து அந்த விவசாயியிடம், 'ஐயா என்னிடம் உள்ள உணவை நான் பங்கிட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் எனக்குத் தெரியாத , நான் அறியாத, நான் கற்றுக்கொள்ளாத விஷயம் ஒன்றை நீங்கள் சொல்ல வேண்டும். அப்போது தான் என்னிடம் உள்ள உணவை உங்களுக்குக் கொடுக்க முடியும்' என்றான்.

விவசாயி கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தார். பின்னர் அவர் அந்த இளைஞனுக்குச் சரியான பதிலடி கொடுத்தால் தான் அடங்குவான் என்று கருதினார். பின்னர் அந்த இளைஞனை நோக்கி, 'படித்த முட்டாள் தான் பெருமை பேசித்திரிவான்' என்றார். தொடர்ந்து அவர், 'இது தான் இது வரை நீ கற்றுக்கொள்ளாத விஷயம், நான் அறிந்த விஷயம்' என்றார்.

விவசாயி கூறிய இந்தப் பதிலைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்து போய் விட்டான் அந்த இளைஞன். தற்பெருமை, அகங்காரம் கொள்வது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை அந்த இளைஞன் உணர்ந்து கொண்டான், தன்னை மன்னிக்கும்படி அந்த விவசாயிடம் கேட்டுக்கொண்டு, தனது உணவை மகிழ்ச்சியுடன் அவரிடம் பங்கிட்டுக்கொண்டான்.

## துள்ளி ஓடும் மான்குட்டி


துள்ளி ஓடும் மான்குட்டி
புள்ளி கொண்ட மான்குட்டி
கொம்பு கொண்ட மான்குட்டி
குதிக்கும் நல்ல மான்குட்டி
காட்டில் வாழும் மான்குட்டி
இலையைத் தின்னும் மான்குட்டி
ஓடியாடும் மான்குட்டி
ஒன்றாய் வாழும் மான்குட்டி



## சிந்தனைத் துளிகள்

- வெற்றி தள்ளிப் போகலாம், ஆனால் முயற்சி வீண்போகாது.
- வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும்.
- பிறர் குற்றங்களை மன்னிக்கும் உயர்ந்த குணம், குற்றமற்ற நல்லவர்களிடம் மட்டுமே இருக்கும்.
- தீமை செய்வதற்கு மட்டும் பயப்படு. வேறு எந்தப் பயமும் உனக்கு வேண்டாம்.
- அடுத்தவனுக்கு ஆயிரம் அறிவுரைகள் சொல்வதைவிட, அதில் ஒன்றைக் கடைப்பிடி.

## யார் யாருக்கு எது பிடிக்கும் என்று கண்டுபிடிப்போம்.






# குழந்தைகளின் ஆற்றலை வளர்க்கும் இசை

இசையானது குழந்தைகளின் மொழி ஆற்றல், வாசிப்புத் திறனை வளர்ப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாகவே இசை என்பது உற்சாகத்தைத் தரக்கூடியது, கவலையை மறக்கடிக்கக் கூடியது. அதனால்தான் சிறியவர் முதல் பெரியவர் வரை இசையில் மயங்கிப் போய்க் கிடக்கிறார்கள்.

தொடர்ச்சியான முறையில் இசையைக் கற்று வருவதன் மூலம் வாசிப்பு ஆற்றல் உட்பட மொழி அறிவை மேம்படுத்தக்கூடிய வகையில் மூளையில் மாற்றம் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் உள்ள மனோதத்துவ அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.


அந்த ஆய்வில், ஒரு வருடம் வரை இசைப் பயிற்சி பெற்ற பின்னர் 9 மற்றும் 10 வயதினர் வாசிப்பதில் அதிக திறனுடன் இருப்பதுடன், மொழி அறிவு மேம்பாடு, ஞாபக சக்தியில் சிறப்பாக இருக்கின்றனர் என்வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக அமெரிக்காவின் சிகாகோ மற்றும் லொஸ்ஏஞ்சல்ஸில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

இசையில் பல நல்ல விளைவுகள் ஏற்படுகின்றமை ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. மரம், செடி, கொடிகளைக் கூட இசை ஈர்ப்பதாகவும் சில ஆய்வுகள் கூறுகின்றன.

அந்த வகையில் தற்போதைய கண்டுபிடிப்பு, புதிய ஒரு நன்மையை எடுத்துரைக்கிறது. எனவே இனி மேல் பெற்றோர், இசைக்கும் முக்கியத்துவம் அளிப்பது அவர்களது குழந்தைக்கு நன்மை புரியும் எனலாம்.

குழந்தைகளுக்கு இசை ஆற்றலை வளர்ப்பது பெற்றோர்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.




## கூட்டுவோம்

# சைவ - பௌத்த ஒற்றுமைக்காக வார இறுதியில் இரு நிகழ்வுகள்

## மறவன்புலவு சச்சிதானந்தன் அறிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 26

இந்தவார இறுதியில் யாழ்ப்பாணத்தில் சைவ - பௌத்த ஒற்றுமைக்கான இரு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன என்று சிவசேனை அமைப்பின் சார்பில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

முதல் நிகழ்வில் வணக்கத்துக்குரிய அத்துரலிய ரதன தேரர் கலந்து கொள்வார். புத்தர் சிலைகளையும் பௌத்த பன்ன சாலைகளையும் அமைப்பதால் மட்டுமே பௌத்த சமயத்தையோ புத்தரின் கருத்துக்களையோ பரப்ப முடியாது. அந்தந்த ஊர் மக்கள் ஒப்புதலின்றி புத்தர் சிலைகளை எவரும் எந்த இடத்திலும் வைக்கக்கூடாது என்று அத்துரலியே ரதனதேரர் கூறியுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் கண்டி அஸ்கிரிய பீடாதிபதி கலந்துகொள்கிறார். யாழ்ப்பாண நாகவிகாரையின் வணக்கத்துக்குரிய விமல தேரர் நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்கிறார். புத்தராய்ச் சில புனை துகில் அணிபவர்களே பௌத்தர்களே இல்லாத ஊர்களில் புத்தர் சிலைகளை அமைக்கின்றார்கள். தொல்லைப் படுத்துகின்றனர் என்று விமல தேரர் அவர்கள் கூறியுள்ளார்.

யாழ்ப்பான சைவத் தமிழரசன் சங்கிலியனின் நோக்கையும் போக்கையும் யாழ்ப்பாண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சேர் பொன்னம்பலம் இராமநாதனின் நோக்கையும் போக்கையும் ஒட்டி இன்றைய சைவத் தமிழுலகம் தெற்குப் புத்தர்களோடு கை கோர்க்க விழைகிறது. சங்கிலியனுக்கும் இராமநாதனுக்கும் நன்றியாகச் சைவ சமயத்துக்கும் அரசமைப்புக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டியது புத்தர்களின் தலையாயக் கடன்.

சைவர்களின் வாழ்விடங்களில் சைவர்களின் ஒப்புதலின்றிப் பௌத்த வழிபாட்டிடங்கள் அமைப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த இரு மாநாடுகளும் உதவ வேண்டும். அத்துரலிய ரதன தேரர், விமல தேரர் இருவரையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு ஏனைய பௌத்த பிக்குகள் பணிபுரிய வேண்டும்- என்றுள்ளது. (த-105)



## உதவிகள் வழங்கல்

கிளிநொச்சி,ஜன.26


கிளிநொச்சியைச் சேர்ந்த தாய்மார்கள் 15 பேருக்கு சேலைகளும், மாணவர்கள் இருபது பேருக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஊடாக நேற்று முன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. திருமதி அருளானந்தம் கமலாவதியின் நினைவாக சுவிஸ் நாட்டில் வசிக்கும் அவரது சகோதரன் இந்த உதவியை வழங்கி இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## இனந்தெரியாதோரால் வீட்டு ஜன்னல் உடைப்பு

மருதங்கேணி,ஜன.26

இனந்தெரியாத நபர்களால் வீட்டு ஜன்னல் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.



இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கில் உள்ள வீடொன்றில் கடந்த வியா ழக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர் உறவினர் வீட்டுக்குச் சென்றவேளை இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-160)



# முன்னர் மறுப்பு பின்னர் ஏற்பு

## மன்னார் சபையில் நடந்தது

தலைமன்னார், ஜன. 26

மன்னார் பிரதேச சபையின் கடந்த டிசெம்பர் மாதத்துக்கான செலவின திட்டம் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற 22ஆவது மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதில் எந்தவித மாற்றமுமின்றி நேற்றுமுன்தினம் நடைபெற்ற விஷேட கூட்டத்தில், அதே உறுப்பினர்களே முன்மொழிந்து வழிமொழிந்து ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இக் கூட்டத்தில் மக்களின் அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றப்படாதநிலை நீடிக்குமாயின் சட்டப் பிரச்சினைகளுக்கு உள்ளாவதுடன் சபை கலைக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்படும் என்று சபையில் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த கூட்டத்தில் வரவு செலவுத் திட்டத்தை நிராகரித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஏ.ரி.லுஸ்னின், கடந்த மாத வரவு- செலவு திட்டத்தை மக்களின் நலன் கருதி முன்மொழிகின்றேன் என்று தெரிவித்தும் இதற்கு கடந்த முறை எதிர்ப்புத் தெரிவித் திருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் பி.சகாயநாதன் குரூஸ் வழிமொழிந்தார். சபையில் அது பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த மாதத்துக்கான வரவு-செலவுத் திட்டம் சபையில் முன்வைக்கப்பட்டது. தமிழ்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜே.கொன்சன் குலாஸ் நான்கு விடயங்களைச் சுட்டிக்காட்டி அவற்றை மட்டும் செய்யும்படி தெரிவித்தார். அதன்போது சபைச் செயலாளர், இதுவும் நிராகரிக்கப்படு மாகில் சட்டச் சிக்கல் ஏற்படும் என்று தெரிவித்தார்.

இதன்போது உப தவிசாளர், செயலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைவாக இந்த மாதத்துக்கான செலவினத்தை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தார். பின்னர் அது ஏற்கப்பட்டது. அதன்போது தவிசாளர், 2020க்கான வரவு-செலவு கணக்கறிக்கை மக்களுக்கான அத்தியாவசிய திட்டங்களைக் கொண்டே தயார் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வோர் உறுப்பினரும் நன்கு பரிசீலித்துப் பார்க்கலாம் - என்றார். (த-60)

## வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 4 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெற்று இன்று ஞாயிற்றுக்கிழமை நிறைவடையும்.

திருநாள் திருப்பலி காலை 6.15 மணிக்கு திருச்செபமாலையைத் தொடர்ந்து இடம்பெறும் என்று ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (க)

## 70 கோடியில் நடைபெறவுள்ள

# அபிவிருத்தி தொடர்பில் நேற்றுக் கலந்துரையாடல்

வவுனியா, ஜன. 26



வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 70 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அவை தொடர்பில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று ஆராயப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், நகரசபைத் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள், நகரசபைச் செயலாளர், உயர்அதிகாரிகள், அலுவலர்கள், பயிற்சி மாணவர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்காலத்தில் வவுனியாவில் தேவைப் படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகள் பெறப் பட்டன. தற்போதைய சூழ்நிலை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

வவுனியா நகரசபையின் சிபார்சுக்கு அமைய ஆசிய அபிவிருத்தி வங்கியின் 70 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் வவுனியா பொலிஸ் நிலை யத்துக்கு முன்பாக 45 கோடி ரூபாவில் கடைத்தொகுதியும் வவுனியா நகரசபை பொதுப்பூங்காவில் 15 கோடி ரூபாவில் திறந்த வெளி அரங்கும், நகரசபை பொதுப்பூங்காவில் 10 கோடிரூபாவில் அருங்காட்சியகமும் கலாசார மண்டபமும் அமைக்கப்படவுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டன. (த-18)



## விசேட அறிக்கையாளரை இலங்கைக்கு நியமிக்கவும்

*மனித உரிமைகள் ஆணையாளருக்கு உறவுகள் அனுப்பிய மனுவில் கோரிக்கை*

மன்னார், ஜன. 26

ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு என்று விசேட அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்று வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மனு ஒன்றை உட்பட 4 கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிசேலா பஸ்லெற் யெறியாவுக்கு இந்த விடயம் கடந்த வியாழன் அன்று அனுப்பியுள்ளனர்.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பின்போது அரசபடைகளாலும் துணை இராணுவக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், போர் இறுதி நாள்களில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பன பற்றிய தகவல்கள் போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் வெளிப்படுத்தப்படவில்லை.

கடந்த டிசெம்பர் 16ஆம் திகதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை ஜனாதிபதி கோத்தாபய, "காணாமற் போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதுடன், அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்துச் சிந்திக்க முடியும். அவர்களை மீளக் கொண்டுவர முடியாது" என்றும் கூறியுள்ளார். ஜனாதிபதியின் மேற்படி கருத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி கூறுவது போன்று எமது உறவுகள் காணாமற் போகவில்லை, மாறாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினராலும், அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவக் குழுவினராலும் கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும் எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உயிருடன் இல்லை என்றால் இராணுவமும் அரசும் பொறுப்புக் கூற வேண்டும். குறிப்பாக இறுதிப் போர்க் காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் என்ற அடைப்படையில் தற்போதைய ஜனாதிபதியும் பொறுப்புக் கூற வேண்டியவரே.

இலங்கை அரசு தாம் செய்த குற்றங்களுக்குத் தம்மைத் தாமே தண்டிக்கப்போவதில்லை. எனவே சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றின் மூலமாகவே எமக்கு நீதி கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அந்த வகையில் தங்களிடம் கீழ்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

1. பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு, போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டும். இதை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரைசெய்ய தாங்கள் வலியுறுத்த வேண்டும்.
3. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான ஐ.நா. குழு இலங்கையை முழுமையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேணடும் என்று ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும்.
4. ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு என்று விசேட அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரையையும், வடக்கு கிழக்கில் நிலைவரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும், உறுதுணையாகவும் இருக்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஒன்றை வடக்கு கிழக்கில் நிறுவவேண்டும் எனவும் மீளவும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (த-56)

# ரஞ்சன் மகா நடிகர் கம்மன்பில ஆவேசம்



கொழும்பு, ஜன. 26

ரஞ்சன் ராமநாயக்க சிறந்த நடிகர். இதுவரையில் காட்டாத சிறந்த நடிப்பை கடந்த 21ஆம் திகதி அவர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். எனினும் ரஞ்சனின் முகத்திரை கிழிந்துள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தூய ஹெல உறுமயவின் தலைவர் உதயகம்மன்பில.

சாருகானை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குண்டுதாக்குதல் தொடர்பில் கம்மன்பிலவிடம் கேட்குமாறு ரஞ்சன் 21 ஆம் திகதி சபையில் கூறியிருந்தார். இதனால் ரஞ்சனுக்கு கம்மன்பில விரைவில் பதில் வழங்குவார் என்று கருதப்பட்ட நிலையில், நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விவாதத் தில் இவ்வாறு தெரிவித்தார் உதயகம்மன்பில.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரஞ்சன் ராமநாயக்க சிறந்த நடிகர். இதுவரையில் காட்டாத சிறந்த நடிப்பை கடந்த 21ஆம் திகதி அவர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். போலிக் கருத்துகளை அள்ளிவீசி தான் மகா நடிகன் என்பதை நிரூபித்துள்ளார்.

திருடர்களைப் பிடிக்கும் வீரன் என்ற போர்வையில் அவர் வேறு காரியங்களையே செய்துள்ளார் என்பதைக் குரல் பதிவுகள் ஊடாக அறியமுடிகின்றது. திருடர்களைப் பிடிப்பதற்கு அவர் முயற்சிக்கவில்லை. மாறாக அரசதுறை, நீதித்துறை, காவல்துறை என எல்லாத் தரப்புகளுக்கும் தனது அமைச்சுப் பதவியைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுத்துள்ளார். தான் வீரன் எனக் காட்டிக்கொள்ள முயன்ற ரஞ்சனின் முகத்திரை தற்போது கிழிந்துவிட்டது. உண்மையான வீரனும் எமது நாட்டில் இருக்கிறார். ரஞ்சனிடம் இருந்த குரல் பதிவுகளை சமூக மயப்படுத்தவும், காவல்துறையினரிடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்த நபரே அவராவார்.

அந்த நபரின் பெயர், ஊர் என்பன எனக்குத் தெரியாது. இருந்தாலும் ஜூலியன் அசாஞ்சேவையைப் போல் பெரும் குற்றத்தை அவர் அம்பலப்படுத்தியுள்ளார். எனவே அவரையும் உலக வீரனாகவே கருதவேண்டும்.

சாருகானை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குண்டுதாக்குதல் தொடர்பில் கம்மன்பிலவிடம் கேட்குமாறு ரஞ்சன் 21ஆம் திகதி சபையில் கூறியிருந்தார். ஆனால், நாட்டு மக்களுக்குத் தெரிந்தவையே எனக்கும் தெரியும். அதைவிட மேலதிகமாக ஒன்றும் தெரியாது. விசேட தகவலோ, சாட்சியங்களோ இருந்தால் அவற்றை நான் ஊடகங்களுக்கு சமர்ப்பித்திருப்பேன். இறுதிவரை காத்திருக்கமாட்டேன்' - என்றார். (ம-44)

## முல்லைத்தீவில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு



ஒட்டுசுட்டான், ஜன. 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

2019ஆம் ஆண்டில் சிறந்த விவசாய, பழமர, பண்ணை உற்பத்திகளில் வினைத்திறனாகச் செயற்பட்டு சிறந்த இடங்களை பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாயிகள் பண்ணையாளர்கள் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சதாசிவம் கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக விலங்கு விஞ்ஞானத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சின்னையா, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசாளர் பிரேமகாந்த், விவசாய திணைக்கள அதிகாரிகள் விவசாயிகள், பண்ணையாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)

## மாணவர்களுக்கு கண் பரிசோதனை

சாவகச்சேரி,ஜன.26

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் பார்வைக் குறைபாட்டுடன் கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்குவதற்கான பரிசோதனைகள், சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பாடசாலைகளில் நடத்தப்படும் மருத்துவ பரிசோதனைகளில் கண் பார்வையில் குறைபாடு காணப்பட்ட மாணவர்கள் இனம் காணப்பட்டனர். கண் சிகிச்சை நிபுணரால் விதந்துரைக்கப்பட்ட பிரகாரம் இதுவரை மூக்குக்கண்ணாடி பெறாமல் மாணவர்கள் உள்ளமையை அண்மையில் சுகாதார மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டினார்.

அதற்கமைவாக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர், முதல் கட்டமாக 50 மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கான நிதியை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அண்மையில் கையளித்தனர்.

பாடசாலைரீதியாகத்தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கடந்த வியாழக் கிழமை கண் பரிசோதனை நடத்தப்பட்டது. இவர்களில் பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்களின் விவ ரங்கள் சுகாதார மருத்துவ அதிகாரியால், வலயக் கல்வி பணிப்பாளரிடம் கையளிக்கப்படும்.

அங்கிருந்து மாணவர் கற்கும் பாடசாலைக்கு விவரம் அனுப்பப்பட்டு, மாணவரின் பொருளாதார நிலை கணிக்கப்பட்டு, அதிபரின் சிபார்சுடன் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு கண்ணாடி பெறுவதற்கான வவுச்சர் மாணவர்களுக்கு வழங்கப்படும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை கண் சிகிச்சை நிபுணரின் சிபார்சின் பிரகாரம் மூக்குக்கண்ணாடி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# பனை வெல்லத்துக்கு கிராக்கி, தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 26

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனை வெல்லத்துக்கு கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஆண்டில் குறைந்தளவு பனை வெல்லத்தை உற்பத்தி செய்தன. வறட்சியால் பதநீர் உற்பத்தியும் கடந்த ஆண்டில் குறைந்தே காணப்பட்டது. இதனால் பனை வெல்ல உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது.

கூடுதலான பனை வெல்லங்கள் வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

அதனை விட வடக்கே வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும் பனை வெல்லத்தை ஆர்வத்தோடு அதிகளவில் கொள்வனவு செய்தனர். இதனாலும் பனைவெல்லக் கையிருப்பு முடிந்துவிட்டது.

பனை வெல்லப் பற்றாக்குறை குறித்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம்கொத்தணியின்தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்ததாவது: பனை வெல்லத்துக்கு தற்போது பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அடுத்த மாதம் கூடுதலான உற்பத்தியில் ஈடுபட சங்கங்கள் தயாராகி வருகின்றன. இந்தமுறை போகத்தின்போது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கூடுதலான பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபடவுள்ளன.

எமது சங்கங்களின் பனை வெல்லத்தை கூடுதலான மக்கள் பெற்றுச் செல்கின்றனர். இந்த உற்பத்தியை அதிகரிக்குமாறு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கேட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-17)



# நோர்வே தூதுவரும் யாழ்.மேயரும் சந்திப்பு

யாழ்ப்பாணம்.ஜன.26

இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் ரிரினி ஜோர்னலி ஸ்கெடல், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ்.மாநகர சபையில் கடந்த புதன்கிழமை சந்திப்பு நடைபெற்றது.

மக்களின் பிரச்சினைகள், அரசியல் நிலைமைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன. சந்திப்பின் நிறைவில், தூதுவர் நோர்வே நாட்டின் பிரபல இடத்தின் புகைப்படத்தை நினைவுப் பரிசாகக் கொடுத்தார். மாநகர முதல்வர் நினைவுப் பரிசாக யாழை வழங்கிக் கௌரவித்தார். தூதுவர் நினைவேட்டில் கையொப்பமிட்டார். (க-106)



# பணியாள்களை அறிவிக்கவும்

சாவகச்சேரி.ஜன.26

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில்பணியாள்களை வேலைக்கு அமர்த்த முன்னர், மன்றத்துக்கு அறிவிக்குமாறு மன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (க-9)

# வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.26

வடக்கு மாகாண நிலையான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான வட்ட மேசைக் கலந்துரையாடலொன்று யாழ். ரில்கோ ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கடற்றொழிலாளர் பிரச்சினைகள், அதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் மீனவர்களின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர். (க-20)

# மின்மானி வாசிப்பவர் காலம் தாழ்த்துகிறார்

*மின் பாவனையாளர் பாதிப்பு*

நவாலி வடக்கில் மாதாந்தம் மின்மானி வாசிப்பவர் காலம் தாழ்த்தி வருகின்றமையால் குறித்த அலகுக்கு கூடுதலான அளவை பாவித்த அலகு காட்டுகின்றது. இதனால் பாவித்த அலகின் எண்ணிக்கை அதிகரிப்பதால் கூடுதலான கட்டணத்தை மின்பாவனையாளர் கட்ட வேண்டிய அவலநிலை ஏற்படுகின்றது என்று கவலை தெரிவிக்கின்றனர்.

மின்மானி வாசிப்பவர் ஆகக்குறைந்தது மாதாந்தம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வருவாராயின் இந்தப் பாதிப்பு ஓரளவு குறையும் என்றும் மக்கள் கூறினர்.

இதேவேளை, மின்மானி வாசிப்பாளர்கள் நாள்கள் பிந்தி மின்மானி வாசிக்க வருவதனால் இந்தப் பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏனைய இடங்களிலுள்ள மக்களும் கூறிவருகின்றனர். எனவே மின்சார சபையினர் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-50)

# 112 பேருக்கு உபகரணங்கள் கையளிப்பு

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 112 தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியில் வேல்ட்விசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் முள்ளியவளையில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் மேசன், பைப்லைன், ஒட்டுவேலை, மின் இணைப்பு, தச்சுவேலை. போன்ற தொழில் பயிற்சிகளை மேற்கொண்டவர்களுக்கு தலா இருபதாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன. வேல்ட்விசன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் திலீப் பிரேமதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திட்ட இணைப்பாளர் ஜெனாட்ராச் , தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு உபகரணங்களைக் கையளித்தனர். (ஐ-19)

# பனம் ஒடியலை இனி கொள்வனவு செய்வோம்

*பனை அபிவிருத்திச் சபை தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 26

பனை அபிவிருத்திச் சபை இந்தமுறை கூடுதலான பனம் ஒடியலை உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்யவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபையில் பதிவு செய்யப்பட்ட பனம் பொருள் உற்பத்திச் சங்கங்கள் கூடுதலானளவு பனம் கிழங்குகளை உற்பத்தி செய்துள்ளன. இந்தப் பனம் கிழங்குகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றை பனம் பொருள் உற்பத்திச் சங்கங்களின் பயனாளிகள் கூடுதலாகப் பனம் ஒடியல் உற்பத்தியில் ஈடுபடவுள்ளனர். கொள்வனவு செய்யப்படும் இந்தப் பனம் ஒடியல் கற்பகம் விற்பனை நிலையங்களில் வைத்து விற்பனை செய்யப்படும். பனை அபிவிருத்திச் சபை பனம் ஒடியலை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துவருகின்றது என்று சபை மேலும் தெரிவித்தது. (த-17)






வரணி மத்திய கல்லூரியில் கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு வரணி ஒன்றியத்தினரால் நேற்று முன்தினம் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (க-9)

# வசதிகள் இல்லாததால் அழிகிறது பாரம்பரியம்

## மட்பாண்டத் தொழிலாளர்கள் ஆதங்கம்





மன்னார், ஜன. 26

வசதிவாய்ப்புக்கள் எதுவும் இல்லாததால் பாரம்பரியமாக மேற்கொண்டுவரும் மட்பாண்டத் தொழிலை கைவிடும் நிலையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மட்பாண்டத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நான்கு பேர் மட்டுமே மட்பாண்டத்தொழிலை மேற்கொள்கின்றனர். ஒவ்வொருவரும் வளப்பற்றாக்குறையுடனேயே இந்தத் தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட மடுக்கரைக் கிராமத்தில் மட்பாண்டத் தொழிலை வாழ்வாதாரத் தொழிலாக செய்து வரும் பெருமாள் சுப்பிரமணியம் என்னும் தொழிலாளி தெரிவித்ததாவது;

"இது ஒரு சீசன் தொழிலாக இருப்பதனால் போதிய வருமானம் இல்லாதபடியால் எங்களது பிள்ளைகள் வேறு தொழிலைத் தேடிக் கொண்டுள்ளார்கள். அதனால் எமக்குப் பின் மட்பாண்டத் தொழிலைச் செய்வதற்கு எவரும் இல்லை மழை காலங்களில் மண்களையும் செய்யும் பொருள்களைப் பாதுகாப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்கு உரிய கொட்டில்கள் இடவசதிகள் இல்லை, மழை காலங்களில் எமது தொழிலை பல மாதங்கள் நிறுத்தி வைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. நாம் இவ்வாறு காலங்காலமாக கஷ்டப்படுவதைப் பார்க்கும் புதியவர்கள் இந்தத் தொழிலைச் செய்வதற்கு முன்வருகின்றார்கள் இல்லை. பழகுவதற்கும் யாரும் இல்லை. எமக்குப் பின்னர் மட்பாண்டத் தொழில் மன்னாரில் இருக்குமோ என்பது சந்தேகமாகவே உள்ளது. எனவே எமது வாழ்வாதாரமாக இருந்தாலும், பண்பாடு, பாரம்பரியத்துடன் கூடிய இந்தத் தொழிலை அழியவிடாது பாதுகாப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அப்போதுதான் பழமையான தொழிலைப் பாதுகாக்க முடியும். எமது தொழிலுக்குரிய வசதிகளைச் செய்து தரும் பட்சத்தில் புதியவர்களை உருவாக்கி மட்பாண்டத்தொழிலை பாதுகாக்க முடியும்" என்று அவர் ஆதங்கத்துடன் கூறினார். (ஐ-213)

# மணல் அகழ்வுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவு

மன்னார்.ஜன.26

சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக அச்சங்குளம் மீனவர் சங்கத்தினரால் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது

அச்சங்குளம் பறையன் தீவில் மணல் அகழ்வு செய்வதற்கு மன்னார் நீதிமன்றத்தால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் தடைவிதிக்கப்பட்டது.

இந் நிலையில் நீதிமன்ற கட்டளையை மீறி இரவு பகலாக குறிப்பிட்ட சிலரால் அளவு கணக்கில்லாமல் உழவு இயந்திரம் மற்றும் கனரக வாகனங்களின் ஊடாக மணல் கொண்டு செல்லப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக அச்சங்குளம் புனித சூசையப்பர் மீனவர் சங்கத்தினரால் கடந்த புதன்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் அச்சங்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கருத்து தெரிவிக்கும் போது,

"அச்சங்குளம் கடற்கரையோரக் கிராமமாக இருப்பதனால் மழைக் காலங்களில் கிராமத்தினுள் கடல் நீர் எளிதாக உட்புகுந்துவிடும். அத்துடன் நிலத்தடி நீர் உப்பாகி குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் ஏற்படும்.

மணல் திருடர்கள் மணல் அகழ்வின் போது கரையோரங்களில் பெரியளவிலான கிடங்குகளை வெட்டிவைத்துள்ளனர்.

இதனால் இவ் இடங்களில் தேங்கி நிற்கும் நீர் நிலைகளுக்குள் விழுந்து பெருமளவிலான கால்நடைகள் இறந்துள்ளன என்றும் அச்சங்குளம் கிராம வாசிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு அடுத்த மாதம் ஐந்தாம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)

## அகில இலங்கை சைவப் புலவர் சங்க

# 59 ஆவது பட்டமளிப்பும் சைவ மாநாடும் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 26

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் 59 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடாதிபதி கலாநிதி திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன் சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச.முகுந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கொடிகாமம் வர்த்தக சங்கத் தலைவர் சு.அருணாசலமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை சைவப்புலவர் ஆனந்தி ஜெயரட்ணமும் ஆசியுரையை ஆ.சந்திரசேகரக்குருக்கள், நல்லை ஆதீன சுவாமிகளும் மாநாட்டு சிறப்புரையை இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச.முகுந்தனும் வழங்கவுள்ளனர்.

சைவப்புலவர் சங்கப் பொருளாளர் சைவப்புலவர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் சைவாகமபூஷணம் பட்டத்தை சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் சைவப்புரவலர் பட்டத்தை சு.அருணாசலம் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளார்கள்.

சைவப்புலவர் சங்க தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனின் நெறிப்படுத்தலில் இவை நடைபெறவுள்ளன.

சைவநாதம் 9 மலருக்கான வெளியீட்டு உரையை சைவப்புலவர் சங்க உபதேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சி.க.கமலநாதன், நயப்புரையை யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் ஆகியோர் வழங்குவார்கள். முதற்பிரதியை கொடிகாமம் வர்த்தக சங்கத் தலைவர் சு.அருணாசலம் பெற்றுக் கொள்வார்.

கலை நிகழ்வுகளாக வட்டு இந்துக் கல்லூரி மாணவிகள் செல்வி க.கோகுலவதனி, யோ.கஜாந்தினி ஆகியோரின் புராணபடனம் நிகழ்வு, வட்டு இந்துக் கல்லூரி மாணவி செல்வி தி.பானுப்பிரியாவின் கதாப்பிரசங்கம், வட்டு இந்துக் கல்லூரி மாணவன் செ.பிரசாந்தனின் சிவநடனம் ஆகியன இடம்பெறவுள்ளன. நன்றியுரையை சங்கச் செயலாளர் சைவப்புலவர் த.குமரன் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# செயலமர்வு





நவாலி முருகமூர்த்தி கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத்தினரால் நீரிழிவு தொடர்பான செயலமர்வு நடத்தப்பட்டது.

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தின்போதே இந்தச் செயலமர்வு நடைபெற்றது. நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரையை வழங்கினார். (ஐ-135)

# யாழ். நகரில் வர்த்தகக் கண்காட்சி-2020






























# யாழ். நகரில் வர்த்தகக் கண்காட்சி-2020



























## பணியாளர் தேவை

S.V. முருகேசு நிறுவனத்தின் அங்கர் (Anchor ) விற்பனைப் பிரிவுக்குக் கணினி இயக்குநர்கள் (கணக்கு மற்றும் இதர வேலைகள்) தேவைப்படுவதால் எதிர்வரும் 27 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணியில் இருந்து 4 மணிவரை சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

**S.V. முருகேசு**
இல.154, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2991, 021 492 5825, 021 492 5838

---

இராமகிருஷ்ண மிஷன்
நலன்புரி நிலையம்
17, மருதனார்மடம் வீதி,
உரும்பிராய்ச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 223 2580

இராமகிருஷ்ண மிஷன்
40, இராமகிருஷ்ண வீதி,
கொழும்பு - 6.
தொ.பே : 258 8253
தொ.நகல் : 236 1438
மின்னஞ்சல் - rkmcey@gmail.com

இடம்
ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்.
345, கோயில் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

சுவாமி விவேகானந்தரின்
சிகாகோ சொற்பொழிவுகள் 11.09.1893
125 ஆவது ஆண்டு விழா - 1893 - 2018

திகதி - 31.01.2020
மாலை 5.30 - 8.00 மணி

நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம் ★ ★ வரவேற்பு ★

★ பிரதம விருந்தினர் உரை ★
கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்
பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

★ சொற்பொழிவு ★
**"பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"**
ஸ்ரீமத் சுவாமி பரமசுகானந்த மகராஜ்
தலைவர், ராமகிருஷ்ண மிஷன், விழுப்புரம், தமிழ் நாடு, இந்தியா.

★ தமிழ் இசைப் பாடல்கள் ★ ★ நடன ஆற்றுகை ★
இசைத்துறை மாணவர்கள் நடனத்துறை மாணவர்கள்
இராமநாதன் நுண்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

★ நன்றியுரை ★ ★ மங்களம் ★

- அனைவரும் இந் நிகழ்வுதனில் கலந்துகொண்டு இறையருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம் -

இணை ஆதரவு -
இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு.

இறைபணியில்
சுவாமி அக்ஷராத்மானந்த
தலைவர்.
RAMAKRISHNA MISSION
40, Ramakrishna Road, Colombo 6
Phone - 2588253
Email: rkmcey@gmail.com

---

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 1 ஆம் ஒழுங்கையில் மேல்மாடி வீடு 2 அறைகள், சமையலறை, HALL, குளியலறை, தனிப்பட்ட மின்சார இணைப்புகளுடன் வாடகைக்குண்டு.
தரகர் வேண்டாம். **077 521 7772**

---

## தரமான பொருட்கள் விற்பனைக்கு

**TVM Transport** கட்டடப்பொருள்களை மிகக் குறைந்த விலையில் சிறந்த தரமான பொருள்களான

- METAL 1", 1 1/2", 1/2", 9x6
- CHIPS
- DUST
- MIX
- SAND
- BLOCK STONE

ஆகியவற்றை தெரிவு செய்து கொள்வதற்கு தொடர்பு கொள்ளவும்
**077 766 6620**

---

## Prominent Home Nursing and Health Care

"நாம் உங்களது அன்புக்குரியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு மதிப்புக்குரிய சேவைகளை வழங்குகின்றோம்."
வீட்டு தாதி சேவை மற்றும் சுகாதார பராமரிப்பு பற்றி பெரும்பாலான மக்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு நோய் ஏற்பட்டு அக்கறையுடன் செயற்படக்கூடிய வைத்தியப் பராமரிப்பு தேவைப்படும் போது கைகொடுப்பதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

**எம்மால் வழங்கப்படும் சேவைகள்:**

01. வீட்டு தாதியர் சேவை.
02. சிரேஸ்ட தாதியர் வசதி.
03. அழைப்பிலுள்ள வைத்தியர்.
04. உடற்பயிற்சிக்கான ஆலோசனைகள் மற்றும் சேவைகள்.
05. அரவணைப்புடன் கூடிய பராமரிப்பு.
06. தொழில்சார சுகாதார சேவைகள்.
07. நோயாளிகளுக்கு ஏற்படுகின்ற அறிகுறிகளை வைத்து நோயின் தன்மையை மதிப்பீடு செய்வதோடு, நோயை அடையாளம் காணுதல்.
   - ✓ ஆறாத புண்கள்
   - ✓ அறுவைச்சிகிச்சையால் ஏற்பட்ட காயங்கள்
   - ✓ இரத்த ஓட்டத்தில் உள்ள தடைகள்.
   - ✓ தீக்காயங்கள்.
   - ✓ அதிர்ச்சியால் ஏற்பட்ட தாக்கங்கள்.

பதிவுக்கட்டணம் இலவசம்

**உரிய கட்டணத்திற்கு தரமான சேவையை நாம் வழங்கிவருகின்றோம்.**
தொடர்புகளுக்கு: தொ.பே.இல: 077 3700 182 | 077 8135 470
முகவரி:25/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம்.

---

## வாடகைக்கு உண்டு

கொழும்பு, பம்பலபிட்டி Savoy Theatreக்கு அருகில் தளபாட வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான சூழலில் அமைந்துள்ள அறை ஒன்று வாடகைக்கு உண்டு. இருவர் பகிர்ந்து தங்கக்கூடிய வசதி.
பெண்களுக்கு மட்டும்.
மேலதிக தகவல்களுக்கு : 0777 88 65 70

---

## விற்பனையாளர் தேவை

**ஆர்விஜி**
வியாபார ஸ்தாபனத்துக்கு பெண் விற்பனையாளர் தேவை. (Sales girl)
தகைமை: O/L or A/L
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 2129

---

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 இல், உத்திரட்டாதி, மீனராசியில் பிறந்த சுயதொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தரகர் தேவையில்லை.
**077 076 3328**
(CS/30782)(11,17)

---

## தென்னந்தோட்டம் விற்பனைக்கு

**தாளையடி வீதி, மாசார், பளை.**
39 ஏக்கர். 2 அறைகள். 2 குளியலறைகள் கொண்ட வீடு. மும்முனை மின்சாரம். 4 குழாய்க்கிணறுகள். இருகட்டுக் கிணறுகள். சொட்டு நீர்ப்பாசனம் 1500 தென்னம் கன்றுகள். 350 மரமுந்திரிகைக் கன்றுகள் என்பன அடங்கலான தோட்டம் விற்பனைக்கு உண்டு.
**076 809 8627**
(CS/30775)(11,17)

---




**யூனியன் லைஃப் ஸ்டைல் போனஸ் உடன்**
**40% வரையான விலைக்கழிவுகளை அனுபவித்து மகிழுங்கள்**

2020 ஜனவரி 1 ற்கும் மார்ச் 31 ற்குமிடையில் யூனியன் அஷ்யூரன்ஸ் ஆயுட் காப்புறுதியொன்றைப் பதிவு செய்து இந்த விஷேட வெகுமதிகளை உங்கள் அபிமான லைஃப் ஸ்டைல் வியாபார ஸ்தாபனங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்.

Cinnamon HOTELS & RESORTS | Cinnamon AIR | JKOA | AirAsia | VISION CARE

இச்சலுகையானது ரூபா 15,000/-ற்கும் அதற்கு மேற்பட்டதுமான மாதாந்த பிரிமியத்தையுடைய அனைத்து காப்பீடுகளுக்கும் செல்லுபடியாகும்.

மேலும் விபரங்களுக்கு தயவு செய்து உங்கள் தனிப்பட்ட நிதி ஆலோசகரைத் தொடர்பு கொள்ளவும் அல்லது 0112 990 009 ஐ அழைக்கவும்
www.unionassurance.com

யூனியன் அஷ்யூரன்ஸ்

Union Assurance PLC (Company No PQ 12)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் · 02 · 03 · 1949

மறைவு · 27 · 12 · 2019



## திருமதி
## இலட்சுமி மார்க்கண்டன்

கடந்த 27.12.2019 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி இலட்சுமி மார்க்கண்டன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி.

குடும்பத்தினர்.

Tel:076 412 7762,
00447456389348

## தேவை

ஒய்வுபெற்ற எழுதுவினைஞருக்கு பகல்நேர வேலை தேவை.

**077 272 8539**

## வேலையாள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் மருந்தகத்துக்கு மருந்து விநியோகம் செய்யக்கூடிய வேலையாள் தேவை. முன்னனுபவம் உள்ள பெண்கள் விரும்பத்தக்கது.

**077 436 2892**

## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு
**பராமரிப்பாளர்**
ஆண் (30 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
உடன் தொடர்பு கொள்ளவும்
**தொலைபேசி இலக்கம்**
071 535 4500
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
(நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)

இல 55, 154ஆம் கட்டை,
இந்துபுரம், திருமுறுகண்டி, முல்லைத்தீவு

## வகுப்புக்கள்

**பொருளியல்**

S.V. **பிரதீபன்** (SLPS III)
B.A (Hons) PGDE,MA (Hons) MED (Hons)

**வணிகக்கல்வி**

B. **லோசிதகுமார்** B.Com (Hons)

**A/L - 2020, 2021, 2022**

பிரத்தியேக மற்றும் குழுவான வகுப்புகளுக்கு தொடர்புகொள்ளவும்

**077 601 6284, 076 290 3600**

## மெசின் ஒப்பரேற்றர் தேவை

லேத், ஆணி, போல்ட், வயரோயிங் மெசின்களில் வேலை செய்ய விரும்புபவர்கள் தேவை.

**075 076 6979**

## வீடு வாடகைக்கு

சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குழியில் 3 - 5 அறைகளுடன் 3 குளியல் அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**076 265 4820**

## விற்பனை

உயர் கல்வி நிறுவனமொன்றின் அலுவலக மேசைகள், அலுமாரிகள், கொம்பியூற்றர் மேசைகள், Lecture chairs, Executive chairs, white board, Flannel board, visitors sofa, கணினிகள், Box files என்பன நல்ல நிலையில் உண்டு.

**077 704 5840, 071 969 4117**

## வீடு வாடகைக்கு

**K.K.S.** வீதிக்கு மிக அண்மையாக **கொக்குவில் மேற்கில் சகல வசதிகளும்** கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**071 063 3995**

## புதிய கட்டடம் வாடகைக்கு

வட்டுக்கோட்டை, மாவடிச் சந்தியிலிருந்து சித்தன்கேணி பாதையில் 200m தூரத்தில் அமைந்துள்ள கட்டடமொன்று வாடகைக்கு கொடுக்கப்படும். வங்கி, தனியார் நிறுவனம், வியாபார நிலையங்களுக்கு தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

**077 711 0891**

## வாடகைக்கு

3 மாடிக் கட்டடம் வாகனத் தரிப்பிட வசதியுடன் உயர் கல்வி நிலையங்கள், நிறுவனங்கள், காட்சியறைகள் என்பவற்றுக்கு முழுவதும் அல்லது தனித்தனியாக வாடகைக்கு விடப்படும்

**076 600 1862, 071 969 4117**

## தேவை

வீட்டு வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

**077 936 3051**

## விற்பனைக்கு

Furukawa Exvatar 50.10 பாக் Mobile சிமென் மிக்சர் விற்பனைக்கு.

**077 921 3881**

## அறைகள் வாடகைக்கு

யாழ் மருத்துவபீடததிற்கு அண்மையில் (300m), கருவப்புலம் வீதியில் அழகான, அமைதியான சூழலில் நவீன வசதிகளுடன் கூடிய விலாசமான அறைகள் மருத்துவபீட மாணவர்களுக்கு மட்டும் வாடகைக்கு விடப்படும். மதிய, இரவு உணவுகளும் உண்டு.

**076 982 2138**

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர்குலம். பூராடம் 2ம் பாதம். கன்னி லக்னத்தில் சுக்கிரன் 2இல் சனி. 3 இல் செவ்வாய் கேது. 4 இல் குரு சந்திரன். 9இல் ராகு மற்றும் 12 இல் சூரியன் புதன் இந்த கிரகநிலையுடைய 1984ஆம் ஆண்டு பிறந்த லண்டன் PR மற்றும் லண்டனில் சொந்தக் கடையும், கம்பனி ஒன்றில் தொழில் செய்யும் அழகிய மணமகனுக்கு A/L இற்கு மேல் படித்த மற்றும் ஆங்கிலமொழி தெரிந்த உள்நாட்டில் அல்லது வெளி நாட்டில் அழகிய மணமகள் தேவை.

**0045 428 36366, 0044 742 409 2585, 0044 790 493 8844**

## பணி நிலை வெற்றிடம்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவரும்
**"சன் றைஸ்" மெடிக் கிளினிக்**
இன் கீழ்க் காணும் பணியாளர் தேவை.

- காசாளர் (Cashier)
- கணக்குப் பதிவு இலிகிதர் (Accountin Clerk)
- கணக்காளர்
- நேர்முகத் தேர்வு - 27.01.2020..

**SUN RISE MEDI CLINIC**
(BUS STAND OPPOSIT)
388, Hospital Road, Jaffna.
**021 222 6069, 021 222 8460**

## Annex / அறைகள் வாடகைக்குண்டு

யாழ்.பல்கலைக்கழகம் அருகில் பலாலி றோட்டில் சிறிய குடும்பம் / பல்கலைக்கழக மாணவிகள் / A/L படிக்கும் மாணவிகள் / தாதிகள்/ அரச உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு Annex / அறைகள் உடன் வாடகைக்குண்டு.

**077 930 0148/ 021 222 7069**

## வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

மலேசியாவில் வேலைவாய்ப்பு துறைமுகம் (கார்கோ) மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியவும் ஆண்கள் தேவை மாதாந்தம் 110.000 இற்கு மேல். உணவு / தங்குமிடம் வழங்கப்படும். வயது 18 – 45 வரை

**076 289 6258, 077 571 2577, 011 708 0009**

## மணமகன் தேவை

யாழ்.இந்து. 1990 ஆம் ஆண்டு பிறந்த, மூல நட்சத்திரம் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு மணமகன் தேவை.
**ஐரோப்பிய நாடுகள் மட்டும்.**
**தரகர் தேவையில்லை.**

**077 332 5768**

## வேலையாள் தேவை

அச்சுவேலி **தோப்பு கிறிஸ்தவ மிஷனரி சபைக்கு** தங்கி நின்று **தோட்ட வேலை** செய்யக்கூடிய வேலையாள் தேவை.

**077 695 6728**

## வீடு வாடகைக்கு

**யாழ் இந்துக் கல்லூரிக்கும் மனோகரா தியேட்டருக்கும்** இடையில் **கே.கே.எஸ். வீதியில்** வீடு வாடகைக்கு உண்டு.

**077 605 7490**

## காணி விற்பனைக்கு

வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று J/ 146 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட சூடுவெந்தான் அல்லது காரைப்புலம் 34 பரப்பு குளி 15.21 தோட்டக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தோட்டம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்தது. மொத்தமாகவோ பிரித்தோ கொடுக்கப்படும்.

**077 127 5302**







விளம்பரத் தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com, 021 493 1111

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு - 23

- Diploma in English / SpokenEnglish
- Diploma in Ms Office/ ICT
- காலம் : 3 மாதங்கள்
- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்

ஆரம்பம் 01,02 - 02 - 2020

பிரிவு - III

- Diploma in Sinhalam

அடிப்படையிலிருந்து எழுத பேச, பரீட்சைகளிற்கு தோற்றுபவர்களுக்கான பிரிவுகள். பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்துதரப்படும்.

IPS
யாழ். பல்கலைக் கழகத்திற்கு அண்மையில்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
T.P 021 434 0229,
077 602 1794

## வாடகைக்கு

யாழ்நகர் அருகில் அறைகள் (றூம்கள்) வாடகைக்குண்டு

077 728 3811

## வேலையாள்கள் தேவை

- கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றுக்கு ஆண்/ பெண் கூலிவேலையாள்கள் தேவை.
- கிறைண்டிங் மில் வேலை தெரிந்த ஆண் வேலையாள் தேவை.

தொலைபேசி இல: 077 9574 934

## லொறி விற்பனைக்கு

LK தொடர் இலக்கம் உடைய TATA 7.09 விற்பனைக்குண்டு

077 987 3916, 077 886 3346

## திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி

**எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2020 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பிரதான பாடங்கள்**

- வாய்ப்பாட்டு
- நடனம் (பரதம்)
- வீணை
- வயலின்
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- ஓர்கன் (கீபோட்)
- கிற்றார்
- ட்றம்
- ஒக்ரோபாட்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

- கூத்து
- கண்டிய நடனம்
- யோகாசனம்
- அழகுக்கலை (முக ஒப்பனை, தலையரங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
- பண்பாடு (கிறிஸ்தவ கலைகள், சைவசித்தாந்தம்)

**துணைப்பாடம்**

- ஆங்கிலம்

- **க.பொ.த(உ.த)** - **கர்னாடக சங்கீத** பாடத்தில் இந்தவருடம் 2020 தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகளும் இசைக்கருவிகள் இசைத்தலுக்கான கற்பித்தலும் தகுதி வாய்ந்த ஆசிரியர் குழாத்தின் மூலம் நடத்தப்படவுள்ளது.
- **க.பொ.த (உ.த) நாடகமும் அரங்கியலும்** பாடத்தில் தோற்றும் மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.
- மாணவர்களின் வசதி கருதி வகுப்புக்கள் காலை, மாலை தொகுதிகளாக நடத்தப்படவுள்ளன.
- இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 06.02.2020 வியாழக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.
- எமது கல்லூரியின் கிளை இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள **"கலாமுற்றம்"** கட்டடத் தொகுதியிலும் இயங்குவதுடன் அங்கு வாய்ப்பாட்டு, நடனம், சித்திரம், ஓர்கன், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. மாணவர்கள் வசதிக்கேற்ப அங்கும் இணைந்து கொள்ள முடியும்.
- புதிய வகுப்புக்கள் யாவும் 08.02.2020 சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

**தொடர்புகளுக்கு: அதிபர்,**

**இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 9419**

**கலைத்தூது அழகியல் கல்லூரி, இல.15, றக்காவீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7955**

## அந்தியேட்டி கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் திருமதி காசிநாதன் ஜெகதீஸ்வரி

(ஓய்வுநிலை வேலணை பிரதேசசபை உத்தியோகத்தர்)



மலர்வு 08.01.1953
உதிர்வு 27.12.2019

கடந்த 27.12.2019 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் நயினாதீவு கங்காதரணி தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு அன்று முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், ஆறுதலும் தேற்றுதலும் கூறிய அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், மலரஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும் உள்நாட்டு வெளிநாட்டு உறவினர் நண்பர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு:- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர்.

# இந்திய கல்விக் கண்காட்சி- 2020

தொழில்வள மதிப்பீட்டு வாய்ப்புக்களின் பரந்த வகையறாக்களை வீட்டு வாயில்களுக்கே கொண்டு வரும் 4ஆவது இந்திய கல்விக் கண்காட்சி 2020 மீண்டும் ஒரு தடவை இலங்கை மாணவர்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலிலும் பெப்ரவரி மாதம் 1ஆம் 2ஆம் திகதிகளில் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலிலும் இடம்பெறும் இக்கண்காட்சி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், இலங்கை அரசாங்கத்தின் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஆதரவுடன் ""SAPE EVENTS & MEDIA PVT . LTD." நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலிலும் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலிலும் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்வி கருத்தரங்கு ஒன்றையும் கண்காட்சி ஒன்றையும் நடத்துவதற்காக "SAPE EVENTS & MEDIA PVT . LTD." இந்தியவிலிருந்து சுமார் 20 பல்கலைக்கழகங்களை சேர்ந்த தூதுக்குழு ஒன்றை அழைத்துவர இருக்கிறது. இந்தியாவில் பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களின் கீழ் கற்பதற்கு மாணவர்களை அழைப்பதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

மாணவர்களையும் அதிசிறந்த கல்வி நிறுவகங்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து ஆர்வமுள்ள மாணவர்களுக்கு உதவுவதோடு பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இந்திய கல்வி நிலையங்களின் கற்கை வசதிகளையும் கட்டண கட்டமைப்புக்களையும் பற்றி நிபுணத்துவ வழிகாட்டலுடன் விரிவாக கலந்துரையாடுவதற்கும் வழிசமைக்கிறது. மேலும் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப ஒப்பீட்டளவில் மிகப்பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்கும் இந்த வழிமுறை வசதியளிக்கிறது.

கல்வியானது இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஒத்துழைப்புக்கான மிக முக்கிய துறையாகும். இரு நாடுகளும் கல்வி, கலாசாரம், சமயம், மொழி ஆகியவற்றை பொறுத்தவரையில் 2500 வருடகாலத்திற்கு அப்பாலிருந்தே வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. இந்த விசேட உறவு முறைகளில் இருதேச மக்கள் தொடர்புகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. சமீப வருடங்களில் இருநாட்டு மக்களிடையேயும் ஆழமானதும் அர்த்தமுள்ளதுமான பரஸ்பர உறவுகளை ஊக்குவிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய பரஸ்பர உறவுகள் கட்டமைப்பில் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே கல்வித் தொடர்புகள் விசேட இடத்தை பிடித்துள்ளன.

தென்கிழக்காசியாவின் முன்னணி நிகழ்ச்சி முகாமைத்துவ, கல்வி ஊக்குவிப்பு நிறுவனங்களில் ஒன்றான SAPE EVENTS & MEDIA PVT . LTD. (SAPE) அநேகமாக மாணவர்களின் வீட்டு வாயில்களிலேயே அவர்களது கல்வி விருப்புரிமைகளையும் வளங்களையும் அவர்கள் அடைய இலகு வழிமுறைகளை காண்பிப்பதன் மூலம் மாணவ சமுதாயத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறது. கல்வி விருப்பத் தேர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நகரங்களிலுள்ள மாணவர்களை சென்றடைவதே SAPE இன் முக்கிய நோக்கமாகும். பதினான்கு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள SAPE கல்விக் கண்காட்சி இப்பொழுது இந்தியாவிலும் மற்றும் பல்வேறு தெற்காசிய நாடுகளிலும் பலரையும் கவரும் கல்விக் கண்காட்சியாகும். இந்தக் கல்விக் கண்காட்சி 18க்கும் அதிகமான நகரங்களுக்கு விஸ்தரிக்கப் பட்டுள்ளதுடன் இதுவரை 200க்கு மேற்பட்ட காட்சிகளையும் காண்பித்துள்ளது. ஆரம்ப முயற்சிகள் காட்சிக்காரர்களால் வரவேற்கப்பட்டுள்ளதோடு அவர்களது தொடர்ச்சியான ஆதரவு புதிய் சந்தைகளை ஆராய்வதற்கான சாத்தியத்தை எமக்கு தந்துள்ளது. SAPE இனால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விக் கண்காட்சி வெறும் இந்திய கண்காட்சி அன்றி பல்வேறு தென்கிழக்காசிய நாடுகளினாலும் பாராட்டப் பட்டுள்ளது. பூட்டான், நேபாளம், பங்களாதேஷ், மியன்மார், இந்தோனேசியா, வியட்னாம், கம்போடியா ஆகிய நாடுகளில் அவர்களே முதன்முதலில் கல்விக் கண்காட்சியை ஒழுங்கு செய்தனர். மாணவர்கள் கல்வியகங்கள் ஆகிய இரு சாராருக்கும் அனுகூலம் கிடைப்பதை நிரூபிப்பதில் வெற்றி கண்டு முதலில் நகர்வோருக்கான உயர்நிலையை அனுபவித்து மகிழ்ந்தனர்.

பெருமளவிலான இலங்கை மாணவர்கள் வெள;வேறு மட்டங்களிலும் வெள;வேறு கற்கைநெறிகளிலும் கல்வியை தொடர்வதற்காக வருடம் தோறும் இந்திய பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகிறார்கள். அண்மையிலுள்ள நாடு, கலாசார தொடர்புகள், ஒப்பீட்டளவில் உலகதரம் வாய்ந்த இந்திய கல்வி ஆகியன இலங்கை மாணவர்களை பெரிதும் கவருகின்றன. சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்ற இலங்கை மாணவர்களின் ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் இந்தியா பெரும் தொகையான புலமைப் பரிசில்களையும் பல்வேறு துறைகளில் வழங்;கி வருகிறது. இந்த புலமைப்பரிசில்கள் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றன. கடந்த வருடம் க.பொ.த உயர்தரம், பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, மற்றும் ஆராய்ச்சி மட்டங்களில் தகைமை உள்ள இலங்கை மாணவர்களுக்கு 700க்கும் மேற்பட்ட புலமைப்பரிசில்களை இந்தியா வழங்கியது.

இலங்கையில் நடைபெறும் இந்த இந்திய கல்விக் கண்காட்சி இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் இந்திய பல்கலைக்கழகங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் இலங்கையில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் அறிந்துகொள்ள உதவுமென நம்பப்படுகிறது.

கல்வி கற்பதற்கான செலவுகள் இன்று அதிகரித்து வரும் நிலையில் அதற்கான செலவுகள் குறித்து அறியவேண்டியது ஒரு கட்டாய தேவையாகிறது.

புலமைப்பரிசில்களை பெற்றுக் கொள்வது குறித்தும் உடனடி அனுமதிகளை பெற்றுக் கொள்வது குறித்தும் மாணவர்கள் விவரங்களை அறிந்து கொள்வதற்கும் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**தேவை**

பில்கிளார்க், பொதியிடல் உதவியாளர். பயிலுநர். சமையல் என்பவற்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.

பிருந்தா மில், 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
077 174 6101

**விற்பனைக்கு**

பல வேலைகளுக்குரிய விவசாய இயந்திரம், சிறிய உழவு இயந்திரம் கொண்டதும், மாடுகளில் பால் கறக்கும் இயந்திரம் ஒன்றும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 773 0567

**தேவை**

கொழும்பில் Welding வேலை Aluminium Fitting வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. திறமைக்கு ஏற்ற சம்பளம் கொடுக்கப்படும்.

077 898 7390, 077 999 6743

**Bill Clerk தேவை**

யாழ் நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்திற்கு (30 வயதிற்கு மேற்பட்ட ஆண்) Bill Clerk தேவை.

021 222 8437, 072 699 4681

# மக்களைத் திசை திருப்பும் முயற்சியில் ராஜபக்ச அணி

## தமிழ், முஸ்லிம் கட்சிகளை நம்பாதீர் என கிழக்கில் பரப்புரை

கொழும்பு, ஜன.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய ஏமாற்றுபவர்களுக்குப் பின்னால் நீங்கள் சென்றால் அமெரிக்காவின் கயிற்றை விழுங்க வேண்டிய நிலை வரும். இதிலிருந்து நீங்கள் மீள வேண்டுமெனில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கே வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு கிழக்கில் வைத்துத் தெரிவித்தார் வட மத்திய மாகாண ஆளுநர் திஸ்ஸ விதாரண.

திருகோணமலை மாவட்டத்துக்கு நேற்று சனிக்கிழமை உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட வடமத்திய மாகாண ஆளுநர் திஸ்ஸ விதாரண, திருகோணமலை, கந்தளாய் மற்றும் மூதூர் ஆகிய பிரதேசங்களில் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மூதூரில் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் மகளிர் அணியின் மூதூர் பிரதேசத்துக்கான தலைவி மஹ்றூப் ரைஸா என்பவரின் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் திஸ்ஸ விதாரண உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் வாழ்கின்ற மூவின மக்களும் மிக சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதே எமது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அபிலாஷை. இந்த நாட்டை ஒரு சுபீட்சமான நாடாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அவர் இருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் சிறுபான்மையினரின் ஆதரவு எமக்கு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய ஏமாற்றுபவர்களுக்குப் பின்னால் நீங்கள் சென்றால் அமெரிக்காவின் கயிற்றை விழுங்க வேண்டிய நிலை வரும்.

நீங்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணி இணைந்து 'தாமரை மொட்டு' சின்னத்தில் கேட்கின்ற உங்களுடைய உறுப்பினர்களைத் தெரிவு செய்து நாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்தக் கடமையை நீங்கள் சரிவர நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருபோதும் தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்துச் செயற்பட மாட்டோம்என்றார்.

(எ-22)

உ

**திருமண விருந்துபசார அழைப்பிதழ்**

ஸ்வதிஸ்ரீ நிகழும் மங்களகரமான **விகாரி வருடம் தைமாதம் 13 ஆம் நாள் (27.01.2020) திங்கட்கிழமை** பூர்வ திருதியையும் சதய நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரையுள்ள மீனலக்ன சுப முகூர்த்த வேளையில்

**மணமகன்**
**பிரம்மஸ்ரீ பசுபதீஸ்வர சர்மா**
**கணேசராஜக் குருக்கள்**
அவர்கட்கும்



**மணமகள்**
**சௌபாக்கியவதி குகானந்தசர்மா**
**வசந்தி**
அவர்கட்கும்

குலதெய்வங்கள் திருவருள் துணை கொண்டு பெரியோர்களின் ஆசியுடன் **நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில்** திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சமேதரராய் வந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவஸ்ரீ. கா. குகானந்தசர்மா**
**குடும்பத்தினர்**

**தெய்வத்திரு.சு.பசுபதீஸ்வரசர்மா**
**திருமதி ப . சகுந்தலாதேவி**
**குடும்பத்தினர்**

**தங்கள் நல்வரவை இனிதே நாடும்**

**உறவினர்களும் நண்பர்களும்**

சுபம்

ARPICO FINANCE COMPANY PLC
PQ 92
Guidance with Accountability

**கனிஷ்ட சந்தைப்படுத்தல் நிர்வாகி / சந்தைப்படுத்தல் நிர்வாகி**



**விண்ணப்பதாரியின் தகைமைகள்**

- க. பொ.த உயர்தரத்தில் சித்தி.
- நிதிசார்ந்த துறையில் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவில் குறைந்தது 2- 4 வருட அனுபவம்.
- சிறந்த பேச்சு மற்றும் தொடர்பாடல் திறன்.
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவில் முழு அல்லது பகுதியளவில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
- இலக்குகளை அடைந்தமைக்கான தரவுகளை கொண்ட ஆவணங்கள் முன்வைப்பது மேலதிக தகுதியாக கொள்ளப்படும்.

**HUMAN RESOURCE DEPARTMENT**
**ARPICO FINANCE COMPANY PLC**
No.146, Sri Sambuddhathwa Jayanthi Mawatha (Havelock Road), Thimbirigasyaya, Colombo 05.
+94 115 553 663 | +94112 598 490
careers@arpicofinance.com
www.facebook.com/ArpicoFinanceCareers
www.arpicofinance.com
Arpico Finance Company PLC is a member of AMF Group

## வாக்குமூலம் வழங்கினார் பூஜித்

கொழும்பு, ஜன.26

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர முன்னிலையானார்.

சுமார் ஒரு மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவர் பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார். (எ)

## வாடகைக்கு

யாழ் நகரில் (ஆனைப்பந்தி)
கட்டடத் தொகுதி வாடகைக்கு
மேல் மாடி 3 கடைகளும் கீழ்மாடி
3 கடைகளும் ஒரு களஞ்சிய
அறையும் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்களிற்கு உகந்தது.

தொடர்புகளுக்கு
076 831 3674

## பெண் வேலையாள் தேவை

திருநெல்வேலி உணவகம் ஒன்றுக்கு
பெண் வேலையாள் தேவை.

076 703 0010


## தேவை

45 வயதுடைய ஆணொருவருக்கு
B+ இன குருதிவகை சிறுநீரகம்
தேவை.

தொடர்பு:- 077 005 1293,
077 641 0869


# 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 . 10 . 1925



இறப்பு 19 . 01 . 1999

## ஸ்ரீமான் செல்லப்பா கனகசபை

(ஸ்தாபகர்-கணேசன் ஸ்ரோர்ஸ். சிவகணேசன் ஸ்ரோர்ஸ்)

**திதி-பூர்வபக்க துதியை 26.01.2020**


ஓடிச் சென்றது இருபத்தொன்று
தேட முடியாத மனிதம் தொலைந்தது
பாசமிகு அப்பா இங்கில்லையே
எங்கள் இதயத்தில் ஓர் வெற்றிடம்
அதை நிரப்பிட இனி யாருமில்லையே
எல்லோர் மனதிலும் உங்கள்
இனிய சுபாவமும் புன்சிரிப்பும்
அழியாத நினைவுகளுடன்

115, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயரும்
பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



## துரைசிங்கம் துரைராஜசிங்கம் (பத்தர்)

அச்சுவேலியை பிறப்பிடமாகவும், இந்தியா, திருச்சியை வதிவிடமாகவும், கொக்குவில் மேற்கு, பூநாரி வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட துரைசிங்கம் துரைராஜ சிங்கம் (பத்தர்) நேற்று **(25.01.2020)** சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - இராசலட்சுமி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரமலை நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் சர்மிளா (லண்டன்), கோகிலன் (லண்டன்), வகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற துரைரத்தினம் மற்றும் துரைராணி, துர்க்காதேவி, துதிமதிராணி, துரைவீரசிங்கம் (ஜேர்மனி), துதிகாம்பிகை, துதிகாந்தராஜன் (லண்டன்), பூலோகரம்பை, துவாரகாதேவி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதீஸ்குமார் (லண்டன்), உஷாயினி (லண்டன்), ஆனந்தலட்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜின் (லண்டன்), யுகிதா (லண்டன்), நிதுன் (லண்டன்), நீவன் (லண்டன்), மாயன் (இந்தியா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(26.01.2020)** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.45/2, பூநாரி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: 077 0407 949

# மரண அறிவித்தல்கள்

பிறப்பு 26 . 12 . 1925



இறப்பு 25 . 01 . 2020

## திருமதி குலநாயகம் பரமேஸ்வரி

திக்கரை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலநாயகம் பரமேஸ்வரி நேற்று (25.01.2020) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும் சட்டம்பி அம்பலவாணர் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குலநாயகத்தின் (சட்டத்தரணி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விஸ்வேஸ்வரன், புவனேஸ்வரி, மகேஸ்வரி, பாலசௌந்தரி, அம்பிகைபாகன் ஆகியோரின் அன்பு சகோதரி யும் பராசக்தி, சத்தியபாமா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), விஜயலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அருளாம்பிகை (அம்பிகை), அருந்ததிதேவி ஆகியோரின் அன்பு தாயாரும் உருத்திரசிங்கம், இரங்கநாதன், ரஞ்சிதன், நடராசா, மனோகரன் ஆகியோரின் மாமியாரும் தயாளினி - முரளிதரன், சுதர்சன் - காஞ்சனா, சுகந்தினி - ஜெயக்குமார், விதுஷன், கஜானன் ஆகியோரின் அன்பு பேர்த் தியும் அபிதா, கௌசிகன், கிருத்திகா, அதிசயன், தாரகா, கார்த் திகா, தர்சிதா, சுவேதா, மோகிதா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 913 9088

தகவல்: குடும்பத்தினர்

தோற்றம் 24 . 02 . 1938



மறைவு 23 . 01 . 2020

## குமாரவேலு சின்னையா

பளையைப் பிறப்பிடமாகவும் புத்தூர்ச்சந்தி மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு சின்னையா 23.01.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமராவேலு - சிவபாக்கியம் தம்பதியரின் புதல் வனும், காலஞ்சென்றவர்களான ஞானசேகரம் - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், சேதுப்பிள்ளை (சற்குணம்) அவர்களின் அன்புக் கணவரும், சிவகுமார் (சுவிஸ்), சூரியகுமார் (முன்னாள் ஊழியர் சாவகச்சேரி MPCS), காலஞ்சென்ற றாம்குமார் மற்றும் விமலகுமார் (யாழ். மாநகரசபை), வசந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனாமரியா (சுவிஸ்), குணவதனி, சுதந்தா (ஆசிரியர் - கிளிநொச்சி மகாவித்தியாலயம்), மரியானா (சுவிஸ்) ஆகியோ ரின் அன்பு மாமனும், வெண்ணிலா, றோஜா, ஜெனனி, நிதீஷன், விவேக்கா, தேமதுரன், அபிஷயன், காவியா, ஜலூக்கா, டாறியோ ஆகியோரின் அன்புப் பேரனும், சரோனின் பூட்டனும், காலஞ்சென்றவர் களான செல்லத்துரை, சேனாதிராசா, ஆறுமுகம் ஆகியோரின் சகோதரனும், தங்க முத்து, சோதிமலர், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (27.01.2020) திங்கட் கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தட்டான் குளம் வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 113 3406

(cc30795)
(13.17)

# பொதுத் தேர்தலில் கதிரைச் சின்னம்!

## லக்ஸ்மன் பியதாச திட்டவட்டம்

கொழும்பு, ஜன.26

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு இணங்க பொதுத் தேர்தலின்போது கதிரைச் சின்னத்தில் சுதந்திரக் கட்சி சிறிலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி களமிறங்கும் என்று சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறி லங்கா சுதந்திரக் கட்சி, ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வெற்றிக்காகத் தீவிரமாகச் செயற்பட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற பேச்சின்போது, தாமரை மொட்டுச் சின்னத்தில் அன்றிப் பொதுச் சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவோம் என்று கூறியிருந்தோம்.

ஆனால் அது முடியாமல் போய்விட்டது. எனினும் நாம் தாமரை மொட்டுச் சின்னத்துக்கு ஆதரவளித்துப் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தோம். அதனால்தான் அவரது வெற்றி மகத்தான வெற்றியாக மாற்றமடைந்தது. தற்போது பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் களமிறங்கவே அன்று இரண்டு தரப்பும் தீர்மானித்திருந்தன.

இதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் இரண்டு தரப்பும் செய்து கொண்டுள்ளது. 17 கட்சிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கின. தற்போது சிலர் மீண்டும் தாமரை மொட்டுச் சின்னத்தில் களமிறங்க வேண்டும் என்று கோரிவருகின்றனர். இது ஏன் என்று தெரியவில்லை. எமது கட்சியின் பலத்தை இல்லாது செய்யவோ, எமது கட்சியை கட்டுப்படுத்தவோ எந்தத் தரப்பாவது முற்பட்டால், நாம் அதற்கு முகம் கொடுக்கவும் தயாராகவே இருக்கிறோம். என்றார்.(எ)

---

### சிவபூமி...

அரும்பொருள் காட்சியகத்தின் நுழைவாயிலை நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திறந்து வைத்தார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கலாநிதிகள் தமிழ் மன்னர்களின் உருவச் சிலைகளை திரை நீக்கம் செய்தனர்.

அபிராமி கயிலாயபிள்ளை அம்மையாரால் அரும் பொருள் காட்சியகத்தின் முதலாம் தளம் திறக்கப்பட்டது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் அமரர் பகவதிதேவி கந்தப்பிள்ளை ஞாபகார்த்தமாக அவரது உறவினர்கள் வழங்கிய நிதியுதவியில் அமைக்கப்பட்ட இரண்டாவது தளம் அவரது மாணவரான ஆறுமுகம் சிறிஸ்கந்தமூர்த்தியால் திறக்கப்பட்டது.

கந்தர்மடத்தைச் சேர்ந்த அமரர் செல்வி வைத்தியலிங்கம் நினைவாக அமைக்கப்பட்ட மூன்றாவது தளத்தைச் சட்டத்தரணியை அமரர் நீலகண்டனின் துணைவியார் திறந்தார்.

தமிழ் மன்னர்களின் சிலைகளை அமைக்க நிதியுதவி வழங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், மருத்துவ நிபுணருமான நிமலன் மகேசனின் நினைவுப் பதிவை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் திரைநீக்கம் செய்தார்.

நிகழ்வில் சமயப் பெரியார்கள், அரசியல் தலைவர்கள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான கைதடியில் சுமார் 12 பரப்புக் காணியில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தின் முற்றத்தில் யாழ்ப்பாணப் பேரரசை ஆட்சி செய்த 21 மன்னர்களின் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களின் பெயர்கள், ஆட்சி செய்த காலப் பகுதி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

அரும்பொருள் காட்சியகத்துக்குள் வண்டிகள் கூடார வண்டில், திருக்கை வண்டில், சவாரி வண்டி உட்பட முன்னோர்கள் பயன்படுத்திய போக்குவரத்து வாகனங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவந்த 17 கார்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் பிரபலமான தட்டி வானும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அருங்காட்சிகத்தின் முதல் தளத்தில் தமிழர்களின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய பொருள்கள், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் பயன்படுத்திய பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாவது தளத்தில் ஈழத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், பாடசாலைகளை ஆரம்பித்தவர்கள், இந்து சமய கலாசார நிகழ்வுகள், நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் பழமையான தோற்றங்கள், கீரிமலை நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம் உள்ளிட்ட ஆலயங்களின் ஆதிகாலப் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலப் பத்திரிகைகள், 1800ஆம் ஆண்டில் இருந்த யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் முதல் நாள் பதிப்புக்களின் முதல் பக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 3ஆயிரம் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாவது தளத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களால் வரையப்பட்ட மரபு ரீதியான ஓவியங்கள், தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (எ-ப)

### ரஞ்சன்...

வேறு தரப்பிலிருந்தோ எவரும் சிறைக்குச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டால் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும், வேறு தரப்பினரும் சென்று நலம் விசாரிப்பது வழமை.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கொழும்பு மகசின் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவரைச் சந்திக்க எவரும் செல்லவில்லை என்று கூறப்படுகின்றது.

ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பிரச்சினைகளில் சிக்கலாம் என்று எதிர்கூறப்படுகின்றது.

அதனாலேயே ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்திப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், வேறு தரப்பினரும் பின்னடிக்கின்றனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.(எ)

### ஒரு...

திருட்டுச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் அதிகாலையில் நடந்துள்ளது.

ஒரு வீட்டில் அங்கிருந்த மோட்டார் சைக்கிளின் திறப்பு மற்றும் தலைக்கவசம் என்பன திருடப்பட்டுள்ளன. மற்றொரு வீட்டில் கைபேசிகள், ஐபோட் என்பன திருடப்பட்டுள்ளன.

மற்றொரு வீட்டில் தங்கச் சங்கிலி மற்றும் பணம் போன்றவை திருடப்பட்டுள்ளன. வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்தில் இருந்தபோதே இந்தத் திருட்டுக்கள் நடந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-6)

### 70 ஆவது...

உறவுகளுக்கான பேராயத்தின் அனுசரணையுடன் நடத்தும் கலை நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் உள்ள சோழா அரங்கில் நடைபெறவுள்ள இந்தக் கலை நிகழ்வில் இந்திய மற்றும் உள்ளூர் கலைஞர்களின் கலாசார ஆற்றுகைகள் நடைபெறவுள்ளன.

### பஸ்...

டிப்பர் வாகனமும் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றுள்ளன. முரசுமோட்டைப் பகுதியில் தனியார் பேருந்து நிறுத்தப்பட்டபோது டிப்பர் வாகனம் அதன் பின்புறத்தில் மோதியுள்ளது.

டிப்பர் வாகனத்தின் சாரதியும், நடத்துநரும் காயங்களுக்குள்ளாகியதுடன், பஸ்ஸில் பயணித்த 9 பேர் காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்களில் இருவர் வட்டக்கச்சி மருத்துவமனையிலும், ஏனையோர் கிளிநொச்சி மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைத் தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-6,35)

### மனைவியை...

சகோதரி முறையானவரும் காயமடைந்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கடமையாற்றும் சுகந்தன் சகுந்தலா (வயது-25) என்பவரே உயிரிழந்துள்ளார். கணவரான சிவகுமார் சுகந்தன் (வயது -24), கிருஸ்ணசாமி பிரியங்கா (வயது -22) ஆகியோர் காயங்களுடன் சிகிச்சை பெறுகின்றனர்.

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் வசிக்கும் சுகந்தனும், சகுந்தலாவும் 2018 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டுள்ளனர். அவர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்த மாதத்தின் ஆரம்பத்தில் சகுந்தலா தவறான முடிவெடுத்து மாத்திரைகளை உட்கொண்டு உயிரை விட முயற்சித்துள்ளார். அவர் காப்பாற்றப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் பிரமந்தனாறில் உள்ள சிறிய தாயாரின் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் சுகந்தன் சிறிய தாயாரின் வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்துள்ளார். அவர் சகுந்தலாவை வெட்ட முயன்றபோது சிறிய தாயாரின் மகளான பிரியங்கா அதைத் தடுக்க முயன்றுள்ளார். அப்போது அவர் தலையில் காயமடைந்தார்.

சகுந்தலாவை கத்தியால் குத்திய சுகந்தன் தன்னைத் தானே கத்தியால் குத்திக் கொண்டுள்ளார். கத்திக் குத்துக்கு இலக்கான சகுந்தலா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த பிரியங்காவை அயலவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாகத் தர்மபுரம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் படுகாயமடைந்த சுகந்தனை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

சகுந்தலாவின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-105,6,35)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.01.2020 | வெற்றி வாரம் 2749 | வர்ணம் இளநீலம்
இடபம் | வெற்றி இலக்கங்கள் 14 18 26 33 | ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 25,64,256/=
26.01.2020 திகதி ஞாயிற்றுக் கிழமை
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 863
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,131,245/-
வெற்றி இலக்கங்கள் 32 44 50 56 V

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல: 3292 திகதி: 2020.01.25
சப்பிர் தனஸ 1308
வெற்றி இலக்கங்கள் 21 36 38 53 O
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 30,000,000/-

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.26
யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணிக்கும்,கைதடி செவின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி 20:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும், கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 12:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் தாவடி காளிஅம்பாள் விளையாட்டுக் கழக அணி 7:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும், சங்கானை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற புள்ளிகள் அடிப்படைியில வெற்றி பெற்றது. (23)

## சதுரங்க போட்டி இன்று

கரவெட்டி பிரதேச செயலக்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக அரங்கில் காலை 8 முதல் நடைபெறவுள்ளது. (422)



# தொடரை வென்றது பாகிஸ்தான் அணி

பாபர் அசாம், ஹபீஸ் அதிரடி காட்ட பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்காளால் இலகு வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

பங்களாதேஷ் அணி பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டி, இரண்டு டெஸ்ட் போட்டி, ஒரு ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ரி -20 போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி நேற்று லாருகூரில் இடம்பெற்றது.

டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், முகமது நைம் களமிறங்கினர். அணி 5 ரன்னை பெற்ற போதே முதலாவது விக்கெட்டை பறிகொடுத்தது. நைம் ரன் எதனையும் பெறாது ஆட்டமிழந்தார். மத்திய, பின் வரிசை வீரர்கள் எல்லோரும் ஒற்றையிலக்க ரன்னுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்ப ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் மறுமுனையில் அணியின் ரன்னை உயர்த்துவதற்கு பாடுபட்டார். அவர் 65 ரன்னைப் பெற்று ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அவர் அடித்த ரன்னே அணியின் அதிபட்ச ரன்னாகக் காணப்பட்டது.அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 136 ரன்களை மாத்திரமே பெற்றது.பந்து வீச்சில் முகமட் ஹசைன் 2 விக்கெட்டை அதிகபட்சமாகக் கைப்பற்றினார்.

இலக்கு இலக்கு நோக்கிக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு களமிறங்கிய சிறிது நேரத்திலேயே பங்களாதேஷ் பந்து வீச்சாளர் இஸ்லாம் அதிர்ச்சியைக் கொடுத்தார். பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அசன் அலியை ஓட்டமெதனையும் பெறாது பவிலியன் திருப்பினார். இந்த ஆட்டமிழப்பு பங்களாதேஷ் அணியை உற்சாம

டையா வைத்திருந் இணைந்த ஹபீஸ், அசாமுடன் இணைந்து மேலதிக விக்கெட் இழக்கப் டத்தை முடித்து வைத்தனர். 66 ரன்கள், ஹபீஸ் 67 ரன் ஆட்டமிழக்காது களத்திலி அணி 16.4 ஓவரில் கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் 2 போட்டிகளில் வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமான மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

தது. எனினும் பின்னர் அணித் தலைவர் பாபர் சிறப்பாக ஆடி படாமல் ஆட் பாபர்அசாம் களுடன் ருக்க ஓர்விக்



## வேகநடையில் கோபிநாத் தங்கம்



யாழ்ப்பாணம்,ஜன.26
யாழ். மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான வேக நடைப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சிறிஅம்பாள் விளையாட்டுக் கழக வீரர் ப.கோபிநாத் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வேகநடைப் போட்டி நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதான முன்றலில் ஆரம்பமாகியது.

இதில் ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் வேகநடைப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகதைப் பிரதிநிதித்துவம் செய்த சிறி அம்பாள் விளையாட்டுக் கழக வீரர் ப. கோபிநாத் ஒரு மணித்தியாலம் 14.1 செக்கன்களில் நடந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.26
மன்னார் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தால் புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் எருக்கலம்பிட்டி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் எருக்கலம்பிட்டி அல்பாலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.26
வவுனியா பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டி வவுனியா நகர சபை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.26
கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆண், பெண் இருபாலருக்குமான கால் பந்தாட்டப் போட்டி ரூபன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜன.26
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கரத்தை சென்.நியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)




# முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா திணறல்

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டி, 3 ஒருநாள் போட்டி, 3 ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஜோகனர்ஸ்பேர்க்கில் ஆரம்பமாகியது.

டாஸ் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 400 ரன்களைப் பெற்றது. அணி சார்பில் க்ரேவெலி (66), ரூட் (59), ஒல்லி போப் (56), சிப்பிலி (44), புரோட் (43) ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அன்ரிச் நோட்ரிச் 5 விக்கெட்டையும், பீற்றர்சன், பிலிண்டர் தலா 2 விக்கெட்டையும், ஹன்ரிக்ஸ் ஓர் விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மாலன், எல்கல் களமிறங்கினர். அணி 29 ரன்னைப் பெற்ற போது முதலாவது விக்கெட்டை பறிகொடுத்தது. அணி 50 ரன்னை எட்டுவதற்குள் 3 விக்கெட் இழக்கப்பட்டது. நேற்றைய நாள் முடிவில் 6 விக்கெட்டை இழந்து 88 ரன்னைப் பெற்று தடுமாறி வருகின்றது தென்னாபிரிக்கா அணி.டீ குக் 25 ரன்னுடனும், நோரேஜ் 6 ரன்னுடனும் களத்திலுள்ளனர்.






டெஸ்ட் போட்டியில்

# இங்கிலாந்து அணி 5 லட்சம் ரன் குவித்து புதிய சாதனை

கிரிக்கெட் உலகிலேயே முதன் முதலாக டெஸ்ட் போட்டியில் 5 லட்சம் ரன்களைச் சேர்த்து இங்கிலாந்து அணி புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. ஜோகன்ஸ்பர்க் நகரில் நடந்து வரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியின்போது, இங்கிலாந்து இந்த சாதனையை நிகழ்த்தியது.

ஜோகன்ஸ்பெர்க் நகரில் தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையே இறுதி டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட் ஒரு ரன் சேர்த்த போது இங்கிலாந்து அணி 1,022 டெஸ்ட் போட்டிகளில் ஒட்டு மொத்தமாக 5லட்சம் ரன்களை குவித்த அணி என்ற பெருமையையும் சாதனையையும் பெற்றது.

தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 400 ரன்களைப் பெற்றது. 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்கா ஒரு போட்டியில் வென்றுள்ளது. இங்கிலாந்து 2 போட்டியில் வென்று முன்னணியில் இருக்கிறது.

இந்த நிலையில் இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றால்தான் தொடரை இழக்காமல் சமன் செய்யமுடியும். கடும் நெருக்கடியுடன் தென்னாபிரிக்கா அணி துடுப்பெடுத்தாடி வருகிறது. இங்கிலாந்து அணிக்கு அடுத்த இடத்தில் ஆஸ்திரேலிய அணியும், மூன்றாவது இடத்தில் இந்திய அணியும், 4ஆவது இடத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியும் உள்ளன.

# தென்னாபிரிக்கா ரசிகரிடம் மன்னிப்புக் கேட்ட ஸ்டோக்ஸ்

இங்கிலாந்து அணியின் ஆல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ் பார்வையாளர் ஒருவர் தன்னை ஆங்கிலப் பாடகர் எட் ஷீரனுடன் ஒப்பிட்டதைப் பொறுக்க முடியாமல் அவர் மீது கடும் வார்த்தையை பிரயோகித்து பின்னர் மன்னிப்புக் கோரினார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. அதில் பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பிய போது பார்வையாளர் ஒருவர் பாடகர் எட் ஷீரன் என்பவருடன் பென் ஸ்டோக்ஸை ஒப்பிட்டு ஏதோ வார்த்தைகளை உதிர்க்க, பென் ஸ்டோக்ஸ் ஆத்திரம் அடைந்து, 'மைதானத்துக்கு வெளியே வந்து இதைக் கூறிப்பார் யூ...' என்று கடும் கெட்ட வார்த்தைகளை அவர்மீது பிரயோகித்தார் என்று முறைப்பாடு எழுந்துள்ளது.

இந்நிலையில் சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரிய பென் ஸ்டோக்ஸ், "நான் ஆட்டமிழந்து செல்லும் போது நான் அவரை நோக்கிப் பிரயோகித்த வார்த்தைப் பிரயோகத்துக்காக வருந்துகிறேன், மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். நான் ஆட்டமிழந்து வெளியே செல்லும் போது ரசிகர்களில் ஒரு பகுதியினர் என்னை நோக்கி தவறான வார்த்தைகளை திரும்பத் திரும்பக் கூறினர். ஆனால் அதற்காக நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது என்பதை உணர்கிறேன், நான் உண்மையாகவே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொடர் அருமையான தொடர் இந்தச் சம்பவம் அருமையான டெஸ்ட் போட்டியை கெடுப்பதை நான் விரும்பவில்லை- என்றார்.





# தனது நாட்டு வீரரை ஊதித் தள்ளிய நடால்

உலகின் முதன்நிலை டென்னிஸ் வீரரான ஸ்பெய்ன் நாட்டின் ரபேல் நடால், ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் 3ஆவது சுற்று ஆட்டத்தில் தனது நாட்டைச் சேர்ந்த வீரரை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

ரபேல் நடால் - பாப்லோ கரேனோ மோதிய போட்டியில் ரபேல் நடால் 6:1, 6:2, 6:4 என்ற நேர் செட்களில் பாப்லோ கரேனோவை ஊதித்தள்ளினார் நடால். இந்தத் தொடரில் பெடரர் கிண்ணத்தைக் கைப்பற்றினால் அது அவரின் 20ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாக அமையும்.

## வேலையாள் தேவை
(யாழ்ப்பாணம்)

- அச்சகவேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் - பெண்கள்
- வரவேற்பாளர் ( Receptionist) - பெண்
- வடிவமைப்பாளர் ( Designer) - பெண்

071 793 9246, 077 158 7186

## யாழ்.நகரில் தன்னிகரற்ற வைத்திய சேவை

வீனஸ் விசேட வைத்தியசாலையின் தனித்துவ வைத்திய சேவையாக

- 24 மணிநேர **OPD**. வார்ட் அனுமதி சேவை
- அனைத்து வைத்திய நிபுணர்கள் சேவை
- பாரிய **(Major)** சத்திரசிகிச்சைகள்
- நவீன "ஜப்பானிய" உபகரணத்தின் மூலமான **(Laparoscopic)** "லப்பிரஸ்கோப்பி" சத்திர சிகிச்சைகள்
- அதிதீவிர சிகிச்சைப் பிரிவு (ICU)

மற்றும் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் துரிதகதியில், நியாயமான குறைந்த கட்டணத்தில்.

(CS/30807)(11,17)

மேலதிக விவரங்களுக்கு:-
021 222 4172/ 021 222 8470
136, பலாலி றோட், கந்தர்மடம் ( Damro அருகில்) யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

சாவகச்சேரியில் இயங்கிவரும் மோட்டார்சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றின் உதிரிப்பாகங்கள் மற்றும் ராக்கை, கண்ணாடி சோக்கேஸ் உடன் விற்பனைக்குண்டு. அல்லது அக்கடையின் பொருட்கள் அனைத்துடனும் தொடர்ந்து நடத்துவதற்கு ஒழுங்கு செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: 076 2888 827

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் ஆஸ்திரேலியா ஒபன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் பங்கேற்றுள்ள ரசிகர்களின் ஒரு பகுதியினர் தங்களது ஆரவாரத்தை வெளிப்படுத்தும் காட்சி.



## தைப்பொங்கலை முன்னிட்டு

A4 இரண்டு பக்கங்கள் போட்டோ கொப்பி 2/=
தமிழ் மற்றும் ஆங்கிலம் Typing செய்து கொடுக்கப்படும்.

**LUXON ENTERPRISE**
No 77B, Kandy Road, Jaffna.
T.P.No:0774115335 Fax No: 021 222 5335

## காணி விற்பனைக்கு

புதுக்குடியிருப்பு தேவிபுரம் "அ" பகுதியில் பரந்தன் புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் வலது பக்கமாகச் செல்லும் வீதியில் 5 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு.

071 847 5531, 077 724 2362

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS(Academic and General) , $A_1$ UK Exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

*Guranteed to 7.5 in IELTS Exam
*Pass in $A_1$ Exam
*Exam centre

**Please contact:-** (CS/30773)(11,17)
077 780 3970/ 078 521 1351

# நியூசிலாந்து - இந்தியா 2ஆவது ரி-20 இன்று

நியூசிலாந்து - இந்திய அணிகள் மோதும் இரண்டாவது ரி-20 போட்டி இன்று ஒக்லாந்தில் இடம்பெறவுள்ளது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ரி-20 போட்டி, 3 ஒருநாள் போட்டி, 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட வருகின்றது. இதில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ரி-20 போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. முதல் போட்டியில் சொந்த மண்ணில் ஏற்பட்ட தோல்விக்கு மிகுதி 4 போட்டியிலும் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி பதிலடி கொடுக்கும் முனைப்பில் உள்ளது.

கேப்டன் வில்லியம்சன், முன்னாள் கேப்டன் டெய்லர், காலின் முன்ரோ, குப்தில் ஆகியோர் பேட்டிங்கில் திறமையை வெளிப்படுத்தி இருந்தனர். ஆனால் அந்த அணியின் பந்துவீச்சும், பீல்டிங்கும் ஏமாற்றத்தை அளித்தது. இதனால் அதை சரிசெய்யும் வகையில் ஆடுவார்கள். முதல் போட்டியில் எதிரணி மண்ணில் வெற்றி பெற்ற உற்சாகத்தில் இந்திய அணி களமிறங்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்திய அணியும் துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் சமபலத்துடன் காணப்படுவதால் போட்டி விறுவிறுப்பாகக் காணப்படும்.

இரு அணிகளும் இன்று மோதுவது 13ஆவது போட்டியாகும். இதுவரை நடந்த 12 ஆட்டத்தில் இந்தியா 4 போட்டியிலும், நியூசிலாந்து 8 போட்டியிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## காணி விற்பனைக்கு

தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதிக்கும், அரசடி லேனுக்கும் இடைப்பட்ட 1 (ஒரு பரப்பு) காணி விற்பனைக்கு
தொடர்புக்கு: 077 172 5450

**3.6M Car Permits 24/= Negotiable**
077 931 7178

## காணி விற்பனைக்கு

2 பரப்பு காணியுடன் கூடிய வீடு கோயில் வீதி நல்லூரில் விற்பனைக்கு
தொடர்பு:- 076 864 3961

## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல **Hotel** ஒன்றுக்கு

- உதவி முகாமையாளர் (மும்மொழி அறிவுத் தேர்ச்சி)
- சமையலாளர் - Chef (இந்தியன் சைனீஸ்)
- சமையல் உதவியாளர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (AKN915)(11,17)
077 938 5521

## நல்லூரில் சுற்றுலா விடுதிக்கு வேலையாள்கள் தேவை. (ஆங்கிலம், கணினி அறிவுள்ள)

1) வரவேற்பாளர் - பெண் 2) வரவேற்பாளர் -ஆண்.பெண்
3) House Keeping - பெண்

தூர இருப்பவர்களுக்கு தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு 075 357 4203

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

NALIN Information Technologies (Pvt) Ltd.
Computers of the North


யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு C பிரிவு காட்சிப் பகுதியில்
UNI-T Laser Distance Meter
விசேட விலைக்கழிவில் உத்தரவாதத்துடன்...

கட்டட ஒப்பந்தகாரர்கள், நில அளவையாளர்கள் மிகத் துல்லியமாக அளவெடுக்க
Laser Distance Meter



195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975
No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi.
076 359 7610 | 021 228 5550

உயர்வகை பல் வைத்திய சேவைக்கு... For Quality, Professional Dental Care



INTERNATIONAL DENTAL CARE
INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.

**Jaffna Branch:**
No:84, Stanly Road, (Near Ariyakulam Junction) Jaffna. Srilanka.
**Tel: 021 222 0833, 021 492 3353, 077 003 1547**

**Colombo Branch:**
No:67, W.A.Silva Mw, Wellawatta, Colombo-06, Srilanka.
**Tel: 011 250 7070, 011 438 0803, 077 013 9372**

**Vavuniya Branch:** Raaj Medical Lab,
No:10, Bazaar Street, Vavuniya, Srilanka.
**Tel: 024 222 1577, 024 492 5527, 077 013 9374**

Web: www.internationaldentalsrilanka.com
Email: internationaldentalcare@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.